

கல்கி

KALKI 14-9-80 90 காசு



தாக்கர்ஸி—தலைமுறையினரின் நாகரீக இணைப்புப் பாலம்



Dattaram HM-21 Tam

க்ரோஜேலேஸ்ட் (முன்கூட்டியே சுருக்கப்பட்டது) மற்றும் டெபிலேஸ்ட் (மடிப்பைத் தடுக்கப் பரிசோதனை செய்யப்பட்டது) காட்டன் துணிகள். பாலியெஸ்டர் கலப்பிழை சூட்டிங்குகள், ஷர்ட்டிங்கு கள், ஆடைத் துணிகள் மற்றும் புடைவைகள்.

1873 முதல் உன்னதமான ஜவுளிப் பரம்பரைச் சின்னம்

தாக்கர்ஸி ஃபாப்ரிக்ஸ்

ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்

அருள்வாக்கு

பிள்ளையார் சுழி



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

எதை எழுத ஆரம்பித்தாலும் — அது பெரிய காவியமாகத்தான் இருக்க வேணும் என்றில்லை; ஒரு தபால் கார்டானாலும் சரி, அல்லது கடை சாமான் லிஸ்டானாலும் சரி— முதலிலே பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். எழுதுகிறது மட்டுமில்லை, எந்தக் காரியத்தையுமே ஆரம்பிக்கிறபோது, அது விக்னமில்லாமல் பூர்த்தியாவதற்கு மஹா கணபதியைக் கொண்டு வந்துதான் ஆகணும். அவரை ஸ்மரிக்காமல் எந்தக் காரியமுமே இல்லையானாலும், இந்த எழுத்துக் காரியத்தில் அவரை ஸ்மரிக்கிறோம் என்பது Written proof ஆகவே (எழுத்துமூல நிரூபணமாகவே) பிள்ளையார் சுழியில் தெரிகிறது. பின்னாடி நாம் எழுதுகிற விஷயம் 'சுழித்து'ப் போகாமல் இருப்பதற்காக முன்னாடி பிள்ளையார் சுழி போட்டு விடுகிறோம்! பிள்ளையார் சுழி போடாமல் 'ஓம்' போடுகிறவர்களும் கிரந்தத்திலும் ஸரி, தமிழிலும் ஸரி அந்த ஓமுக்கும் சுழித்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இங்கிலீஷில் om போட்டால் கூட ௦வுக்குச் சுழிக்கத்தான் வேண்டும்! அந்த பிரணவ ஸ்வரூபமும் பிள்ளையார்தானே?

சுழி என்பது வளைசல்; 'வக்ரம்' என்பார்கள். அப்படிப்பட்டது. பிள்ளையாரின் தும்பிக்கை நுனி வளைந்து சுருட்டிக் கொண்டிருக்கும். அதனால் 'வக்ரதுண்டர்' என்றே அவருக்கு ஒரு பேர். வளைசல் அரை குறையாக இல்லாமல் பூரணமாகிவிட்டால் வட்டம். பூலோகமும் ஸரி, பல லோகங்கள் நக்ஷத்திர மண்டலங்கள் அடங்கியுள்ள பிரம்மாண்டமும் ஸரி, வட்டமானவைதான். 'அண்டம்' என்றாலே 'முட்டை' என்றுதான் அர்த்தம். முட்டை வட்ட வடிவம்தானே!

இந்தப் பூர்ண ரூபத்தையே ஸைஃபருக்கும் சொல்வதுதான் ரொம்ப ஆச்சரியம்! 'பரீக்ஷையில் கோழி முட்டை' என்கிறோம்! பூர்ணம், சூன்யம் எல்லாம் பிள்ளையார் என்கிற மஹாதத்வத்தைத்தான் சுழியும் காட்டுகிறது. ஸைஃபராவதை ''என்னடா சுழி!'' என்கிறோம். பூர்ணப் பிள்ளையாருக்கும்— கையிலே மோதகத்தில் தித்திப்புப் பூரணத்தை வைத்துக் கொண்டு தன்னுடைய பூர்ணத்தை Demonstrate பண்ணும் (வெளிப்படக் காட்டும்) பிள்ளையாருக்கும் — சுழி போடுகிறோம். இந்தச் சுழி மற்றச் சுழியையெல்லாம் முழுசாக்கி விடுவது!

வட்டமான வளைசல் கொம்போடு பிள்ளையார் சுழி ஆரம்பித்துக் கொஞ்சம் கூட வளையாத நேர் கோட்டோடு முடிகிறது. பூரணம் சூன்யம் இரண்டுமாவதைப்போலவே வக்ரமானது ஆர்ஜவமானது (நேரானது) எல்லாமும் பிள்ளையார்தான் என்று தாத்பர்யம்.



பிரணவம் என்கிற ஓம்காரம் அ, உ, ம என்ற மூன்று சேர்ந்தது. இதிலே நடு 'உ' தான் அதற்கு ஹ்ருதயம் மாதிரி இருப்பது. அதனால் 'உ' ரூபத்தில் பிள்ளையார் சுழி போடுவது சகலத்துக்கும் ஜீவஸாரமான பிரணவத்துக்கும் ஜீவனாக இருக்கிற மத்ய அக்ஷரத்தைப் போடுவதாகவே ஆகிறது. 'உமா' என்று உ, அ, ம-வாக தேவீப் பிரணவம் வரும்போதும் முதலில் 'உ' தான் வருகிறது. அ—ஸ்ருஷ்டி, உ—ரக்ஷணை, ம—ஸம்ஹாரம்; அம்பாளுக்கு ரக்ஷணைதான் முக்கியம். அதனால், 'உ'வில் அவள் பிரணவம் ஆரம்பிக்கிறது. அம்மாவைப்போலவே பிள்ளை! இல்லை; அவளுக்கும் ஒரு படி மேலே! அவளாவது ரக்ஷணைக்கு அப்புறம் ஸம்ஹாரம், ஸ்ருஷ்டி இதுகளும் வைத்துக் கொண்டிருக்கிறாள். பிள்ளையாரோ ரக்ஷிப்பது தவிர வேறு ஜோலியே வைத்துக்கொள்ளவில்லை!

சக்ராகாரமாக எந்த ஒன்று சுற்றினாலும் அதற்கு மத்தியில் அதற்கு ஆதாரமாக,



முதல் விவசாயி: ஏம்பா வருத்தமா இருக்கே...? அதான் நம்ப கடனை எல்லாம் தள்ளுபடி பண்ணப் போறாங்களாமே?

இரண்டாம் விவசாயி: அதாம்பா வருத்தம்... இது தெரியாம எல்லாப் பணத்தையும் ஒழுங்கா கட்டித் தொலைச்சிட்டேன்.

-பாபநாசம் நாகராஜன்

நேராக ஒன்று இருந்தாக வேண்டும். விஷ்ணு நேராக விரலை நிமிர்த்திக் கொண்டு அதிலே தான் சக்கரத்தைக் கோத்துக் கொண்டு சுற்றுவதாக விக்ரகங்களில் இருக்கும். சுற்றிச் சுற்றிப் பொறிப் பொறியாகக் கொட்டுகிற கார்த்திகை வாணமானாலும் சரி (இது ஒளி), சுற்றிச் சுற்றி டபடபவென்று அடிக்கிற கிரீச் சட்டியானாலும் ஸரி (இது ஒலி) — இதுகளின் வட்டமான சுழலல்களுக்கு ஆதாரமாகக் கையோ குச்சியோ எதுவோ ஒன்று நேர் கோடாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனி வர்ஸில் லோகங்களெல்லாம் ஸர்குலராகத் தான் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்கிற போதும், இவற்றுக்கும் Straightline ஆக ஒரு ஆதார axis (அச்சு) நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் Energy (சக்தி) ரூபத்தில் இருக்கத்தான் வேண்டும். வட்டமாகச் சுற்றுகிற ஸகல பிரபஞ்சங்களையும் அவற்றுக்கு ஆதார சக்தியான கோட்டையும் சேர்த்துத்தான் பிள்ளையார் சுழியில் வட்டமாகவும் நேர் கோட்டு பாகமாகவும் போடுகிறோம்.

எங்கேயோ படித்த ஞாபகம்: Energy உண்டாகிறதே பிள்ளையார் சுழி ரூபத்தில்தான் என்று. தாரை கொட்டி அதிலிருந்து எலக்ட்ரிஸிடி எடுக்கிறபோது, ரொடேஷனிலிருந்து (வட்டத்திலிருந்து) நேர் கோடாகத் தான் மின்சாரம் புறப்படுகிறது என்று ஒருத்தர் காட்டியிருக்கிறார். பிள்ளையார் சுழியின் கொம்புதான் ரொடேஷன்; கோடு அதிலிருந்து சக்தி உத்பவம்.

கொம்பு, கோடு என்று இரண்டு வார்த்தை சொன்னேன். வேடிக்கையாக இரண்டுமே பிள்ளையாரின் தந்தத்துக்குப் பேராயிருக்கின்றன. 'ஏக தந்தர்' என்பதை 'ஒற்றைக் கொம்பன்' என்பார்கள். 'பெரும்பாரக் கோடும்', 'கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே' என்று ஒளவைப் பாட்டி சொல்கிறாள். எப்போதும் குழந்தையாயிருக்கிற ஸ்வாமியையே வேண்டிக் கொண்டே, குழந்தைப் பிராயத்திலேயே கிழவியாகிவிட்ட அவ்வையார் சொன்ன 'கொடுவினை' என்பது தான் தலைச் சுழி. கோடும் கொம்புமான பிள்ளையார் சுழி இதைப் போக்கிக் கொள்ளத்தான். பிரம்ம லிபி, பிராப்த கர்மா என்கிற தலைச் சுழியையும் சுழித்து விடுவது பிள்ளையார் சுழி.

(ஸம்பாஷணையிலிருந்து தொகுப்பு)

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர்: மோனலிஸா; விநாயகரை அலங்கரிக்கும் சிறுவன் ராஜ்குமார்.

முன்பக்கப் புகைப்படம்: என். ராமகிருஷ்ணா



MOD 11 CP-S



ADWAVE VSJ 1427

சென்ற இதழில் திரு பா. ரா. வெளியிட்ட கருத்துக்களுக்கு, தமிழ் நாடு ஜனதாக் கட்சியின் அட்ஹாக் கமிட்டி உறுப்பினர் திருமதி லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்தி இந்த வாரம் பதிலளிக்கிறார்.

ரப்பர் மனசாட்சி

சென்ற இதழில் திரு பா. ரா.வின் பேட்டியைப் படித்தேன். அரசியலில் தனிப்பட்ட நபர் நடவடிக்கை எடுப்பதற்கும், ஒரு கட்சி நடவடிக்கை எடுப்பதற்கும் வித்தியாசம் உண்டு என்று அவர் கூறியிருக்கிறார். நல்லது, காலம் கடந்தாவது இதை அவர் உணர்ந்து கொண்டாரே! தமிழக ஜனதா கூட்டுப் பொறுப்பில் நடைபெறாமல் ஒரு தனி நபரின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப நடத்தப்பட்டு வந்ததே அது நன்கு வளராமல் போனதற்குக் காரணம் என்பதை இப்போதாவது அவர் புரிந்து கொண்டால் சரி.

சர்வாதிகாரத்துக்குத் துணை நிற்பது ஆளும் கட்சி. இதன் முக்கிய லட்சியம் தனி நபர் வழிபாடு. மறுபுறம் ஜனநாயகத்தைக் காப்பதற்காக லோக நாயக் ஜே. பி.போன்ற தன்னலங்கருதாத தலைவர்களால் துவக்கப்பட்ட பின்னர் சிதறுண்ட எதிர்க் கட்சி. தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம். எந்தக் கொள்கைகளுக்காக,லட்சியத்துக்காக மக்கள் முன்பு நின்று வாக்குகளைக் கேட்டோம் என்று மறந்து ஆட்சி புரியும் கட்சிக்குப் போவது சாணக்கியமாக இருக்கலாம்; நாணயமாகாது. குறுகிய அரசியல் நோக்கையே புலப்படுத்துகிறது.

இ. காங்கிரஸில் சேர்ந்தது ஜனநாயக நலனுக்காகவாம். ஜனநாயக நலனுக்காக சர்வாதிகாரக் கட்சிக்குச் செல்வேனென்பது முன்னுக்குப் பின் முரணானது. தாம் எடுத்த முடிவை அவர் எவ்வளவுதான் நியாயப் படுத்திப் பேசினாலும் கட்சி மாறியது மாறியதுதான்.

தமிழக ஜனதா தலைவர் மேல் நம்பிக்கை தீர்மானம் போட்டது அச்சுறுத்திப் போடப்பட்ட தீர்மானம். ஜூன் மாதம் 14ம் தேதி மிக மிக விசேஷ அழைப்பு என்ற பேரிலே அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களை மட்டும் அழைத்து அதிலும் கூச்சல், குழப்பத்தின் மத்தியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது. ஆனால் கோவையிலே ஜூலை மாதத்தில் கூடிய செயற்குழு, ஜனதா கட்சியின் மத்திய தலைமையிடமும் கொள்கைகளிடமும் நம்பிக்கையை உறுதிப்படுத்தித் தீர்மானம் நிறைவேற்றியது. அன்று உடனிருந்து தீர்மானம் நிறைவேற்றியவர்களே இன்று கட்சியை அழிக்க உள்ளேயே இருந்து கொண்டு வேலை செய்வதும் கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு வேறு கட்சிக்குத் தாவுவதும் பதவி துஷ்பிரயோகம் அல்லாமல் வேறு என்ன?

ஜனதாவுக்கு எதிர்காலம் உண்டா இல்லையா என்பது ஒரு தனிநபர் தீர்மானிக்க வேண்டியதல்ல. மக்கள் தீர்மானிக்க வேண்டியது. பதவி மோகத்தாலும் ஆசையாலும் பயத்தாலும் ஒரு தனி நபரின் கீழ் இன்று ஆளும் கட்சியினர் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். அந்நிலைமாறும்போது அந்தக் கூட்டும் துண்டு துண்டாக உடையத்தான் போகிறது.

அரசியல்வாதிகளுக்கு மனசாட்சி இழுத்த இழுப்புக்கு வரும் ரப்பராக இருப்பது இந்தியாவின் துர்ப்பாக்கியம். மனச்சாட்சி என்ற பெயரில் இறந்துபோன பெருந் தலைவர்களை எல்லாம் இவர்கள் தங்களது அரசியல் ஆதாயத்துக்காகச் சந்திக்கு இழுத்து இன்றையச் சூழலில் இப்படித்தான் கூறி இருப்பார்கள் என்று அனுமானிப்பது பெரும் தவறு.




வாஜ்பாய், பெர்னாண்டஸ், அத்வானி, சரண் சிங் ஆகியோர் எல்லாம் ஜனதாவிலிருந்து வெளியேறிச் சென்றாலும் எதிர்க் கட்சியில் தான் —எதேச்சாதிகார சக்திகளை எதிர்க்கும் அணியிலேயேதான் இருக்கிறார்களே ஒழிய சர்வாதிகார சக்தியுடன் இணைந்து விடவில்லை.

'மற்றவர்களுக்கு எந்த அளவுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்ற அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு எனக்கும் இருக்கிறது' என்று கூறுகிறார் பா. ரா. சர்வாதிகார சக்திகளுடன் இவர் இணைந்த பிறகு இப்படிச் சொன்னால் நம்ப முடிகிறதா என்ன?

ஒன்றை மட்டும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்கிறோமென்றால் அதன் விமானத்தைத்தான் மாற்றுகிறோமே ஒழிய விக்ரகத்தை அல்ல. ஜனதாவின் அடிப்படைக் கொள்கைகள் அந்த விக்ரகம் மாதிரி. களைகள் எல்லாம் போன பிறகுதான் ஜனதா என்ற ஜனநாயகப் பயிர் செழித்து வளரப் போகிறது. அதற்கு நீர் ஊற்றிக் காக்க ஆயிரமாயிரம் தொண்டர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பொது வாழ்க்கையின் புனிதத்தோடு அவர்கள் இணைந்து செயலாற்றினால் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக இருக்கும் ஜனதா வலுவான எதிர்க் கட்சியாகவும் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை,

பேட்டி: **சலன்**


காமன்வெல்த் நாடுகளின் டெல்லி மாநாடு
இதென்ன புது ஆபத்து!
ஜோதி பாசு
மாநிலங்களில் கலவரப் பகுதியை அறிவித்து விசேஷ நீதி மன்றங்களை நியமிக்க மத்திய அரசு அதிகாரம் கோருகிறது!

1980 செப்டம்பர் 14
ரௌத்திரி ஆவணி 29
மலர்: 39 இதழ்: 7



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மான்யக் கமிஷனா? மானம் கெட்ட கமிஷனா?

கல்லூரிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகிறோம்; பரீட்சை எழுதுகிறார்கள்; மார்க் வாங்குகிறார்கள்.

இப்போது நாம் பல்கலைக் கழக மான்யக் கமிஷனுக்கு மார்க் போட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இருபத்தி நாலு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகியது பல்கலைக் கழக மான்யக் கமிஷன். இதன் முக்கிய பணி நாடெங்கிலும் உயர் கல்வியின் தரத்தை உயர்த்த உதவுவதுதான். ஆனால் இன்றுவரை மான்யங்கள் வழங்குவது ஒன்றுதான் தன் பணி என்ற ரீதியில் அது இயங்கி வருகிறது. ''பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் நிலவும் கல்வியின் தரத்தை நிர்ணயிக்க கமிஷனிடம் எந்தவிதமான வழி முறையோ அளவுகோலோ கிடையாது'' என்று அதன் தலைவர் சதிஷ்சந்திராவே ஒப்புக் கொண்டிருக்கிறார். இதனால்தானோ என்னவோ, 'பல்கலைக் கழக **கல்வி** கமிஷன் என்ற பெயரே நியாயமானது' என்ற சிபாரிசைக் கூட ஏற்றுக் கொள்ளாமல் அது மான்யக் கமிஷனாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.

சரி, இருந்து விட்டுப் போகட்டும்; வழங்குகிற மான்யங்களையாவது சரியாக வழங்குகிறதா என்றால் அதுதான் இல்லை! ஏகப்பட்ட ஒழுங்கீனங்கள். (ஊழல்கள் என்பதற்குக் கௌரவமான பெயர்!) இதனை பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டியின் அறிக்கை (77–78) தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது. பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி என்பது இந்நாட்டு மன்னர்களின் சார்பில் அரசு சம்பந்தப் பட்ட பல்வேறு செலவினங்களை ஆராய்ந்து தவறுகளை, ஒழுங்கீனங்களைச் சுட்டிக் காட்டவே அமைந்தது. அது சொல்கிறது:

※ தரக்குறைவான பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் ஏராளமாகத் தோன்றுவதைத் தடுத்து நிறுத்த யு. ஜி. ஸி. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மான்யங்களை நிறுத்தி விடும் அதிகாரம் இருந்தும் அதைப் பயன் படுத்தவில்லை.

※ யு. ஜி. ஸியின் மான்யங்கள் பெரும்பாலும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு அல்லாது 53 சதவீதம் வரை கட்டிடங்களுக்கும் மேஜை நாற்காலிகளுக்குமே போகின்றன.

※ 1970 லேயே அன்றிருந்த பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி, யு.ஜி.ஸி. செயலாற்றும் முறையைச் சீராக்க வேண்டும் என்று அரசுக்கு சிபாரிசு செய்தது. அரசு இதையொட்டி கமிட்டிக்குமேல் கமிட்டி போட்டதுதான் மிச்சம், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

※ யு. ஜி. ஸியில் பலர் அங்கம் வகித்தாலும் 1956ல் போடப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி அனைவரும் சகல அதிகாரங்களையும் யு. ஜி. ஸி. தலைவரிடமே ஒப்படைத்து விட்டார்கள். இது ஆரோக்கியமான நிலை அல்ல.

※ டில்லியில் இருக்கும் இரு ஆர்கிடெக்ட் நிறுவனங்கள் ஏழு அல்லது எட்டு மாநிலங்களில் கட்டப்பட வேண்டிய இருநூறு கல்லூரி கட்டிடங்களுக்கு கான்டிராக்டுகளை யு. ஜி. ஸி.யிடம் பெற்றுள்ளன. இதன் மதிப்பு 3.22 கோடி. இப்படி இருநிறுவனங்கள் இருநூறு கட்டிடக் கான்டிராக்ட்களைக் கபளீகரம் செய்தது இந்தப் பேரம் நியாயமாக நடக்கவில்லை என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

※ 73 தொடங்கி 77 வரை யு. ஜி. ஸி. தலைவர் 13 தடவை அயல் நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார். யு. ஜி. ஸி. காரியதரிசி 11 தடவை சென்று வந்திருக்கிறார். ஒரே ஆண்டில் 2 முதல் நாலு தடவை கூடச் சென்று வந்துள்ளனர். இப்படி மக்கள் பணத்தை விரயம் செய்யத் தேவையில்லை.

※ கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தரப்பட்ட மான்யங்கள் பயன்படுத்தப்பட்டனவா, எந்த அளவில் என்பதற்குக் கமிஷன் சரியான கணக்கு வைத்துக் கொள்ளவில்லை. 1977 ஏப்ரல் முதல் தேதியன்று இவ்வாறு கணக்கு வராமல் பாக்கி நிற்கும் தொகை 100 கோடி ரூபாய்! 50,000 இனங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன! தரப்பட்ட மான்யங்களில் செலவாகாமல் பல்கலைக்

கழகங்களிலும் கல்லூரிகளிலும் எவ்வளவு பாக்கி நிற்கிறது என்பது கமிஷனுக்குத் தெரியவில்லை. கொடுக்கப்பட்ட மான்யங்கள் கொடுக்கப்பட்ட இனங்களுக்குத் தான் செலவிடப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள கமிஷன் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

❋ மான்யம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. டில்லி கல்லூரிகளுக்கு மட்டும் தனிச் சலுகைகள் காட்டப்படுகின்றன. சராசரியில் ஒராண்டில் ஒரு கல்லூரிக்கு 17 லட்சம் வீதம் 55 டில்லி கல்லூரிகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது. சில மாநிலங்களில் மான்யத்துக்குத் தகுதி பெற்ற எல்லா கல்லூரி களுக்கும் மான்யம் கிடைக்கிறது. வேறு சில மாநிலங்களில் ஆறில் ஒரு பங்கு கல்லூரிகள் கூடப் பெறுவதில்லை.

❋ காஷ்மீரப் பல்கலைக்கழகம் நூலகம் கட்டுகிறேன் என்று முன் வந்த போது திட்டம் சரியாக ஆராயப்படாமல் மான்யம் வழங்கப்பட்டது. இதன் விளைவு பயங்கரமானது. முதலில் சமர்ப்பித்த எஸ்டிமேட் ஐந்து லட்சம்தான். ஆனால் இது வரை 58·40 லட்சம் செலவாகியும் கட்டிடம் முடியவில்லை! அது இன்னும் 50 லட்சமாவது முழுங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. காஷ்மீரின் குளிரை ஈடு கட்ட கட்டிடத்தின் உட்புறத்தை உஷ்ணப்படுத்த வேண்டுமானால் மேலும் 11 லட்சம் செலவாகும். இவ்வளவு பெரிய கட்டிடத்தில் "நூலகம் வைப்பதானால் குறைந்த பட்சம் 20 லட்சம் புத்தகங்கள் வேண்டும். நாட்டி லுள்ள எந்தத் தொன்மையான பல்கலைக்கழகத்தினிடமும் இந்த அளவுக்குப் புத்தகங்கள் கிடையாது, இனியும் இருக்கப் போவதில்லை.

பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி கண்டுபிடித்துக் கூறியுள்ள ஊழல்களில் சிலவற்றை மட்டுமே இங்கு விவரித்துள்ளோம் — இட நெருக்கடி காரணமாக.

இதையெல்லாம் பார்க்கும்போது மோசடியையே ஒரு விஞ்ஞானமாக்கி அதற்கென்று ஒரு பல்கலைக்கழகம் தோற்றுவித்து அதற்கு யு. ஜி. ஸி. என்று பெயரிட்டதாகத் தோன்றுகிறதல்லவா? அந்த விஞ்ஞானத்தில் அபாரத் தேர்ச்சி பெற்றுள்ளோருக்கு நூற்றுக்கு நூறு மார்க் போட வேண்டியதுதானே!




கோபுலு சிறந்த ஓவியர், கார்டூனிஸ்ட் மட்டுமல்ல, உயர்ந்த நகைச்சுவை எழுத்தாளர் என்றும் நிரூபித்தார் கல்கி நகைச் சுவைச் சிறப்பிதழில்.

அண்மையில் நல்லதொரு நிர்வாகி என்றும் நிரூபித்துள்ளார். ஆட்வேவ் என்ற அவரது விளம்பர நிறுவனம் ஆறு லட்சம் பெறுமானமுள்ள சொந்தக் கட்டிடத்துக்குக் குடி புகுந்துள்ளது. நிறுவனம் தோன்றியே ஆறேழு ஆண்டுகள்தான் ஆகின்றன என்பதை நோக்குமிடத்தில் இது பெரிய சாதனைதான். ''சென்னையில் முதன் முதலாகச் சொந்தக்கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள விளம்பர நிறுவனம் இதுவே'' என்று கூறிய கோபுலு ''நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் விமலாதான்'' என்று மற்றொரு பாகஸ்தரைச் சுட்டிக் காட்டினார்.

விமலாவோ, ''எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் கல்கி விநாயகர்தான்'' என்றார்! ஆட்வேவ் நிறுவனம் தோன்றியதும் ஏற்ற முதல் பணி, கல்கி தீபாவளி மலருக்கு விளம்பர விகித அட்டை தயாரிப்பதுதான். பிள்ளையார் சுழி போட்டு விநாயகப் பெருமானின் திரு உருவத்தைத்தான் முதன் முதலில் வரைந்தார் கோபுலு.

கோபுலு



● ● ●

● அண்மையில் சென்னை வந்திருந்த வாஜ்பாயி வாக்குச் சாதுர்யம் மிக்கவர். நகைச்சுவையாளர். இதோ இரண்டிற்கும் இரு உதாரணங்கள்.

● ''ஆம். கைச் சின்னம்தான். ஆனால் அது இன்று முஷ்டியாகி யுள்ளது!''

● '' 'செயல்படும் அரசு வேண்டும். அதனை இந்திரா காங்கிரஸ்தான் கொடுக்கும்' என்று கூறி வோட்டுக் கேட்டார்கள். ஆனால் இன்று காண்பதென்ன?

''டெலிபோன்கள் சரியாக வேலை செய்யவில்லையே என்றால்,

செய்திகள் வாசிப்பது செம்பியன்

ஃபோன்களை இலாக்கா வுக்கு வாபஸ் பண்ணி விடுங்கள் என்கிறார்கள்.

''ரயில்கள் பஸ்கள் சரியாக இயங்கவில்லையே என்றால் நடந்து போங்கள் உடம்புக்கு நல்லது என்கிறார்கள்.

''சர்க்கரை விலை உயர்கிறதே என்றால் உணவில் சர்க்கரை குறையுங்கள் உடம்புக்கு நல்லது என்கிறார்கள்.

''துணிமணிகளின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது. இதைக் கேட்கப் போனால் என்ன பதில் வரும் என்று நினைத் தாலே பயமாயிருக்கிறது!''

• • •

• ஜனதா கட்சியையும் அரசையும் உடைபடாமல் காக்க ஜனசங்க உறுப்பினர்கள் பொறுமையோடு முயன்ற அளவுக்கு யாருமே செய்யவில்லை. எத்தனையோ அவதூறுகளைச் சுமந்தும் மறு சொல் பேசாது கடைசி வரை அமைதி காத்தனர் ஜனசங்கத் தலைவர்கள்.

ஒரு கட்டத்தில் வாஜ்பாயி பிரதமர் மொரார்ஜி தேசாயிடம் சென்று கூறினார்: ''நாங்களும் பதவி – அதிகாரத்தில் இருப்ப தால் தானே இவ்வளவு பொறுமை! ஜன சங்க உறுப்பினர்கள் அனைவரும் அமைச்ச ரவையிலிருந்து விலகிக் கொள்கிறோம். அப் படியாவது கட்சி உடைபடாமல் காப்பாற் றப் பட்டால் சரி.''

வாஜ்பாயியின் நல்ல நோக்கத்தை மொரார்ஜி உணர்ந்த போதிலும் அதற்கு உடன்பட்டால் அதிகாரத் தாம் இடமளித்த தாகும் என்று கருதி மறுத்து விட்டார்.

இந்தத் தகவலை எனக்குக் கூறியவர் ஜி. கிருஷ்ணமூர்த்தி.

• • •

• ''ராஜினாமா செய்து விடுங்கள்'' என்று சொல்லி அனுப்பினார் பிரதமர், சென்னா ரெட்டியிடம். அவர் டில்லியிலிருந்து ஹைதராபாத்துக்குப் பறந்து வருவதற்குள் ''ராஜினாமா பண்ண வேண்டாம்'' என்று மாற்று உத்தரவு காத்திருந்தது!

தினம் காலை விழித்தெழுந்ததும் ''இன்று நான் முதல் மந்திரியா இல்லையா?'' என்று சென்னா ரெட்டி நினைவுபடுத்திக் கொண்டு பார்க்க வேண்டிய நிலை! சந்தேகத்துக்கு ஒருமுறை டில்லிக்கு ஃபோன் போடவும் நேரலாம்: ''அம்மணி! இன்று நான் முதல் மந்திரியா இல்லையா?''

நீண்ட காலமாக நீடிக்கும் இந்த இழு பறி நிலை இன்னும் எத்தனை நாளோ? தப்பித் தவறி இந்தப் பிரச்னை ஃபைசல் ஆனாலும் அடுத்து இதே போன்று தலைவலி இன்னொரு மாநிலத்தில் சீக்கிரமே உருவாகத்தான் போகிறது.

ஆட்சியில் மட்டுமின்றி கட்சியிலும் சர்வா திகாரப்போக்குள் நீங்கி ஜனநாயக மரபுகள் வலுப்பெற்றாலன்றி எதிர்காலம் சிரிப்பாய்ச் சிரிக்கத்தான் போகிறது.

அங்காடி (மலையாளம்)

அங்காடி என்றால் கடைத்தெரு. ஏராளமான கடைகளும், ஏராளமான பொருள்களும் குவிந்திருக் கும். படத்திலும் ஜெயன், சீமா, ரவிகுமார், சுகு மாரன், அம்பிகா, சுரேகா, நந்திதா போஸ், ஜோஸ், ராகவன், பப்பு.... என்று மாறுவாரியாய்க் குவித் திருக்கிறார்கள்.

ஜனரஞ்சக 'ஏ' படம் முதலாளி தொழிலாளி பிரச்னையோடு ஆரம்பிக்கிறது. நடுவில் பிரச்னை அந்த ரம். சீமா பைக்கில் பறந்து சாகசம் செய்கிறார். டிஸ்கோ டேன்ஸில் உடலை வளைக்கிறார். கனவில் கல ராப் பாடுகிறார்.

டைரக்ஷன் ஐ. வி. சசி

மூன்று ஜோடி நிறைவேறாக் காதல்: தற் கொலைக் காதல், டிராக் மாறும் காதல், ஒருதலைக் காதல்.

டைரக்ஷன் ஐ. வி. சசி

ஒரு காதலி கல்யாணத்துக்கு முன் தன் காதல னிடம் தன்னை இழக்கிறாள். ஒரு மனைவி கணவனை விட்டு மற்றவனை நாடுகிறாள். ஒரு தகப்பன் பணத்துக் காகத் தன் பெண்ணையே அனுப்புகிறான். ஒரு மகன் தன் சிற்றன்னையோடு இழைகின்றான்.

டைரக்ஷன் ஐ. வி. சசி

தனிச் சண்டை, தெருச் சண்டை, கடைசியில் பெரிய நீ ஜிபத்துச் சண்டை, குத்திக் கொலை, தற்கொலை....


டைரக்ஷன் ஐ. வி. சசி

காளியையும் அங்காடியையும் ஒரே சமயத்தில் எடுத்திருக்க வேண்டும். நிறைய பாதிப்பு. பப்பு புரு பிடித்து நம் மனத்தையும் பிடிக்கிறார்.

அங்காடிக்குப்போய் கடைகளைச் சுற்றி விட்டு எதுவும் வாங்காமல் மனசை மட்டும் புகார்ந்துவிட்டு வரலாம்.

டைரக்ஷன் ஐ. வி. சசி. — நளினி சாஸ்திரி





எஸ்.பி.ஸி.ஏ அலுவலகத்தில்....
தம்பி கவலைப்படாதே! எப்படியும் டைகரைக் கண்டு பிடிக்க முயலலாம். ஒரு வேளை அவங்க வேனின் நெம்பர் பிளேட்டை மாற்ற மறந்திருக்கலா மில்லையா?
007 பாலு
கதை: குமரன்
சித்திரம்: வினு
7
எஸ்.பி.ஸி.ஏ. அதிகாரி யோசனைப்படி காவல் துறையின் டிராஃபிக் அண்டு லைசென்சிங் அலுவலகம் வருகிறான் பாலு...
வா, தம்பி! இப்பத்தான் எஸ்.பி.ஸி.ஏ டைரக்டர் ஃபோன் பண்ணினரு. என்ன நெம்பர் அது?
எம்.எஸ்.பி. 3443
பாலுவுக்கு உதவ ரிகார்டுகளை ஆராய் கிறார் அதிகாரி.
எம்.எஸ்.பி 3443... ஃபோர்டுவேன்.. சரியான டப்பா மாடலா இருக்கும் போலிருக்கே!
அதுதான் ஸார்!
சொந்தக்காரன், மோஹிந்தர் மோடி 64, மூன்றாவது மெயின் ரோடு காந்தி நகர்....
ஆ! அவனாகத்தான் இருக்கணும். நான் போயிருந்த பங்களாவுக்குப் பின் பக்கத்துச் சாலை. இரண்டு வீடும் அவனுக்கே சொந்தமாயிருக்கும்!
பாலு விடை பெறும் போது...
தம்பி அங்கே தனியா போகாதே. எஸ்.பி.ஸி.ஏ ஜவான்களைத் துணைக்கு அழைச்சுக்க. இல்லே, கிரைம் பிராஞ்ச் போலீஸ் உதவி கேளு.
ஓகே!


ஒரு எஸ்.பி.ஸி.ஐ ஜவானுடன் வந்து பாலு விசாரிக்க....
என்ன.. எம்.எஸ்.பி. 3443 யா?.. ...அதை ஐயா வித்துப்போட்டு ரொம்ப நாளாச்சே..... இப்ப இருக்கிறது இந்தப் புது 'மாட்டார்' வேன்தான்... எம்.எஸ்.டி 4364 .....
விசாரணை தொடர.....
...போலீஸ் ரிகார்ட் தப்பா இருந்தா நாங்க என்ன செய்ய?.. ஐயாவா?... ஊரில் இல்லே... நாயா? நாங்க ஏன் நாய் பிடிக்கப்போறோம்?.. சினிமா படம் தான் பிடிப்போம். எங்க ஐயா பிலிம் பைனான்ஷியர்.. .....
இதே நேரத்தில், பாதாள அறையில்..
பாலு! பாலு வந்திருக்கான்! மோப்பத்தில் தெரியுது! ஆனா என் குரலைக் காட்ட முடியாமப் பண்ணிட்டாங்களே, படுபாவிங்க!
ஏமாற்றத்துடன் பாலு திரும்ப... பின் பக்கத் தெரு பங்களாவில் இருக்கும் பசவப்பாவுக்கு 'அடியாள்' ஃபோன் செய்கிறான்...
நாயைப் பிடிச்சுவைச்சால் பயல் பயந்துபோய் நம் விவகாரத்தில் தலையிடமாட்டான்னு திட்டம் போட்டீங்க... நிலைமை இப்பத் தலைகீழா மாறிட்டுதே...
டேன்ஜரஸ் ராஸ்கல்!.. பம்பாய்க்கு ஃபோன் போட்டு பாஸிடம் பேசி அவனை கிட்நாப் பண்ணறதா, தீர்த்துக்கட்டறதா கேட்டுப் புடறேன்!
ஆபத்தை உணராத பாலு அன்றிரவு...
பேருதான் காந்திநகர்! என்ன அக்கிரமம் நடக்குது இங்கே!. நானும் திருட்டுத் தனமா புகுந்துதான் டைகரை கண்டு பிடிக்கணும்....
தொடரும்

சென்னையில் வாஜ்பாய்

அண்மையில் சென்னை வந்திருந்த திரு வாஜ்பாய் வெளியிட்ட சில கருத்துக்கள்:

எதிர்காலப் பிரதமர்

என்னை எதிர்காலப் பிரதமர் என்று சிலர் குறிப்பிட்டதை ஆட்சேபிக்கிறேன்; Personality cult என்று சொல்லப்படும் தனி நபர் துதி பாடல் எனக்குப் பிடிக்காதது. நாம் மக்களைப் பற்றி யோசிக்க வேண்டுமே தவிர தனிநபர்களைப் பற்றி அல்ல.

சென்னை விஜயம்

வெளியுறவு அமைச்சரானதிலிருந்து நான் சென்னைக்கே வரவில்லை என்று கூறப்படுவது சரியல்ல. ஸ்ரீலங்கா பயணம் மேற் கொள்ளும்போது சென்னைக்கு வந்தேன்! ஆனால் ஜனதா கட்சி நான் பங்கேற்கும் விதமாகப் பொது நிகழ்ச்சிகளை இங்கு ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை. நாங்களாக ஏற்பாடு செய்தால் கட்சியில் கருத்து பேதம் உண்டாகும் என்பதால் அவ்வாறு ஏற்பாடு செய்துகொள்ளவில்லை.



கலவரங்கள்

வகுப்பு வாதக் கலவரங்கள் தற்போது தான் நிகழ்ந்துள்ளன என்று கூற முடியாது. ஜனதா ஆட்சியின் போது அலிகாரிலும், ஜாம்ஷெட்பூரிலும் நிகழ்ந்தான் செய்தன. இக்கலவரங்களால் பாரத அரசுக்கும் அண்டை நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் தற்போதைய அரசு இந்நிகழ்ச்சிகளுக்கு அண்டை நாடுகளைக் குற்றம் சாட்டுவதன் மூலம் அண்டை நாடுகளின் நல்லுறவை இழந்து விட்டது.

முரதாபாத்தில் நடந்த வகுப்புக் கலவரங்களைச் சரியான சமயத்தில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருக்குமேயானால் தவிர்த்திருக்க முடியும். அரசு தவறிவிட்டது.

இக்குற்றங்களுக்குக் காரணமானவர்களை, கைது செய்ய வேண்டும் என்றில்லாமல் சிறுபான்மை சமூகத்தினரில் குறிப்பிட்ட எண்ணிக்கையினரைக் கைது செய்தால் அதே எண்ணிக்கையில் பெரும்பான்மையினரையும் கைது செய்ய வேண்டும் என்று அரசு செயல்படுகிறது. இது நல்லதல்ல.

மத்திய உள்துறை உதவி அமைச்சர் மக்வானா இந்தக் கலவரங்களுக்கு பாரதீய ஜனதாக் கட்சியும் ஆர். எஸ். எஸ்ஸும்தாம் காரணம் என்று கூறியுள்ளார்.

குற்றங்களை மற்றவர் மேல் சுமத்திக் கொண்டிருப்பதை விட எதிர்க் கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவர்கள் ஒத்துழைப்புடன் நாட்டில் அமைதி நிலவச் செய்யலாம்.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் ருஷ்யா ஆக்கிரமிப்பு செய்ததைக் கண்டிக்காவிட்டால் போகட்டும் ருஷ்யாவுக்கு ஜாலராப் போட வேண்டுமா? ஆப்கானிஸ்தானின் அழைப்பு பேரில்தான் ருஷ்யத் துருப்புக்கள் அங்கு சென்றுள்ளன என்றும், ஆப்கானிஸ்தானுக்குத் தேவை இல்லை என்ற அடுத்த கணம் இத்துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் என்று ரஷ்ய அரசு உறுதியளித்துள்ளதாகவும் நமது பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சபையில் பேசியது பெருத்த அபகீர்த்தியை உலக நாடுகளிடையே நமக்குப் பெற்றுத் தந்துள்ளது.

விலைவாசி உயர்வு

விலைவாசிகள் விரைவில் இறங்கிவிடும் என்று நிதி அமைச்சர் கூறியிருப்பதை என்னால் ஏற்க முடியவில்லை. ஜனதாவின் 27 மாத ஆட்சி காலத்தில் விலைவாசிகள் 27 புள்ளிகள் உயர்வையே காண்பித்தன. ஆனால் தற்போதைய அரசு பதவி ஏற்று ஆறே மாதக் காலத்தில் விலைவாசிகள் 34.8 புள்ளி விலை ஏற்றத்தைக் காண்பித்துள்ளன. இந்நிலை மேலும் மோசமாகும்!

அஸ்ஸாம் கிளர்ச்சி

அஸ்ஸாம் கிளர்ச்சி எந்த மொழிவாரி பிரிவினருக்கும் எதிரானது அல்ல. அயல் நாட்டினருக்கு எதிராக மக்கள் தாங்களாகக் கிளர்ந்தெழுந்து செய்யும் ஒரு சாத்வீகப் போராட்டம் அது! நிலைமை இப்படி இருக்க பிரதமரும் உள்துறை அமைச்சரும் இப் போராட்டத்தில் 'வெளிநாட்டினர் கை' 'ஆர் எஸ். எஸ். கை' இருக்கிறது என்று குற்றம் சாட்டுகின்றனர். நமக்குத் தெரிந்து இருப்பது காங்கிரஸ் (இ) கைதான்!

மோஷி தயான் விஜயம்

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் மோஷி தயான் இந்தியாவுக்கு விஜயம் செய்தது ஏன் மறைக்கப்பட்டது என்று கேட்கப்படுகிறது. அவர் இவ்விஜயத்தை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததால் அம்மாதிரி ரகசியம் காக்கப்பட்டது. இது ஒன்றும் புதிதே அல்ல. கடந்த 33 ஆண்டுகளாக இம்மாதிரி எத்தனையோ ரகசிய விஜயங்கள்.

பாரதீய ஜனதா - ஆர். எஸ். எஸ். உறவு

பாரதீய ஜனதாவுக்கும் ஆர். எஸ். எஸ்ஸுக்கும் எவ்வித உறவும் கிடையாது. ஆனால் ஒரு மனிதனின் வாழ்க்கையில் அரசியல் என்பது ஒரு பகுதிதான். ஒருவர் சமூக கலாசாரத் தொடர்பு கொள்வதை அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சி தடுக்க முடியாது!

- நாயகன்









✖ எம். எல். வசந்தகுமாரி

✖ கே. என். தண்டாயுதபாணி பிள்ளை

✖ ஏ. பி. நாகராஜன்

✖ ஜெய்சங்கர்

சிந்தனைச் சிதறல்கள்

- ஸ்ரீவித்யா

"இந்தப் படத்திலும் டான்ஸ் தானா?"



என் தந்தை, தாய், தாத்தா மூவருக்குமே நான் பாடகியாக வரவேண்டும் என்றுதான் விருப்பம். நடிப்பதில் உள்ள கஷ்டங்கள் என் தந்தைக்குத் தெரியும். அவரும் ஒரு காலத்தில் நடிகராக இருந்தவர்தான். ''இவள் எங்கே பொறுமையாக விளக்குக்கு முன்னால் நின்று பல தடவை ஒரே காட்சியை நடிக்கப் போகிறாள்? பாடட்டும், படிக்கட்டும் அது போதும்'' என்பார்.

இப்படி யாருக்குமே நான் நடிகையாவதில் விருப்பமில்லை எனினும் என்னைப் பொறுத்தவரை நான் நடிகையாவேன் என்றே ஆசைப்பட்டேன். நடன அரங்கேற்றம் நடந்தது. தமிழகத்தின் தலைசிறந்த வித்துவான்கள் வந்திருந்தார்கள். கச்சேரி முடிந்தவுடன் ஆலத்தூர் சுப்பையரிடம் என்னை என் குருநாதர் தண்டாயுதபாணி பிள்ளை அழைத்துச் சென்று நான் ஆடின ஜதிகளையெல்லாம் சொல்லிக் காட்டும்படி செய்தார். விஷயம் தெரிந்துதான் ஆடுகிறாள் என்று மற்றவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொல்லச் செய்தேன் என்று பின்னால் எனக்கு விளக்கம் தந்தார்.

அன்று அவரிடம் நான் சபாஷ் வாங்கினேன். அதன் பின் நான் அவரின் பிரதம சிஷ்யை. அவரிடம் புதிய மாணவிகள் யார் வந்தாலும் நான்தான் முதல் வகுப்பு எடுப்பது வழக்கமாகிவிட்டது. மஞ்சுளா, லதா, ஆகியவருக்கெல்லாம் நான்தான் முதல் நாட்டிய வகுப்பு எடுத்தேன். நான்தான் இவர்களுக்கெல்லாம் சலங்கையும் கட்டினேன்.

அரங்கேற்றம் முடிந்த கையோடு நான் செய்த பரதநாட்டிய நிகழ்ச்சிகள் ஏராளம்.

டெல்லி, பம்பாய் என்று பல இடங்களில் நடந்தன. எட்டாவது வகுப்புப் படிக்க ஆரம்பித்தபோது 'இனி நடன நிகழ்ச்சிகள் அவ்வளவாக வேண்டாம். படிப்பில் கவனம் செலுத்தினால் போதும்' என்று எல்லோரும் முடிவு செய்தார்கள்.

வீட்டை விற்றுவிட்டு வேறு ஒரு பெரிய வீடு பார்க்க விரும்பினோம். அதை பத்மினியிடம் சொல்லி என் தாயார் ஏற்பாடு செய்யச் சொன்னார். என் தாயாரும் பத்மினியும் ரொம்ப சிநேகம். எந்தக் காரியமானாலும் ஒருவரை யொருவர் கலந்தாலோசிக்காமல் இருக்க மாட்டார்கள்.

ஒரு நாள் பப்பி அம்மா (பத்மினி அவர்களை நாங்கள் அப்படித்தான் கூப்பிடுவோம்) வந்து ''ஏ. பி. நாகராஜன் ஒரு நல்ல வீடாக வேண்டுமென்று கேட்டிருந்தார். அவரை அழைத்து வருகிறேன். பிடித்தால் முடித்து விடுவோம்'' என்றார். ஏ. பி. என். வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது நான் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்த்து யாரென்று கேட்க ''என்னுடைய பெண்தான்'' என்று அம்மா கூற ''இவதான் டான்ஸ் ஆடுகிறாளா? ஏம்மா, நீ சினிமாவில் நடிக்கிறாயா?'' என்று அவர் கேட்டார். நான் 'ஓ' என்று தலையாட்டி விட்டுச் சென்றேன்.

ஸ்ரீகாந்தின் நெருங்கிய உறவினரான என் மாமா இதைக் கேட்டுக் குதிக்க ஆரம்பித்து விட்டார். ''யாரைக் கேட்டு இவள் 'ஓ' என்று சொன்னாள்?'' என்று இரைந்தார். ஆனால் நான் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. இதற்குள் பப்பி அம்மா என் தாய் தந்தையரிடம் பேசிச் சமாளித்து விட்டார். சம்மதிக்கவும் வைத்துவிட்டார். மாலை பள்ளியிலிருந்து திரும்பியதும் என்னைப் பார்த்து பப்பி அம்மா ''போகலாமா?'' என்றார். ''எதுக்கு?'' என்றேன். ''உனக்கு டெஸ்ட் எடுக்கப் போறோம்'' என்றதும் எனக்குக் கை கால் எல்லாம் நடுங்க ஆரம்பித்தது. ''எனக்கு நடிக்கவே தெரியாதே!'' என்றேன். ''எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன், நீ வா'' என்றார். ''திருவருட் செல்வர்'' படம் எடுத்துக் கொண்டிருந்தார் ஏ. பி. என். நான் சென்றவுடன் என் தாயாரைப் பாடச் சொல்லி என்னை வாயசைக்கச் சொன்னார். ஓ.கே.தான். ஆனால் ''இந்தப் படத்தில் ஸ்ரீவித்யாவுக்கு வேலை இல்லை. என்றாலும் அவள் மனம் நோகாமல் இருக்க ஒரு நாட்டியம் கொடுக்கிறேன்'' என்றார். எனக்கு ஏமாற்றம்தான்.

பப்பி அம்மா, ''இதெல்லாம் சகஜம். நான் நடிக்க ஆரம்பிக்கு முன் 300 படங்கள் டான்ஸ் மட்டுமே ஆடியிருக்கிறேன்'' என்று கூறி என்னைத் தேற்றினார். ''எப்பவுமே நமக்குக் கிடைப்பதைக் கொண்டு நாம் நிறைவு பெற வேண்டும். அந்த வாய்ப்பை நாம் மேலும் உயர்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது தான் சாமர்த்தியம். ஆரம்பத்தில் நூறு ரூபாய் கிடைத்தாலும் ஓ.கேன்னு சொல்லணும்'' என்று அறிவுரை கூறினார் பத்மினி. நானும் அவர் சொன்னதை அப்படியே கேட்டு நடந்து கொண்டேன். திருவருட் செல்வரில் என் படப்பிடிப்பின் முதல் நாள். நான் நடனமாடும்போது சிவாஜி கணேசன் வந்து பார்ப்பது போல் ஒரு காட்சி. எப்படிச் செய்ய வேண்டும் என்று பரிவோடு சொல்லித் தந்தார் சிவாஜி.

நான் அடுத்துத் தோன்றிய படம் ''நீலகிரி எக்ஸ்பிரஸ்''. இதில் ஜெய்சங்கருடன் சோவும் நடித்தார். அவர் நாடகங்களைப் பார்த்திருந்த காரணத்தினால் அவர் மீது எனக்கு அலாதி மதிப்பு. அந்தப் படத்தில் எம். பானுமதியுடன் சேர்ந்து நடனமாடினேன். திருவருட்செல்வர் நடன மாஸ்டர்தான் இந்தப் படத்துக்கும் நடன ஆசிரியராக இருந்தார். திருவருட் செல்வரில் ஆடியதைப் பார்த்து எல்லோரும் நன்றாக இருப்பதாகச் சொல்லவே இந்தப் படத்திலும் ஒரு டான்ஸ் காட்சி வர என் பெயரைக் கூறியிருக்கிறார். என்னிடம் விஷயத்தைச் சொன்னவுடன், ''என்ன மாஸ்டர், இந்தப் படத்திலும் டான்ஸ்தானா'' என்று கேட்டேன். ''நீ ஏத்துக்கம்மா. பத்மினி அம்மாதான் சொல்லியிருக்கிறார்களே! உன் டான்ஸ் எல்லாருக்கும் பிடித்திருக்கிறது. குறிப்பா உன் கண்ணைப் பற்றி எல்லாரும் சொல்றாங்க. டான்ஸ் செய்வதில் ஒன்றும் தப்பில்லை'' என்று கூறினார். திரும்பவும் அம்மா அப்பாவிடம் பர்மிஷன் வாங்க மூன்று நாள் இழுத்தடித்தது. ஏ. எல். எஸ். அவர்களுக்கு என் தந்தையைத் தெரியும். தொலை பேசியில் அழைத்து ''என் படத்தில் நடித்தால் என்ன?'' என்று கேட்க அப்பா ஒப்புக் கொண்டார். ஜெய்சங்கர் அவ்வப்போது உற்சாகப்படுத்துவார். அவருக்கு டான்ஸ் பற்றி ஒன்றும் தெரியாவிட்டாலும் செட்டில் கலகலப்பாகப் பேசி வீட்டில் இருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துவார். அந்தச் சமயத்தில் நான் ஜெயசங்கருடைய விசிறி. ஜேம்ஸ் பாண்ட் பாணி படங்கள் வந்த புதிது. எப்படியாவது அவரிடம் கையெழுத்து வாங்க வேண்டும் என்று தினம் நினைப்பேன். செட்டில் டான்ஸ் மூவ்மெண்ட் என்றதும் கையெழுத்தை மறந்து விடுவேன்.

அடுத்து நான் வசனங்களுடன் பேசி நடித்த படம் — மூன்றெழுத்து.

பேட்டி: **சலன்**



டைரக்டர்: ''என்னப்பா உன் பாம்பு சொல்லிக் கொடுத்தபடி நடிக்காமல் சும்மா உஸ் உஸ்னுக்கிட்டு இருக்கு...?''

பிடாரன்: ''ஒண்ணுமில்லே ஸார்! நீங்க எனக்குக் கொடுத்த அற்பரேட்டை நினைச்சுப் பெருமூச்சு விடுது... அவ்வளவுதான்!''

– உ. ராஜாஜி


தாவண்கெரே
நவநாகரிகத் துணிமணிகள்
HILITE
MYSORE BEAUTY
Pushpanjali
Lavanya
DAVARIN
DAVANLITE
Vishwaraj
MONSIEUR
Madhuban
EMERALD
தி தாவண்கரே காட்டன் மில்ஸ் லிமிடெட், தாவண்கரே-577 002.
ஷோரூம்: காவேரி பவன், பெங்களூர் 560 009.
சித்ரதுர்கா ரோடு, தாவண்கரே-577 002.

அத்தியாயம் 7

மௌனமாக நின்ற அர்ஜுனனிடம், ''போகலாமா.... மணி மூணே முக்கால் ஆகப் போறது'' என்றாள் மல்லிகா.

''எங்கே துணிகளெல்லாம்?''

''காருக்குப் போய்விட்டது.''

காரில் உட்கார்ந்ததும் அவன் ஸ்டார்ட் செய்யவில்லை.

''மல்லிகா...''

''என்ன?''

''ஒரு விஷயம். கவனமாக் கேளு.''

''நானும் ஒண்ணு கேட்க நினைச்சேன். நீங்க முந்திக் கொண்டு விட்டீங்க. சொல்லுங்கள்.''

''நீ என்ன நினைச்சே?''

''நீங்க சொல்லுங்க முதலில்.''

''இல்லே மல்லிகா... நீ உன் மனசில் என்ன நினைச்சேன்னு தெரிஞ்சா எனக்குப் பேச எளிதா இருக்கும்.''

''எனக்கு ஏன் நீங்க இவ்வளவு புடவைகளும் துணிகளும் வாங்கித் தரணும்?... ஏன் அக்கறை காட்டணும்?''

''பதில் சொல்றதுக்கு முன்னாலே ஒரு உறுதிமொழி கொடுக்கிறேன், மல்லிகா.''

''என்ன?''

''உன்னோட இந்த நாதியற்ற நிலையை எனக்குச் சாதகமாப் பயன்படுத்திக்கணும்ங்கிற எண்ணத்தில் நான் செய்யவில்லே...''

''ஏன் நிறுத்திட்டீங்க.''

''நான் என்னுடைய இருபத்தெட்டு வயசில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். பலரோடு பேசியிருக்கிறேன். சிலரோடு பழகியும் இருக்கிறேன்... ஆனா ஒருத்தி கூட இதைத் தொட்டதில்லே....'' அர்ஜுனன் குரல் மெல்லிய கீதமாக ஒலித்தது. அவன் தன் மார்பைச் சுட்டிக் காட்டினான்.

அவள் மௌனத்தில் புடவை நுனியைப் பிசைந்து பிசைந்து ஒரு முடியும் போட்டாள்.

''என்னை நீ ஒரேயடியாய்த் தாக்கிவிட்டாய் மல்லிகா... ஆனா ஒண்ணு சொல்றேன். என் நடத்தையில் எறும்பின் வாய் அளவு சந்தேகம் வந்தால்கூட நீ போயிடலாம்... என்னு ஒரு பெண் பூமாதிரி. அதைத் தொட்டுப் பார்க்கிறதோ, முகர்ந்து பார்க்கிறதோ அல்லது... அல்லது....''

''கசக்கிப் பார்க்கிறதோ!'' என்று முடித்தாள் மல்லிகா.

''யெஸ்... அது தப்பு. பஞ்சமா பாதகம். ஏன்னா பூ பழைய நிலைக்கு வராது....''

மல்லிகா நெகிழ்ந்து போனாள். அந்த நெகிழ்ச்சியில், அவள், ''நான் உங்களை ஒரு நல்ல மனிதன்னு நம்பறேன் அர்ஜுனன்!'' என்றாள்.

''நல்ல மனிதன் கூட, சூழ்நிலை காரணமா, உணர்ச்சிகளின் உத்வேகம் காரணமா சில சமயங்களிலே மிருகமா மாறிடுவான் மல்லிகா.''

''ஆனா நீங்க அந்த உத்வேகத்துக்கு அடிமையாக மாட்டீங்கன்னு நம்பிக்கை எனக்கு இருக்கு.''

''கடையிலே என்னை அறியாம என்னையும் மீறி ஒரு அவசரத்திலே உன் மணிக்கட்டை...''

''அந்த இடம்....''

''அந்த இடம்?''

''அந்த இடம்...'' மல்லிகா சிரித்தாள்.

''சொல்லு... வலிச்சுதா?''

மல்லிகா தலை குனிந்தாள்.

முணு முணுத்தாள்.

அவன் காதுக்கு மட்டுமே அவளுடைய வார்த்தைகள் கேட்டன.

''அந்த இடம் கன்னமா இல்லையேன்னு அப்புறம் தோணிச்சு.. அப்படித் தோண்றது தப்பா அர்ஜுன்?''

கார் புறப்பட்டது.

அர்ஜுனனின் கண் கனக்க, கனம் தாளாமல் இரு முத்துக்களைக் கன்னங்களில் ஓட விட்டன.

• • •

மோகன் தன்னை ஏமாற்றித் தலைமறைவாகப் போய்விட்ட இந்த நான்கு ஆண்டுகளில் அம்மணி வேறு எவனையும் நினைத்துப் பார்த்ததில்லை. அம்மாவின் அனுபவம் அவளுக்கு ஓர் எச்சரிக்கை. கழுத்தில் தாலி ஏறித்





தொங்குவதற்குள் தொட்டிலில் ஒரு குழந்தையைத் தூங்கத் தாலாட்டுப் பாடியவள் அவளுடைய அம்மா. அவள் எந்த விஷயத்தில் அம்மாவைப் பின்பற்றினாலும் இந்த ஆடவர் நட்பில் நிச்சயமாகப் பின்பற்ற மாட்டாள்.

ஜானி தாமஸ் நல்ல பெண்தான். ஆனால் அந்த நல்லதனம் அவளுக்கு மட்டுமே. அவள் யார் யாருடன் சினிமாவுக்குப் போகிறாள், சிற்சில சமயங்களில் யார் யாருடன் சிற்சில மணி நேரங்கள் தங்குகிறாள் என்று அம்மணிக்குத் தெரியும். அவளுக்குத் தெரியும் என்பதை ஜானியும் அறிவாள். வெற்றிலை பாக்குப் பழக்கம் போல ஜானி ஒரு பழக்கத்துக்கு பலவீனத்துக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டு, பலவீனமே ஒரு சக்தியாக வளர்ந்து அவளை நாளடைவில் விழுங்கி விட்டது. தன்னுடைய ரகசிய வாழ்க்கையின் இன்ப துன்பங்கள், ஆனந்த அவலங்கள் எல்லாம் அவளுக்கு மட்டுமே தெரியும். அம்மணி எல்லாவற்றையும் அறியவில்லைதான். ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறாள்.

நர்சுகளின் விடுதியை விட்டு வெளியேறி நடக்கும்போது மோகனை நினைத்த மனம் ஜானியிடமும் சென்றது. ஜானியின் அந்தரங்க ஆசை ஒருவனுக்கு மனைவியாக வேண்டுமென்பதுதான். ஆனால் அவள் தன் ஆசை இந்த ஜன்மத்துக்கு, அவளுடைய அட்டைக்கரி நிறம் இருக்கிறவரை நிறைவேறாது என்று நினைக்கிறாள். அன்று காலை 'அர் ஜானைக் கொக்கி போட்டு இழு' என்று முட்டாள்தனமாக உபதேசம் செய்தாளே ஏன்? அப்படிப்பட்ட ஒரு வழி மூலம் ஒரு கணவனைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையா? அது தான் ஒரு வழி என்றால் ஏன் ஜானி இத்தனை அனுபவங்களுக்குப் பிறகும் ஒருவனையும் கணவனாகப் பெற முடியவில்லை?

வண்டிகளுக்காகக் காத்திருந்துவிட்டு எதிர் திசை பிளாட்பாரத்தை அடைந்தபோது, ஆப்பிரிக்காக் கண்டம் நினைவுக்கு வந்தது. நைஜீரியா, ஸாம்பியா, கென்யா...அங்கே ஜானி பால் வெள்ளை. உடனே கலியாணமாகுமே?

புரோ நோட் வேண்டாம்!

நண்பர் ஒருவருக்கு பெஞ்சமின் பிராங்லின் தவிர்க்க முடியாமல் ஐந்து டாலர் கடன் கொடுக்க நேரிட்டது. கடனை வாங்கிக் கொண்ட நண்பர் புரோ நோட் எழுதப் பேனாவைத் திறந்தார். பெஞ்சமின் பிராங்லின் அவரிடம், "பரவாயில்லை. பணத்தை நான் வீணடிப்பது போதும்; புரோ நோட்டிற்கான காகிதத்தையும் வீணாக்க விரும்பவில்லை" என்றார்!

தகவல்: "சங்கரிபுத்திரன்"



அம்மணிக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஜானி ஒரு பாவப்பட்ட ஜன்மம். தான் செய்வதெல்லாம் தவறு என்று உண்மையாகப் புலம்புகிறவள். ஞாயிறுகளில் கர்த்தரிடம் மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறவள். அரண்மனைக்காரத் தெரு ஆலயத்தில் மெழுகுவர்த்தி ஏற்றுகிறவள். செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் அவள், அந்தக் கோவிலுக்குச் செல்லும் காரணத்தால் தப்பே செய்ய மாட்டாள்.

அம்மணி நடந்தாள். நேரே வார்டுக்குப் போனாள்.

ஒரே ஒரு நர்ஸ் — ஜெயமணி மட்டுமே இருந்தாள். நோயாளிகள் ஹால் முழுதும் வழிந்து கிடந்தார்கள். ரிஸர்வ் செய்யப்படாத ரயில் பெட்டிக்கும் அந்த வார்டுக்கும் வித்தியாசமே இல்லை. இருபத்திரண்டு கட்டில்கள். முப்பத்து நாலு நோயாளிகள். இதுமாதிரிதான் ஒவ்வொரு வார்டிலும். ஆனால் என்ன செய்ய முடியும்? கட்டில் வசதி அளிக்க முடியாவிட்டாலும் வைத்திய வசதியாவது கொடுக்கலாமே? குப்பங்களிலும் குடிசைகளிலும் உபாதை தாளாமல் தவிக்கும் மக்கள் எல்லோருமே கட்டில்களில் சாய்ந்து தான் வைத்திய வசதி பெற வேண்டும் என்றால் சென்னையில் ஒவ்வொரு பேட்டைக்கும் ஒரு ஜி. எச். வேண்டும்! ஆனால் எப்படிச் சாத்தியம்! அரசு எவ்வளவுதான் கடனில் வீங்க முடியும்?

நோயாளிகளைப் பார்த்தாள்.

ஏழெட்டுப் பேர்கள் கண் மூடியபடி கிடந்தார்கள். ஒருவன் — மயில்சாமி இரண்டு நாள் முன்பே குதிரை வண்டியில் போயிருக்க வேண்டிய கேஸ். 'இன்றோ நாளையோ' என்று இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறான். அவள் பார்த்த ஏழெட்டுப் பேர்களில் ஒருவன்கூடத் தானாக நடந்து வெளியேறப்போவதில்லை.

அம்மணிக்கு அவர்கள் மீது பொங்கிவந்த இரக்கத்தில் ஆத்திரம்தான் வெளிவந்தது. 'உடம்புக்கு வந்ததும்' டாக்டரைப் பார்க்காமல், கை வைத்தியம், முரட்டு வைத்தியமெல்லாம் பார்த்துவிட்டு, யார் யாரோ உறுதியளித்துச் சொன்ன சூரணங்களையெல்லாம் முழுங்கிவிட்டுக் கடைசியில் ஜி.எச். கதி என்று வருகிறார்கள். ஜி.எச். என்ன மகா விஷ்ணுவா, கஜேந்திரனைக் காப்பாற்றியது போலக் காப்பாற்ற?

திடீரென்று சுவரோரக் கட்டில் அவள் முகத்தில் அறைந்தது. படுக்கையைச் சுருட்டி வராந்தாவில் போட்டிருந்தார்கள்.

கட்டிலை ஜெயமணியிடம் கட்டிக் காட்டி, "எப்போ?" என்று கேட்டாள்.

"பன்னிரண்டரை."

"பாவம், அநாதையாய்ப் போயிட்டார். டாக்டர் பார்க்கலையா?"

"உன் நல்லசிவம் கடைசிவரையில் அவர் பக்கத்தில்தான் இருந்தார். ஆனால் டாக்டர்களையும் மீறிய சக்தி இருக்கே. அது பெரிய சாமியை இழுத்துட்டுப் போயிடுத்து..."

"அந்தக் கட்டில் ராசியில்லாத கட்டில்."

"ஸ்டுபிட் ஸெண்டிமெண்ட்" என்றாள் ஜெயமணி. பிறகு தொடர்ந்து, "ஒரு ஆச்சரியம்!" என்றாள்.

காதலி: நிஜத்தைச் சொல்லுங்கள் இந்த வெயிலில் உங்களுக்கு ஒரு கப் ஐஸ்கிரீம் வேண்டுமா அல்லது என் காதல் வேண்டுமா?

காதலன்: நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஐஸ்கிரீம் வேண்டும்!

— பிரியா பானு



''என்ன?''

''பெரியசாமி உயிர் போறதுக்குப் பத்து நிமிஷம் முன்னாலே கண்ணைத் திறந்து பார்த்தார். டாக்டரிடம் பேசினார். ஒரு சின்னப் பொட்டணத்தை டாக்டரிடம் ஒப்படைத்தார்.''

''பாடி?''

''இப்ப ஐஸ்லே கிடக்கு. இன்னும் பத்து நாளுக்காவது அங்கேயே இருக்கும். மனுஷன் கண் தானம் செய்திருக்கிறார். அதை எடுத்தாச்சு. இப்ப ஸ்டுடன்ஸுக்காகப் பெரியசாமி காத்திருக்கிறார்...''

'என்ன பொட்டணம்' என்று கேட்க அம்மணி நினைத்தாள். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. இந்தப் பெரியசாமி இருபது நாட்களுக்கு முன் ஒரு நாள் காலையில் வந்தார். நாற்பது வயதில் ஐம்பது வயதுக் கிழம். கண்கள் ஒரு சிரமத்துடன் ஒளி வீசினாலும் தளர்ந்துபோன உடல் கட்டிலில் சாய்ந்து விட்டது.

வார்டு டாக்டர் பரிசோதனை செய்து விட்டுப் போனார். அம்மணிக்கு ஏனோ திருப்தி ஏற்படவில்லை. சோதனை செய்த டாக்டருக்கு இளம் வயது. அவர் குழம்பிப் போயிருக்கிறார் என்பதை அவர் முகமே சொல்லியது. ஆனால் அவர் ஏன் இன்னொரு டாக்டரிடம் — அல்லது பெரிய டாக்டரிடம் விஷயத்தைச் சொல்லித் தெளிவு காண முற்படவில்லை? தம் தொழில் திறமையில் அவருக்கு நம்பிக்கை இருப்பதில் தவறு இல்லை தான். ஆனால் அது அசைகிறபோது, நோயாளிக்காக, நோயாளியின் உயிருக்காக அவர் ஆவன செய்ய வேண்டாமா?

டாக்டர் நல்லசிவம் பெரியசாமியைப் பார்த்தால் என்ன? இந்த டாக்டர் சொல்லி நல்லசிவம் வருவதுதான் முறை. ஆனால் முறைகளைப் பார்க்க அது நேரமில்லை. அவள் ஓடினாள்.

டாக்டர் நல்லசிவம் அம்மணி அழைக்கிறாளே என்று உடனடியாக வந்தார். பார்த்தார். ரத்தம், மூத்திரம், மலம் எல்லாம் சோதனைக் கூடங்களுக்கு விரைந்தன. தம்பால் ஒரு நர்ஸ் தனி அக்கறை எடுத்துக் கொள்ளுவதாகப் பெரியசாமிக்குத் தோன்றியிருக்க வேண்டும். மனிதாபிமானத்துக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியவர்கள் நர்ஸ்கள். ஆனால் நடைமுறையில் எத்தனை பேர்களால் அப்படி இருக்க முடியும்? 'சள்' 'சள்' என்று விழுகிற நர்சுகளை அவர் இதே ஜி. எச்.சில் பார்த்திருக்கிறார். ஆனால் அவருக்கு அவர்கள் மீது கோபதாபம் ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு ஜீவனுக்கும் ஏதாவது ஒரு பிரச்னை இருக்கும். அப்பிரச்னையிலேயே மனம் மூழ்கியிருக்கும். அதனால் விளையக்கூடிய தோல்விகளும் ஏமாற்றங்களும் வடிகால் தேடி அலையும். ஒரு நர்ஸின் ஏமாற்றங்கள், தோல்விகள் எந்த வடிகாலைத் தேட முடியும்?

நோயாளிதான் கிடைக்கிறார்கள்.

ஆனால் இங்கே ஒரு நர்ஸ் தனி அக்கறை காட்டுகிறாள். பெரியசாமி மனம் நெகிழ்ந்து போனார்.

ஒரு வாரம் சென்றது.

பெரியசாமியின் நிலையில் மாறுதல் இல்லை. ஆனால் அம்மணியின் சிசுருஷை ஒரு புதுத் தெம்பை அளித்தது.

ஒரு நாள் மாலை ஐந்து மணி.

மற்ற நோயாளிகளைப் பார்க்க நண்பர்களும் உறவினர்களும் வந்து சூழ்ந்து கொண்டு விட்டார்கள். சிணுங்கல், அழுகை, எரிச்சல், சிரிப்பு எல்லாம் ஹால் முழுதும் எதிரொலிக்கும் வேளை.

பெரியசாமி கவரோரக் கட்டிலில் அந்தக் கூட்டத்திலும் தனியாக இருந்தார்.

சிறு மேஜை முன்னால் உட்கார்ந்து பதிவேட்டுப் புத்தகத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த அம்மணி எழுந்தாள். நடந்து அவர் அருகேவந்தாள்.

''ஏதாலும் வேணுமா பெரியசாமி?''

''ஒண்ணும் வேண்டாம் சிஸ்டர்.''

''கேக்கறேன்னு என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க. இந்த ஒரு வாரமா நானும் பார்க்கிறேன். இதுவரையில் யாருமே உங்களைப் பார்க்க வரவில்லை. ஏன்? வெளியூர்னுக்கூட யாராவது ஒருத்தர் ஒரு தடவையாவது வந்திருக்க வேண்டுமே?''

பெரியசாமி புன்முறுவலித்தார்.

''யாரும் வரமாட்டாங்க ஸிஸ்டர்.''

''ஸாரி.''

''பெண்டாட்டி சரியில்லை. குழந்தை பொறக்கிறதும் பொறக்காததும் ஆண்டவன் கையில் இருக்குன்னு நம்பறவன் நான்... ஆனா அவ வேறு விதமா நினைச்சா.. அந்த வருஷமா அவ எங்கிட்ட இல்லை.''

''ஸாரி.''

''ஆனா நன்னா இருக்கா. சௌக்கியமா இருக்கா.... மூணு வயசிலே ஒரு ஆண் குழந்தை இருக்கு. அப்பன்காரன் வாங்கிக் கொடுத்த மோட்டார்காரை அது ஓட்றது.''

''உம்...''

''நிலம் நீச்சை வித்துப் பணமாக்கிக் கிட்டு சித்தூர் போனேன். ஒரு பெரிய

மாந்தோப்பைக் குத்தகைக்கு எடுத்தேன்.''

''உம்...''

''அதுக்குப் பதிலா இண்டி குதிரை மேலே கட்டியிருக்கலாம். ஏன்னு கேட்கிறியா? தோற்கிற குதிரைஎப்படி ஒடித்துன்னு பார்த்திருக்கலாமே... நான் வாங்கின வருஷம் மாம்பூக்கள் தரையில் கொட்டிப் போச்சு. இலையிலே காய் இல்லே....''

''அதிருஷ்டம் இல்லே.''

''பணம் இல்லாதபோது கட்டின பெண்டாட்டியும் வெறுக்கிறான். ஒரு வேளை என்னால் ஒரு குழந்தையை அவளுக்குக் கொடுக்க முடிஞ்சிருந்தா வெறுத்திருக்க மாட்டாளோ என்னவோ... அஞ்சு வருஷம் முன்னாலே எங்கிட்டே சொல்லிட்டுப் போனா... மாம்பூ மட்டும்தான் தரையிலே கொட்டித்துன்னு நினைக்காதே... நானே உதிர்ந்து விழுந்துட்டேன்.''

இரண்டாவது வார இறுதியில் ஒரு நாள் பேப்பர், பேனா, இரு நீண்ட உறைகள் எல்லாம் கேட்டார். ஏன், எதற்கு என்று



கணவன்: ''இன்னிக்கு உங்க மாதர் சங்கத்திலே என்ன டிஸ்கஷன்?''
மனைவி: ''தலைப்பு செய்திகள்!''
கணவன்: ''அப்படீன்னு?''
மனைவி: அவங்கவங்க புடவை முந்தானைப் பற்றிய வர்ணனைகள்! - வே. சீதாராமன்

கேட்காமல் அம்மணியும் வாங்கிக் கொடுத்தாள். பெரியசாமி சில்லறை தரவில்லை. அவளும் கேட்கவில்லை. பேனா மட்டும் திரும்பி வந்தது.

பெரியசாமிக்கு ஒரே ஒரு ஆசைதான். வலி தெரியாமல், மரண வேதனை தெரியாமல் போய்விட வேண்டும்.

அம்மணி ஜெயமணியைப் பார்த்தாள். ஜெயமணி அம்மணியைப் பார்த்தாள்.

''ஏய் இடியட், நீ ஏன் கண் கலங்கறே?'' என்றாள் ஜெயமணி.

''நல்ல மனுஷன்... அவர் கதை தெரியுமா உனக்கு?'' என்றாள் அம்மணி. அவள் குரல் கரகரத்தது.

''நாட் இன்டரஸ்டட்... ஒரு 'பாய்' கேஸைக் கட்டிலில் தள்ளணும். யாரை என்றுதான் தெரியவில்லை. டாக்டர் சொல்லட்டும்னு காத்திருக்கேன்.''

''சூப்பிரண்டண்ட் வரார்'' என்றாள் அம்மணி.

வராந்தாவில் ஜி. எச். சூப்பிரண்டெண்ட் முன்னால் வர மூன்று டாக்டர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள்.

''இன்னிக்கு என்ன இவ்வளவு சீக்கிரம்?'' என்றாள் ஜெயமணி. இருக்கையிலிருந்து எழுந்து நின்று தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

''வரார். நீயே கேளு!'' என்றாள் அம்மணி.

அதன் பின் வார்டில் ஒரு அசாதாரண அமைதி நிலவ ஆரம்பித்தது.

வா அம்மணி!'' என்றார் டாக்டர் நல்லசிவம்.

''கூப்பிட்டீங்களாம்.''

''ஆமாம், பெரியசாமி போயிட்டார்.''

''தெரியும். நீங்ககூட ராத்திரியெல்லாம் பக்கத்திலேயே இருந்தீர்களாம்...''

''யெஸ். போகத் துடிச்சுக்கிட்டிருந்த உயிர் போயிடுத்து.''

''பெரிய ரிலீஃப்.''

''உன்னை ரொம்ப விசாரிச்சார். உன்கிட்டே சொல்லச் சொன்னார்.''

''பாவம்.''

''நீதான் பேப்பர், பேனா, கவர் எல்லாம் கொடுத்தயாம்.''

''ஆமாம். கேட்டார் கொடுத்தேன்.''

''ஒரு கவரை ஆபீஸ்லே கொடுத்துட்டேன். ஐ பாங்குக்குக் கண்கள் போயிட்டது.''

''நல்ல காரியம்.''

''உன் பெயருக்கும் ஒரு கவர் இருக்கு. அதை என்னிடம் கொடுத்திருக்கிறார்.''

''ஏதோ பொட்டணம் கொடுத்ததாக அல்லவா ஜெயமணி சொன்னாள்....''

''ஆமாம். நீளமான கவரைப் பெரியசாமி பொட்டணமாக்கித் தந்திருக்கிறார்... இந்தா.''

அவள் பெற்றுக் கொண்டாள். கனத்தது.

''இங்கேயே பிரிச்சுப் பார்க்கலாமா டாக்டர்?''

கிழித்தாள். கவிழ்த்தாள். ஒரு காகிதப் பொட்டணமும், ஒரு துண்டுக் காகிதமும் மேஜை மேல் விழுந்தன.

பொட்டணத்தைப் பிரித்தாள். கை நடுங்கியது. உள்ளுணர்வு நகையை நினைவுக்குக் கொண்டு வந்தது.

உள்ளுணர்வு தவறவில்லை.

இரட்டை வடம் சங்கிலி.

இரண்டு மோதிரங்கள்.

இரண்டு ஜோடி வளையல்கள்.

ஒரு பழங்காலத்துச் சிவப்புக் கல் தோடு.

பரபரப்புடன் துண்டுக் காகிதத்தைப் பிரித்தாள். எளிதில் புரியாத கையெழுத்து. ''அம்மணி, நீ பார்க்கிறது எல்லாம் என் அம்மாவின் நகைகள். அவளுக்கு ஒரு பெண் இருந்திருந்தா இதெல்லாம் அவளுக்குப் போயிருக்கும். உன்னை அவள் பெறாத பெண்ணாக நான் நினைத்து உன்னை என் தங்கையாப் பாவிச்சுத் தரேன். மறுக்காம வாங்கிக் கொள். நீ ஏற்காமல் கோயில் உண்டியல்லே போட்டாக்கூட என் ஆத்மாவுக்குச் சாந்தி இருக்காது. — பெரியசாமி.''

அம்மணி திகைத்தாள். (தொடரும்)

ஜனதாகட்சி உதயம்

கி. கஸ்தூரிரங்கன்

மார்ச் 21, 1977. திங்கட்கிழமை.

ஹரியானாவில் பூஜ்யம். பஞ்சாபில் சைபர். ராஜஸ்தான், பீஹார், மத்திய பிரதேசம் ஓர் இடம் கூடக் கிடைக்கவில்லை. உத்தரப் பிரதேசத்திலும் அப்படியே.

சில நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வட இந்திய ராஜ்யங்களில் கிடைத்த படுதோல்வியைத் தேர்தல் முடிவுகள் பறைசாற்றிக் கொண்டிருந்தன. இந்திரா காந்தி வீட்டில் தம் அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு தனியாக ரேடியோ அறிவிப்புக்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்காது என்று தேர்தலின்போதே அறிந்ததுதான். ஆனால் இப்படி தொகுதி தொகுதியாக ஹிந்தி ராஜ்யங்களில் நிராகரிக்கப்படும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

இன்னும் மோசம் ரேபரேலியில் ராஜ் நாராயணன் இந்திரா காந்தியை விட 70 ஆயிரத்துக்கு மேல் அதிகமாக வோட்டுக்கள் பெற்றது. இரவெல்லாம் சஞ்சய் ஆணையின் பேரில், காரியதரிசிகள் தயாளும், யஷ்பாலும் ரேபரேலி தொகுதி முடிவுகளை அறிவிக்கக் கூடாது என்று டெலிபோன் மூலம் தேர்தல் அதிகாரியுடன் வாதாடிப் பயனில்லாமல் போய்விட்டது. அமேதியில் சஞ்சய் தேர்தலைப் பற்றி யாருமே அக்கறை காண்பிக்கவில்லை. ஆடிக்காற்றில் அம்மியே பறக்கும்போது சஞ்சய் போன்ற புதிய முகத்துக்கு என்ன வாய்ப்பு? அவருடைய தோல்வி பற்றி அவரே கவலைப்படவில்லை.

இத்தனைக்கும் சஞ்சய் அமேதி தேர்தலில் தம் எதிர்காலத்தையே பணயம் வைத்து மிகவும் பாடுபட்டார். பல வாரங்களாக அங்கேயே தங்கி, கிராமம் கிராமமாகக் கால் நடையாகவே சென்று தமக்கு வோட்டுப் போட வேண்டும் என்று மக்களை வேண்டினார். நேருவின் பேரன், இந்திராவின் மகன் என்று அவரைக் காண மக்கள் திரண்டு வந்தனர். வராத இடங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் ஜீப்புகளில் அலைந்து கூட்டம் சேர்த்தனர்.

அவர்களுக்கு வாக்காளர்கள் இந்திரா காங்கிரஸைப் புறக்கணிப்பது என்று ஆரம்பத்திலேயே ரகசியமாக முடிவெடுத்துக் கொண்டு விட்டனர் என்பது தெரியவில்லை.

சஞ்சய் காந்தியின் கட்டாய கருத்தடை இயக்கமே பெரும்பான்மை வோட்டுக்களை இழக்கச் செய்தது. குறிப்பாக முஸ்லிம்களும் ஹரிஜனங்களும் முதல் தடவையாக காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் போயினர். அவசரநிலை காலக் கொடுமைகளையும், ஜெயப்பிரகாஷ், மொரார்ஜி இவர்களுக்குக் கிடைத்த அவமரியாதையும் பொதுமக்களைக் கோபத்தில் ஆழ்த்தின. அதுவரை பிரிந்திருந்த எதிர்க் கட்சிகள் சேர்ந்து போட்டியிட்டதும் காங்கிரஸ் தோல்விக்குக் காரணமாயிற்று.


பிப்ரவரி 2ந் தேதி ஜெகஜீவன்ராம், பகுகுணா, நந்தினி சத்பதி முதலான பொறுக்கியெடுத்த சிலருடன் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டார். இதை இந்திராவோ சஞ்சயோ எதிர்பார்க்கவில்லை. அவசரநிலை காலம் முழுதும் ஜகஜீவன்ராம் எதிர்ப்பே தெரிவிக்காது தாம் உண்டு தம் பதவி உண்டு என்றிருந்தார். பார்லிமெண்டில் அவசர நிலையை ஆமோதித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதை முன்மொழிந்தவரும் அவரே.

ஜெகஜீவன்ராம் இந்திரா காங்கிரஸை விட்டு வெளியேறியதற்கு ஒரே காரணம் சஞ்சய்தான். ஆட்சி முடிவுகள் பற்றி ஜெகஜீவன்ராமுடன் ஆலோசனை கேட்பதில்லை. கட்சியிலும் ஆட்சியிலும் அவருடைய முக்கியத்துவம் படிப்படியாய்க் குறைந்து போய், துச்சமாக மதிக்கப்பட்டார்.

தேர்தல் அறிவித்த பின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டபோது ஜெகஜீவன்



ராம் மற்றும் உள்ள காங்கிரஸ் பெருந்தலைகள் அனைவரும் ஒதுக்கப்பட்டனர். 540 இடங்களுக்கு 150க்கு மேல் சஞ்சயின் இளைஞர் காங்கிரஸ் நபர்களுக்கு வழங்கப் பட்டது. மீதி இடங்களையும் மாநில முதல்வர்களின் பொறிசின் பேரில் சஞ்சய் காந்தி ஆமோதித்த பின் குறிப்பிட்ட நபர்கள் பெற்றனர். தொடர்ந்து காங்கிரஸில் பணியாற்றி வந்த பலர், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் யாவரும் ஒதுக்கப்பட்டனர். குறிப்பாக ஜெகஜீவன், சவான் முதலானோரின் ஆதரவாளர்களுக்குப் பட்டியலில் இடம் கிடைக்கவில்லை.



சவான் நடப்பது நடக்கட்டும் என்று வாளாயிருந்தது போல் ஜெகஜீவன் இருக்கவில்லை. காங்கிரஸை விட்டு வெளியேறவேண்டும் என்ற உந்துதல் பகுகுணா விடமிருந்தும் ஜனதாக் கட்சியின் அக்ராசனராகப் பதவி பெற்ற சந்திரசேகரிடமிருந்தும் வந்து கொண்டே இருந்தது.

பகுகுணா காங்கிரஸ் கட்சியில் மாஸ்கோ அனுதாபிகளான இடதுசாரிகளைச் சேர்ந்தவர். அவரும், ஒரிஸ்ஸா முதல்வராக இருந்து பதவி இறக்கப்பட்ட நந்தினி சத்பதியும், உதவி நிதி மந்திரியாக இருந்து விலக்கப்பட்ட கணேஷும் சஞ்சய்—இந்திராவுக்கு எதிராகத் திரும்பி விட்டனர்.

இதற்கும் சஞ்சய்தான் காரணம். அவருக்குக் கம்யூனிஸ்டுகளையும் காங்கிரஸ் இடதுசாரிகளையும் அறவே பிடிக்காது. இதை அவர் வெளிப்படையாகவே சொல்லிக்-கொண்டிருந்தார். ஆகஸ்டு 75ல் 'ஸர்ஜ்' என்ற சிறு பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் கம்யூனிஸ்டுகளைத் தாக்கிப் பேசினார். ''இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அத்தனை பேரும் லஞ்சப் பேர்வழிகள். அவர்களை விடப் பணம் கொழுத்தவர்கள் இல்லை'' என்றார்.

இப்பேட்டிச் செய்தி பத்திரிகைகளில் தணிக்கைக்கு உட்பட்ட பிறகும் வெளியாயிற்று. இந்திரா காங்கிரசுக்கு ஆதரவாக இருந்து வந்த கம்யூனிஸ்டு கட்சி சீறிக் கொண்டு எழுந்தது. காங்கிரஸ் இடதுசாரிகள் இந்திராவிடம் முறையிட்டனர். இப்பேட்டியை சஞ்சய் மறுத்த பின்னர்தான் சர்ச்சை ஓய்ந்தது. ஆனால் கம்யூனிஸ்டுகளின் குமைச்சல் ஓயவில்லை. படிப்படியாக இந்திரா காங்கிரஸுடன் கொண்டிருந்த தொடர்பு பலவீனமாகி அறுந்து போயிற்று.

சஞ்சயின் அவசரக் கால எழுச்சி மாஸ்கோவைக் கவலைக்குள்ளாக்கியது. ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஆட்சிகள் சஞ்சயின் கருத்தையும் அவசர நிலை நடவடிக்கைகளையும் ஆதரித்தன. அமெரிக்க தூதுவர் வில்லியம் சாக்ஸ்பி ''இனிமேல் சஞ்சய் காந்திதான் இந்தியாவின் தலைவர். அமெரிக்கா இந்திரா ஆட்சியை முழு மனத்துடன் ஆதரிப்பது நல்லது'' என்று வாஷிங்டனுக்கு ரகசியச் செய்தி அனுப்பினார்.

ஆனால் அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்திராவின் அவசர நிலை கெடுபிடிகளைக் கடுமையாக விமரிசித்து எழுதிவந்தன. இதன் காரணமாக பல பத்திரிகை நிருபர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

இந்திராவின் தேர்தல் அறிவிப்புக்குப் பின் பத்திரிகைத் தணிக்கையும் தளர்ந்தது. எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் 18 மாத சிறைவாசத்துக்குப் பின்விடுவிக்கப் பட்டனர். பராபரியாகக்கேள்விப்பட்ட கொடுமைகள், அராஜக நிகழ்ச்சிகள் எல்லாம் ஊர்ஜிதமாயின.

எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஜெயபிரகாசர் கட்டளைக்குப் பணிந்து ஒன்றாக இணைந்து செயல்பட முன்வந்தன. சரண் சிங் கட்சியும், ஜனசங்கமும், மொரார்ஜி காங்கிரஸ், சோஷலிஸ்டு, சுதந்திரா கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜனதா கட்சி பிறந்தபோது மக்களிடையே ஆரவாரமான வரவேற்பு இருந்தது.

ஜெகஜீவன்ராமின் கட்சித் தாவல் காங்கிரஸைக் கலகலக்கச் செய்து விட்டது. சஞ்சயின் திட்டம் தவிடு பொடியாயிற்று. அவருடைய பட்டியலை ஒதுக்கிவிட்டு மாமூலாக கட்சி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே மீண்டும் நியமனம் பெற்றனர். சாதி, பணம், ஆள் பலம் முதலான அடிப்படையில் பழம் பெருச்சாளிகளே இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக நியமனம் பெற்றனர். ஜெகஜீவன்ராமைப் பின்பற்றி பிற காங்கிரஸ் புள்ளிகளும் ஓடிப்போய் விடக் கூடாது என்ற கவலையில் இந்த அவசரப் பட்டியல் தயாராகியது. சஞ்சய் காந்திக்கு மட்டும் அமேதி தொகுதி கொடுக்கப்பட்டது. அங்கு செல்வாக்குடன் இருந்த ராஜா தினேஷ் சிங் எப்படியாவது அவ

ருக்கு வெற்றி வாங்கித் தருவேன் என்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

தேர்தல் நெருங்க நெருங்க மெஜாரிட்டி கிட்டாது என்று தெரிந்து போயிற்று. எந்தச் சாக்கிலாவது தேர்தலை ஒத்திப் போடலாம் என்று சஞ்சய் அபிப்பிராயப் பட்டார். ஆனால் தேர்தல் கமிஷனர் சாமிநாதன் இதற்கு இணங்கவில்லை. இந்திராவும் குறைந்த பட்சம் 200 இடங்களாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பெரும்பான்மை கிட்டாவிட்டாலும் பரவாயில்லை அதிகபட்ச இடங்கள் கிடைத்துவிட்டால் பற்றுக்குறையை அ.இ.அ.தி.மு.க. முதலான தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு சரிக்கட்டிவிடலாம் என்று தேர்தல் களத்துக்குத் தயாரானார்.

தென்னிந்திய ராஜ்யங்களில் மட்டும் இந்திரா எதிர்பார்த்ததற்கும் மேலாக வெற்றிகள் கிடைத்தன. சஞ்சய் ஆளுகைக்கு அப்பாற்பட்ட பிரதேசமாக இருந்துவிட்டது ஒரு காரணம். விந்திய மலைக்கு அப்பால் உள்ள ஹிந்தி ராஜ்யங்களோ ஒரே அடியாகக் காலை வாரி விட்டன.

பிரதமராக இனி நீடிக்க ஒரே ஒரு வாய்ப்புத்தான் இருந்தது. தேர்தல் முடிவுகளைப் புறக்கணித்து ராணுவ ஆட்சிக்கு உத்தரவிடுவது.

முடிவுகள் வெளியான கையோடு இந்திரா ராஜினாமாச் செய்யவில்லை. ஒரு நாள் தாமதித்தார். இந்திராவின் நோக்கம் பற்றிக் கேள்விகளும் பலவிதமான வதந்திகளும் பரவின.

ராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவு போய்விட்டது, டில்லியில் படைகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன என்றெல்லாம் வதந்திகள்.

ஜனதா கட்சி உடனடியாக இந்திராவை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கண்டித்துக் கேட்டது.

இந்திரா தயங்கியதற்கு ஒரே காரணம் பொதுமக்களின் கோபம் தனக்கும் சஞ்சய்க்கும் ஆபத்தில் முடியுமோ என்பதுதான். எந்தக் கணத்திலும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வீட்டைத் தாக்கக் கூடும் என்று எதிர்பார்த்தார். அதற்காக முன்கூட்டியே பந்தோபஸ்து செய்து கொண்டிருந்தார். பிரதமர் பதவி என்ற பாதுகாப்பு போய் விட்டால் குதறி எடுத்து விடுவார்களோ என்று பயந்தார். பிரதமர் பதவியை

◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதிகளின் விதவை மனைவியர் தபால் தலை ஒட்ட வேண்டியதில்லை தாங்கள் எழுதும் கடிதங்களில்.

●

ஆரம்பத்தில் கடிகாரங்களுக்கு ஒரே ஒரு முள் தான் இருந்தது. 1670க்கு பிறகு தான் நிமிஷ முள் வைக்கப்பட்டது. - பிரியா பாலு

◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆

விடுமுன் ரகசிய பைல்கள், பணம் இவற்றை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது.

எதிர்பார்த்தபடி ஆபத்து ஒன்றும் உடனடியாக வரவில்லை. ஜனதா வெற்றிக் கொண்டாட்டத்தில் இந்திராவையும் சஞ்சயையும் பொதுமக்கள் மறந்துவிட்டதாகத் தோன்றியது.

பதவியை விட்ட பின் என்ன செய்வது? ராஜீவ் காந்தி எல்லாரும் இத்தாலிக்குப் போய்விடலாம் என்று யோசனை சொன்னார். அங்கே அவருடைய மனைவியின் குடும்பத்தினர் ஹோட்டல் நடத்தி வந்தனர்.

சஞ்சயோ இப்போது போனால் ஜனதா கட்சி சுமத்திய பழியெல்லாம் நிஜம் என்று ஆகிவிடும். வருவது வரட்டும் என்று இங்கேயே இருந்துவிடுவது என்று உறுதியாகச் சொன்னார். அதுதான் சரி என்று இந்திரா ஏற்றுக் கொண்டார்.

மார்ச் 22ந் தேதி ராஜினாமா செய்தார். இரண்டு நாட்களுக்குப் பின் மொரார்ஜி தேசாய் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

ஆரம்ப முதலே மொரார்ஜி - சரண் சிங் - ஜெகஜீவன்ராம் இடையே தலைமைப் போட்டி. ஜெயப்பிரகாஷ் நாராயண் குறுக்கிட்டு மொரார்ஜி சார்பாக தீர்ப்பு வழங்கி ஒரு மாதிரியாகச் சண்டை ஓய்ந்தது. சரண் சிங் உள்துறை அமைச்சர் பதவியை ஏற்றார். இந்திரா காந்தியையும் சஞ்சய் காந்தியையும் பழிவாங்குவது அவரது செயல் திட்டத்தில் முதல் இடம் பெற்றது.

காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் இந்திரா காந்தியையே தோல்விக்குப் பொறுப்பாக்கினார்கள். சஞ்சய் மட்டுமே துணையாக நிற்க இந்திரா காந்தியின் மூன்றாண்டு கால இருமுனைப்போராட்டம் ஆரம்பமாகியது.

(தொடரும்)

அவன்: "ஏன்டா தினமும் உப்புமாவோ, தோசையோ கொண்டு வர்றே? உன் மனைவிக்கு இந்த இரண்டு டிபனைத்தவிர வேறு பண்ணத் தெரியாதா?"

இவன்: "அவளுக்கு என்ன பண்ணத் தெரியுமோ எனக்குத் தெரியாது! எனக்கு இந்த ரெண்டு டிபன் தான் பண்ணத்தெரியும்!"

— எஸ். சந்திரசேகரன்



ராத்திரி ரயிலில் வந்தவள்

ராஜேஷ்குமார்

ஆட்டோடிரைவர் கிருஷ்ணன் பூரித்துப் போனான்.

செம்மையாய்ப் பனி கொட்டும் அந்த இரவில் —கோவை ஜங்ஷனில் வந்து நின்ற கொச்சின் எக்ஸ்பிரஸினின்றும் தனியாக இறங்கிய அந்தப் பெண் கழுத்திலும், மூக்கிலும் காதிலும் தங்கத்துணுக்குகள் டாலடிக்க அவனைச் சவாரிக்காக நெருங்கியபோது. 'கிருஷ்ணா! அடிச்சேடா லக்கி பிரைஸ்' என்று தனக்குள் சொல்லி மனசுக்குள் சந்தோஷத்தைக் கொண்டாடினான்.

கையை உயர்த்தி மணிக்கட்டில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி 1.45. கொச்சின் எக்ஸ்பிரஸ் பத்து நிமிஷம் லேட்.

''எங்கேம்மா போகணும்?'' - அனுசரணையாய்க் கேட்டான்.

''ஒண்டிபுதூர் போகணும்....'' — அந்தப் பெண்ணின் குரலில் லேசான நடுக்கம். புடவைத் தலைப்பை எடுத்துக் கழுத்துச் சங்கிலியை மூடிக் கொண்டாள்.

''ரொம்ப தூரம் போவணுமே... அஞ்சு ரூபா ஆகும்...''

''அஞ்சு ரூபாயா? வேண்டாம்.'' — அவள் வேறு ஆட்டோவைத் தேடிப் போக முற்பட்டபோது கிருஷ்ணன் அவசரம் அவசரமாய்த் தடுத்தான்.

''சரி நாலு ரூபாய் குடும்மா...''

''ஊஹூம்... மூணு ரூபாய்ன்னு சொல்லுங்க....''

''சரி. ஏறி உட்காரம்மா.'' — கிருஷ்ணன் ஆட்டோவை ஸ்டார்ட் செய்தான். அந்தப் பெண் கையில் இருந்த சிறிய காக்கிப் பையோடு ஏறி உட்கார்ந்தாள்.

ஒண்டிபுதூர் போகிற வழி தோதான வழிதான்!

இதற்கு முன் கிருஷ்ணனுக்கு இரண்டு தடவை ஒண்டிபுதூர் போகிற வழியில் சவாரி கிடைத்து வள்ளிசாய் ஏழெட்டுப் பவுன் கிடைத்திருக்கிற அனுபவம் உண்டு. இன்றைக்கும் இந்தப் பெண்ணிடம் நகைகள் பத்துப் பவுனுக்கு மேல் தேறும்.... அவளை எங்கே மடக்கலாம்? ஒண்டிபுதூர் வருவதற்குள் புளியகுளம் பக்கத்தில் நம் கைவரிசையைக் காட்ட வேண்டியதுதான்.

கிருஷ்ணன் தீர்மானித்துக் கொண்டான். ஆட்டோ திருச்சி ரோட்டில் குளிர் காற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்துகொண்டிருந்தது.

மெல்லப் பேச்சை ஆரம்பித்தான் கிருஷ்ணன். ''எங்கிருந்தம்மா வர்றீங்க?... கொச்சியிலிருந்தா?''

''இல்லே. திருச்சூரிலிருந்து.''

''தனியாவா வந்தீங்க?''

''ஆமா.'' — அந்தப் பெண்ணின் குரலில் மெல்லிய நடுக்கம்.

''துணைக்கு யாரையாச்சும் அழைச்சுக்கிட்டு வந்திருக்கக் கூடாதா?'' — கிருஷ்ணன் தன் குரலில் செயற்கையான பரிவையும் குழைவையும் தாராளமாகக் கலந்துகொண்டான்.

''நியாயமா அழைச்சுக்கிட்டு வந்திருக்கணும். கோயமுத்தூர்ல நாளைக்கு அவசரமாக எனக்கொரு இண்டர்வியூ... நர்ஸ் வேலைக்கான இண்டர்வியூ.. இண்டர்வியூக் கார்டு தேத்தைக்கு மத்தியானம்தான் கெடைச்சுது. இருக்கிற ஒரே தம்பி வெளியூர் போயிருக்கான். சாயந்திரம் வரைக்கும் அவனுக்காகக் காத்திட்டிருந்தேன். அவன் வரல்லே. வேறே வழியில்லாமெ கொச்சின் எக்ஸ்பிரஸ்லே புறப்பட்டு வந்துட்டேன்... இங்கே ஒண்டிபுதூர்லே என்னோட அக்கா இருக்கா....''

புளியங்குளம் நெருங்கிக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் தன் சட்டையின் மேல் பாக்கெட்டில் மடக்கி வைத்திருந்த அந்தச் சிறிய பிச்சுவாக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

புளியகுளம் தாண்டி — அந்த அடர்த்தியான அரச மரங்கள் ஆரம்பமாகும் இருட்டான பகுதியில் ஆட்டோவின் வேகத்தைக் குறைக்க வேண்டியது. சடக் என்று பிரேக் போட்டு ஆட்டோவை நிறுத்த வேண்டியது. ரிப்பேர் என்று சொல்லிக் கீழே இறங்கி, சட்டைப் பாக்கெட்டில் இருக்கிற பிச்சுவாவை விரித்து அவள் கழுத்தருகே வைத்து நகைகளைக் கழற்றித் தரச் சொல்லி உறுமவேண்டியது....! அவ்வளவுதான்! இரண்டே நிமிஷங்களில் நகை முழுக்கக் கைக்கு வந்துவிடாதா என்ன? — கிருஷ்ணன் திருப்தியாய்ப் புன்னகை பூத்துக் கொண்டான்.

வாலாங்கு மேட்டைச் சுற்றிக்கொண்டு ஜன நடமாட்டம் அடியோடு செத்துப் போயிருந்த புளியகுளம் பகுதியில் ஆட்டோ நுழைந்தது. இருட்டில் தூரத்தே தெரிந்த அந்த அரச மரங்கள் ஆட்டோவை வரவேற்றன.

ஆட்டோவின் வேகத்தை இனி குறைக்க வேண்டியதுதான். கிருஷ்ணன் மனத்துக்குள் முடிவு செய்த அதே நேரம் அந்தப் பெண் சொன்னாள்: ''ஆட்டோவைக் கொஞ்சம் நிறுத்தறீங்களா?''

''என்னம்மா? ஒண்டிப்புதூர்ன்னு சொன்னீங்க?'' — அவன் கொஞ்சம் தயக்கத்தோடு சொன்னான்.

''எங்க அக்கா வீட்டுக்குப் போறதைக் காட்டிலும் புளியகுளத்தில இருக்கிற என்னோட சிநேகிதி தங்கியிருக்கிற நர்ஸ்

குவார்ட்டர்ஸுக்குப் போயிடலாம்னு பார்க்கிறேன்... ப்ளீஸ் நிறுத்துங்க.''

கிருஷ்ணன் ஆட்டோவை நிறுத்தினான்.

அடுத்த விநாடி.... ரோட்டோர இருட்டின் மறைவிலிருந்து நான்கைந்து பேர் ரோட்டுக்கு ஓடிவந்து ஆட்டோவைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர்.

ஒருவன் கிருஷ்ணனின் சட்டையைப் பற்றிக்கொள்ள மற்றொருவன் அவன் தலைமுடியைப் பற்றினான்.

''பணம் எத்தினிடா வெச்சிருக்கே?''

''.......''

''கடைவாயிலே ஒண்ணைப் போடு. அப்பத்தான் வாயைத் திறப்பான்.'' ஒருத்தன் போட்டான். இன்னொருத்தன் கழுத்துப் பகுதியில் கையை வைத்தான்.

திடீரென்று ஒருவன் கிருஷ்ணனின் கடிகாரத்தைக் கழற்றிக் கொள்ள மற்றொருவன் சட்டைப் பையிலும் பாண்ட் பையிலும் கையை நுழைத்து இருந்த பணம் பூராவையும் வழித்தான். ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் கொஞ்சம் வாங்குவதற்காக வைத்திருந்த ஐந்நூற்றுச் சொச்சம் ரூபாய் முழுக்க அவர்கள்கைக்கு மாறியது.

கிருஷ்ணன் கத்தினான்: ''எங்கிட்ட ஏன்யா பிடுங்கறீங்க? உள்ளார ஒருத்தி எக்கச்சக்கமா நகையைப் போட்டுக் கிட்டு உட்கார்ந்திருக்காளே... சண்ணு தெரியல்லை?''

அந்தப் பெண் ஆட்டோவினின்றும் இறங்கினாள். சிரித்தபடியே சொன்னாள்: ''டிரைவர்! நான் போட்டிருக்கிற இந்த நகை முழுதும் இமிடேஷன். எல்லாமே சேர்ந்து நாற்பத்தேழு ரூபாய் பதினொரு பைசாவுக்கு வாங்கினேன். என்னைப் போய் அவங்களுக்குத் தாரை வார்க்க நினைக்கிறீங்களே, இது நியாயமா?''

சுற்றி நின்ற ஆட்களில் ஒருவன் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கத்தினான்: ''ஆஹா! அவன் கூட என்னத்துக்கு அநாவசியமான பேச்சு? உன்னோட வேலை முடிஞ்சுதல்ல... வீடு போய்ச் சேர். உனக்குச் சேரவேண்டிய பங்குப் பணம் நாளைக்குக் கொண்டாந்து தர்றேன்....''

கிருஷ்ணன் திகைத்துப் போய் நிற்க—

அவள் சட்டென்று இருட்டான அந்த அரச மரங்கள் நிறைந்த பகுதியில் இறங்கி.. நடந்து.... சில விநாடிகளில் மறைந்தாள்!



வாழி எனைத்தூ க்கி வைத்த கரதலங்கள்
வாழி எலாம்வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்சோதி வாழிநட ராயன்
வாழி சிவஞான வழி!

— *திருஅருட்பா*

கடுகு பதில்கள்





✠ கனில் கே. பென்ஜமின், தஞ்சாவூர்

கே. நிகழ்ச்சியில் தடங்கல் ஏற்படும் போது வானொலி நிலையத்தார் பெருந்தன்மையோடு வருத்தம் தெரிவிப்பதை கிண்டல் செய்வது ஏன்?

ப: அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்— பெருந்தன்மை உள்பட.

✠ எஸ். சுதாகர், விளாத்திகுளம்

கே. முதலைக் கண்ணீரும் முதலாளியோட கண்ணீரும் ஒன்று தானே?

ப: அவரும் 'முதலை'ப் போட்டுத்தானே வியாபாரம் நடத்துகிறார். ஆகவே கண்ணீரும் ஒத்துப்போவதில் வியப்பில்லை.

✠ எம். தேவராஜ பட்டேல், விழுப்புரம்

கே. மனிதன் தெய்வமாக முடியுமா?

ப: முடியுமே. மனிதன் மனிதத்தனமான பணிகள் செய்யும் போது தெய்வமாகிறான்.

✠ சுதா மணிமேகலை, வேலூர்

கே. ஜெயகாந்தன் என்றால் பயமா உங்களுக்கு?

ப: யாருக்கும் பயப்பட மாட்டார் அவர். அவரைக் கண்டு யாரும் பயப்படுவதையும் விரும்ப மாட்டார். ஒரு சமயம் சுமார் இரண்டு மணி நேரம் அவருடன் விவாதித்திருக்கிறேன். அவர் கையாலேயே ப்ளாக் காப்பி போட்டுக் கொடுத்தார். ஆகவே உங்கள் கேள்வியை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்.

✠ சரஸ்வதி ராஜேந்திரன், மன்னார்குடி-2

கே. மயானத்தைச் சுற்றி ஏன் வேலி அமைப்பதில்லை?

ப: உள்ளே இருப்பவர்கள் வெளியே வரப்போவதில்லை. வெளியே இருப்பவர்கள் உள்ளே போக விரும்புவதில்லை. ஆகவே வேலி அனாவசியம். (இது என் சொந்தக் கருத்து என்று கற்பூரம் 'அடித்து' சத்தியம் பண்ணத் தயார் — கற்பூரம் விற்கும் விலையில் யாரும் அப்படிச் செய்யச் சொல்ல மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்!)

✠ ராஜகுமார், பொன்னாச்சி

கே. உங்களைக் குழப்புவது எது?

ப: மதுரையில் உள்ள சுமங்கலி ஹோம் இண்டஸ்ட்ரீஸ் காரர்கள் விளம்பரங்களில் பல சமயம் எது எதுவோ எழுதுகிறார்கள். புரிவதில்லை. இதென்ன பூடகமான விளம்பரம் என்று நினைப்பதுண்டு.

கே. பிரதாப்சிங், அரகண்ட நல்லூர்

கே. புகை வண்டிகளை ஒழித்தால் என்ன?

ப: முதலில் ஒழிக்கப்பட வேண்டியவை புகை வண்டிகள் அல்ல; கை வண்டிகள்!

✠ ஆர். எஸ். வசந்தா, திருமருகல்

கே. தற்பெருமையே பேசிக் கொண்டிருக்கிறார்களே சில பேர்?

ப: ஒரு விதத்தில் பார்க்கப் போனால் இது நல்ல குணம். மற்றவர்களைப் பற்றி வம்பு பேசாது இருக்கிறார்கள் அல்லவா, அந்த ந(ா)ன்மக்கள்!

✠ எம். திருநாவுக்கரசு, ஆரணி

கே. சமீபத்தில் உங்கள் மனத்தைத் தொட்ட செய்தி அல்லது சம்பவம் அல்லது திரைப்படம் என்ன?

ப: சமீபத்தில் ஒரு நாள் ஒரு கவர் வந்தது. அதில் பதினொரு ரூபாய்க்கு செக் இருந்தது. உடன் இருந்த கடிதத்தில் 'எங்கள் தந்தையார் உயிலில் குறிப்பிட்டுள்ளபடி இத்தொகையை அனுப்புகிறோம்' என்று எழுதி உயில் வாசகத்தையும் எழுதியிருந்தனர், அவரது பிள்ளைகள். உயிலில் ''என் ஆரம்ப காலத்தில் பலர் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். அவர்களுக்காக நான் என்றும் ஆண்டவனைப் பிரார்த்திப்பது வழக்கம். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க ஏதோ என்னாலான சிறு அளவாவது பணம் தந்தால் அவர்களுடைய நல்வாழ்த்துக்களால் என் மக்களும் அவர்களின் மக்களும் நலமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆழ்ந்த விநயத்துடன் இச் சிறு தொகை நன்றியுடன் தரப்பட வேண்டும்'' என்று எழுதியிருந்தது. பட்டியலில் 27வது பெயர் என்னுடையது. உயிலை எழுதினவர்: லிப்கோ கிருஷ்ணசாமி சர்மா. எப்போதோ பத்து வருடங்களுக்கு முன்பு அவரைப் பற்றி நான் பேட்டிக் கட்டுரை எழுதியிருந்தேன். உயில் எழுதும்போது என்னை நினைவில் வைத்திருந்ததை எண்ணும்போது நெகிழ்ச்சி ஏற்படுகிறது.

பரிசு பெறுபவர்:

எஸ். சுதாகர்
மூர்த்தி பேக்கரி,
மதுரை ரோடு,
விளாத்திகுளம்
-627 907

ஐந்து பவுன் ரகசியம்

விஜயாலயன்

தோழிப் பெண்கள் கலகலப்போடு இருக்கிருர்கள்.

ஆனல்... நான்! மணப்பெண்!

கலகலப்பாக இருக்க வேண்டியவள் கலங்கிப் போயிருக்கிறேன்.

மகிழ்ச்சியோடு இருக்க வேண்டியவள் அந்தக் கோட்டைத் தொட முடியாமல் தவிக்கிறேன்.

கழுத்தைத் தொட்டுப் பார்க்கிறேன்... அப்பா போட்ட பத்துப் பவுன் நகை.

மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு வாக்குக் கொடுத்ததைப் போல் சரியாகத்தான் போட்டிருக்கிருர்.

ஆனல்? ஐந்து பவுன்தான் உண்மையான தங்கம். மீதி ஐந்து பவுன் கவரிங் நகை.

எனக்கே காலையில்தான் தெரிய வந்தது. சித்தப்பாபேச்சு வாக்கில் வாய் தவறுதலாகச் சொல்லிவிட்டார். சொல்லிவிட்டு ''ஐயோ, ரகசியத்தை நான் போட்டு உடைச்சுட்டதாக யாரிடமும் சொல்லிடாதே. உன் அப்பா எனக்கு ஜன்மப் பகையாயிடுவார்!'' என்ருர்.

எனக்கு எப்படி இருக்கும்?

ஓடிப்போய் மாப்பிள்ளையிடம் விஷயத்தைச் சொல்லிவிடலாமா?

இந்த விஷயம் வெளியே தெரிந்தால் எவ்வளவு கேவலம்?

இன்றைக்குத் தெரியாவிட்டாலும் என்றைக்காவது தெரியாமலா போகும்? தெரிந்தால்.... எப்படிக்கேவலமாகப் பேசுவார்கள்!

பொய் நகை போட்டு என் மகனை ஏமாத்திட்டியேன்னு மாப்பிள்ளையின் அம்மா கேட்க மாட்டாரா?

''முகூர்த்தத்துக்கு நேரமாச்சு...,பெண்ணைச் சீக்கிரம் கூட்டிக்கிட்டு வாங்க...'' ஒரு பெரியவர் வந்து அவசரப்படுத்தி விட்டுப் போனுர்.

என் தோழிகள் என் முதுகைப் பிடித்துத் தள்ளாத குறையாக அழைத்துக்கொண்டு போனுர்கள்.

மண மேடையில் உட்கார வைத்தார்கள்.

என் கைகள் நடுங்கின. கால்கள் நடுங்கின. மனம் பதற்றத்தால் படபடத்தது. முகத்தில் வியர்வை வழிந்தது.

மெதுவாக நிமிர்ந்து ஆறுதலுக்காக அம்மாவைப் பார்க்கிறேன்.

ஒன்றும் தெரியாத அப்பாவியாக அம்மா புன்னகைக்கிருள்.

அப்பாவைத் தேடுகிறேன்.

அவர் கண்கள் என்னைச் சந்திக்க மறுக்கின்றன.

மாப்பிள்ளையிடம் உண்மையைச் சொல்லிவிடலாம்.

இலேசாக விழிகளை உயர்த்தி அவரைப் பார்க்கிறேன். அவர் என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரிக்கிருர். அந்தப் பார்வை என்னை ஈட்டியாகக் குத்துகிறது. தலையைக் கவிழ்த்துக் கொள்கிறேன்.

ஐயர் மந்திரம் ஓதுகிருர்.

இந்த விஷயம் மாப்பிள்ளை சம்பந்தப்பட்டவர்கள் யாருக்காவது தெரிந்து...?

தாலி கட்டும் நேரத்தில் 'நிறுத்து!'என்று கூவி — விஷயத்தை அம்பலப்படுத்திவிட்டால்?

என் மனத்தில் துணிச்சல் லேசாகப் பிறந்து வாயைத் திறந்தபோது — ஐயர் கத்தினுர்.

''முகூர்த்த நேரமாச்சு... சகல வாத்தியம் போடுங்கோ.....''

மங்கள வாத்தியம் முழங்க...

அவர் தாலியை எடுத்து என் கழுத்தில் கட்டுகிருர்.

சாந்தி முகூர்த்தம்.

கதவைத் திறந்து என்னை அந்த அறைக்குள் தள்ளிவிட்டுத் தோழிப் பெண்கள் சிரித்தார்கள்.

அவர் கட்டிலிலிருந்து எழுந்தார். போய்க் கதவைத் தாளிட்டார்.

அவர் என்னை நெருங்குவதற்குள்...ஓடிப் போய் அவர் காலில் விழுந்து கதறுகிறேன்.

''என்னை மன்னிச்சுடுங்க... நான் உங்களுக்குத் துரோகம் பண்ணிட்டேன்...உங்களை ஏமாத்திட்டேன்....''

அவர் என் இரண்டு தோள்களையும் இறுகப் பற்றினுர். ''பூமதி நீ என்ன சொல்றே?''

''வந்து...வந்து... அப்பா எனக்கு என் கல்யாணத்துக்குப் பத்துப் பவுன் நகை போடறதாச் சொன்னரு. ஆனு உண்மையிலே அஞ்சு பவுன்தான் போட்டாரு. மீதி பொய் நகைங்க....''

அவர் ''ஓ''வென்று சிரித்தார்.

''இதுதானு?... இதுக்குப் போயா இப்படி பயந்துட்டே.... இந்த ஏற்பாட்டைப் பண்ணினதே நான்தான்...''

நான் அவரை லேசான அதிர்ச்சியோடு பார்த்தேன்.



''ஆமா, பூமதி. நான் உன்னைப் பெண் பார்த்தபோது உன் அபரிமிதமான அழகிலே பைத்தியமாகிட்டேன். கல்யாணம் செய்துக்கிட்டா உன்னைத்தான் பண்ணிப்பேன்னு தீர்மானம் பண்ணிக்கிட்டேன். எங்கம்மா ஒரு நகைப் பைத்தியம். முப்பது பவுன் கேட்டாங்க. நான் அம்மாவைக் கெஞ்சினேன். கடைசியா பத்துப் பவுனுக்கு ஒத்துக்கிட்டாங்க. ஆனா நீங்க ஏழை. உங்கப்பா பத்துப் பவுன் போட முடியாதுன்னு சொல்லிட்டாரு. நான் உங்கப்பாவைச் சமாதானப்படுத்தினேன்.—வேணும்னு நானே அஞ்சு பவுன் போடறேன். மீதி அஞ்சு பவுனைக் கவரிங் நகையா நீங்க வாங்கிப் போடுங்கன்னு சொன்னேன். யாருக்கும் தெரியவேணும்னேன்.''

''இது... உங்கம்மாவுக்கு....?''


''தெரியாது. தெரிஞ்சாலும் உன்னை ஒன்ணும் பண்ண முடியாது. ஏன்னா இப்பத்தான் உன் கழுத்திலே தாலி இருக்கே...'' என்று என் நெஞ்சத்தைத் தொட்டுக் காட்டியவர்...

சட்டென்று என்னை இழுத்து அணைத்துக் கொண்டார்.

நான் அவர் மார்பில் புதைந்து ஆள் காட்டி விரலால் கோலமிட....

அவர் என்னை,....என்னை....




மழலைப் பொட்டலம்
படம்: ஜெயந்தி..., தயாரிப்பு: பி.எஸ்.ஆர்
வசனம்: சிசு
எழுத்தாளர் கௌரிமனோகரியா.. உங்களுக்கு டெலிபோன் பண்ணவும் கையே நடுக்கமா இருக்கு, ஸார்.
ஏன் என் பசங்க பட்டாளைத்தைக் கொளுத்தி டெலிபோனுக்குக் கிட்டே வைத்து பயமுறுத்தினதால் சொல்றீங்களா?
நோ.. நோ.. நீங்க தொடர் கதைக்கு பணம் கேட்கப் போறீங்கன்னுதான் நடுக்கமா இருக்கு!
உயிர் சம்பந்தமான இரண்டு வேலைகள் செய்து கொண்டு சம்பாதிக்கிறதாகச் சொன்னீர்களே, அவை என்ன?
நீங்க கௌரிமனோகரி என்கிற புனை பெயரை ஏன் வைத்துக் கொண்டீர்கள். வேறு நல்ல பெயர் கிடைக்கவில்லையா?
எனக்கும் தான் அந்தப் பெயர் பிடிக்கவில்லை. ஆனால் கண்ணதாசன், 'கௌரிமனோகரியைக் கண்டேன்' என்று பாட்டு எழுதிவிட்டார். பாட்டை ரிகார்டும் பண்ணிட்டாங்க!
ஒன்று கதை எழுதி மக்கள் உயிரை வாங்குவது. இரண்டாவது அப்படி உயிரிழப்பவர்கள் முன்னதாக தக்க ஏற்பாடுகளைச் செய்துக்க லைஃப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொள்ளச் சொல்லும் ஏஜண்ட் வேலை.
ஆறு பசங்க பெத்த ஒரு எழுத்தாளனய்யா விஷ்ணுவர்த்தன் அவன் கிட்டே கார் எப்படி இருக்க முடியும்..


எனக்கு ஷீனத் அமனைக் கல்யாணம் பண்ணி வைம்மா
ஆசைப் படறதுதான் படறே, ஹேமா மாலினியைக் கல்யாணம் பண்ணி வைன்னு சொல்லக் கூடாதாடா!
கட்.. கட்.. ஹேமாவுக்குக் கல்யாணம் ஆயிடுத்து. டயலாக்கை மாத்தணும். ரேகான்னு மாத்திச் சொல்லுங்க சுந்தரி பாய் அம்மா.
காஸ்ட்யூமருக்கு பணம் பாக்கி. இந்த கேரக்டருக்கு டிரஸ் தைக்க கொடுத்த பணத்தை பாக்கிக்கு அட்ஜஸ்ட் பண்ணிட்டார். அதனால்தான் இப்படி...
இப்படி ஒரு கேரக்டரைப் புகுத்த எப்படி ஸார் உங்களுக்கு ஐடியா வந்தது!
நல்ல காலம் சுமித்ரா கேரக்டர் டிரஸ் பணத்தை அட்ஜஸ்ட் பண்ணலியே பொழைச்சோம்.
உங்களுக்கு இரட்டைப் பிள்ளை பிறந்திருக்கு சந்தோஷம் தானே!
கிளினிக்
நிச்சயமாக சந்தோஷம் தான். ரேஷனில் இன்னும் 2 கிலோ சர்க்கரை அதிகம் கிடைக்கும்!
நூறாவது நாள் விழா போஸ்டர் ஆயிரம் அச்சடிச்சு வந்திருக்கு. சிட்டி பூரா ஒட்டச் சொல்கிறேன்.
அதில் 999 போஸ்டரை ஸ்ரீவித்யா வீட்டைச் சுற்றி ஒட்டச் சொல்லுங்க!
ஆமாம் சார் கரெக்டாக சொன்னீங்க!

சாமிவேலு கட்டுப் போட்ட தன் காலை மெல்லத் தூக்கித் திண்ணை மேல் வைத்து, அடுத்த காலைத் தொங்கப் போட்டான். அந்த விநாடிகளிலேயே கால் வலி இடுப்பு மூட்டைப் பிடுங்கியது.

இருட்டு அடர்த்தியாகி விட்டது.

ஊர் வழக்கமான அமைதியின் அமளுக்கு இணங்கி விட்டது.

விடிந்தால் புதன். ஆகஸ்ட் பதினைந்து. சுதந்திர தினம். சாமி வேலுவுக்கு நினைக்க நினைக்க வேர்த்துக் கொண்டு வந்தது. வயிற்றின் தசைகள் இறுகிக் கொண்டன. வெளியே போன மனைவியின் மேல் கோபம் கூடிக்கொண்டு போயிற்று.

''உண்ணியும் என்ன பண்ணு? கெடச்சதுக்கும் கெடைக்காததுக்கும் சீக்கிரமா வந்து தொலையறதுதானே...'' என்று மனசுக்குள் எரிந்து கொண்டிருக்கும்போது ரெண்டாவது பையன் ராகு மேல் சட்டையைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

''அப்பா ஆயி வருது... டவுஜுரக் களட்டி உடு.''


''இந்நேரத்தில் என்னடா வெளிக்கி? உங்கம்மா வேற இல்லாத நேரத்துல?''

பையன் நேரம் தெரிய வேண்டிய நிதானத்தில் இல்லை. கடைசி பட்டனைக் கழற்றக் கழற்ற ஒரே ஓட்டமாய் ஓடினான்.

போட்டிக்கதை 2

உறுதியானவை

பிரதிபா ராஜகோபாலன்



வாசல் நடையில் யாரோ வருவது தெரிந்தது. உற்றுப் பார்த்ததில் சர்மா என உணர்ந்தான்.

''என்னப்பா... யோசனையா உக்காந்திருக்கே... ஊட்ல யாருமில்லையா?'' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்தார்.

''பசங்க வெளையாடப் போயிருக்கானுக. தனுவை நம்ம கருப்பண்ண முதலாளி கிட்ட அனுப்பிச்சிருக்கேன்...''

''ஒரு மாசத்திலே ஆளு பாதி ஆயிட்டே''

''கவலைதாங்க. காலு கீலு எடுக்க வேண்டியதாயிருந்தா என்ன செய்யறதுன்னு பயம் தாங்க....''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. உன்ற மனசுக்குச் சீக்கிரமா கொணமாயிடும். ஆமா.. நாளைக்கு ஆகஸ்ட் பதினைஞ்சு வழக்கம்போலச் செய்யறியா? இப்ப இருக்கிற நெலைல...''

சாமிவேலு சட்டென்று முள் குத்தினாற் போலத் துடித்தான்.


''என்ன சாமி... இந்தக் கேள்வியைக் கேக்க எப்படி மனசு வந்தது? எங்கப்பா போனதிலிருந்து பத்தொன்பது வருசமா வருசந் தவறாம அதப் பண்ணிட்டு வர்றேன், சத்தியம் வாங்கிட்டுச் செத்தாரு. நானும் மீறல. என்ரோட வசதி நாளுக்கு நாள் கொறஞ்சாலும் தலைய அடமானம் வச்சாவது பத்து ஏழைங்களுக்கு விருந்து போட்டுட்டு வர்றேன். நா உசிரோட இருக்கிற வரைக்கும் அது நடக்கும். நா கண்ணை மூடுனதுக்கு அப்புறம், அந்தக் காரியம் தொடர்ந்து நடக்கோணும்னு என்ற பசங்க கிட்டச் சத்தியம் வாங்கிட்டுத்தான் உடுவேன். அப்படி இருக்கத் திடீர்னு இப்படிக் கேட்டுப்புட்டீங்களே சாமி?''

சர்மா குன்றிப்போனார்.

''சாமிவேலு தயவு செஞ்சு தப்பா எடுத்துக்காதேப்பா.... இப்படி காலோட போராடிட்டு இருக்கிறதனாலதான் நான் கேட்டுட்டேன். நீ செய்யறதுல, என்னை விடச் சந்தோஷப் படறவன் யாரும் இருக்க முடியாது. நானும் உங்கப் பாவும் பெல்லாரிலே மூணு வருஷம் ஒரே 'செல்'லுலே இருந்தோம். அந்த மனுஷனோட தேச பக்தி, சொதந்திரத்திலே இருந்த தாகம், எப்படியாவது தன் உசிரு போறதுக்குள்ள நாடு விடுதலை வாங்கிடணும்னு போராடின வேகம் எல்லாத்தையும் நான் அணு அணுவாய்த் தெரிஞ்சவன்.

''உங்க வம்சத்தவங்க இப்ப டணாய்க்கன் கோட்டைன்னு சொல்றாங்களே அந்தத் தண்டல்நாய்க்கன் கோட்டைக்குத் தில்லே தாரரா இருந்தவங்களாம். அடிக்கடி சொல்வாரு. அந்தத் தைரியம், ராஜபக்தி, விசு

வாசம், தேசத்தினேட மதிப்பு, சொதந்திர உணர்ச்சி எல்லாம் அவருக்கு வம்ச வம்சமா ரத்தத்திலே ஊறி இருந்தது. படிக்கிற காலத்தில இந்தப் பக்கம் நீலகிரிக்குப் போன கோயமுத்தூர் கலெக்டர் சனிவனைக் குறுக்காட்டி, இந்த ஊருக்கு ரோடும், ஆத்துக்குப் பாலமும் போட்டுத் தரலேன்னு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்னு சொல்லி, அப்படி இருந்தவராச்சே...... எல்லாரும். இது என்ன பொளப்புக் கெட்ட வேலேன்னு திட்டுனப்ப, இவர் காந்திக்கு லெட்டர் எளுதிக் கேட்டாரு. நா செய்யறது தப்பா ரைட்டான்னு? காந்தியும் உடனே 'நீ செய்யறது சரிதான். மூணு நாள்ல கோயமுத்தூர் சண்முகம் செட்டியார் பங்களாவுக்கு வந்து தங்கி இருக்கப் போறேன். அவருக்கும் உன்னைப் பத்தி லெட்டர்எழுதிட்டேன். அவரே கலெக்டரைப் பார்த்து வேண்டியதைச் செஞ்சிடுவாரு... நீ உண்ணாவிரதத்தைக் கைவிடு'ன்னு தந்தி அடிச்சிட்டாரு. மந்திரம் போட்டது போல அந்த மத்தியானமே டெபுடி கலெக்டரும், தாசில்தாரும் வந்து ரெண்டு நாள்ல ரோடு போடவும் ஆறு மாசத்திலே பாலம் கட்டவும் உறுதி சொன்னாங்க... உங்கப்பா உண்ணாவிரதத்தக் கை விட்டுட்டு, மூணாவது நாளு காந்தி அவுங்களை கோயமுத்தூர்ல போய்ப் பார்த்தாரு. அந்த மனுஷரு என்ன சொன்னாரோ என்ன மந்திரம் போட்டாரோ படிப்பு வேண்டாம்னு இவரு ஒதர்னாரு. காங்கிரஸ்ல சேந்தாரு. ரெண்டு வாரத்தில பெரிய பெரிய தலைவருங்களைக் கூட்டி வந்து மீட்டிங் போட்டாரு. இவரும் போயி ஊர் ஊராப் பேசினாரு... குமாரகிருஷ்ணன்னு தெரியாத ஆளு கெடையாது. நா அரைக்கால் டவுஜர் போட்டுட்டு அப்பத்தான் இந்த ஊருக்கு வந்த புதுசு. எங்கப்பா இன்ஸ்பெக்டரா இருந்து ரிடயராகி, அக்கரைல ஒரு பத்து ஏக்கர் நெலம் வாங்கிட்டு இங்கியே தங்கிட்டாரு. நா கடைசிப் பையன். அப்ப இருந்து இந்த ஊர்ல பழகி, இந்த ஜனங்களோட பேச்சும் கொணமும் ஊறியாச்சு. அவரு போட்ட பிச்சைலதான், நானும் கொஞ்ச காலம் மேல் சபை மெம்பரா இருந்திருக்கேன். சொதந்திரத்துக்குப் போராடினேனும். கெடச்சது. கொஞ்ச நாள் எல்லாம்



சரியா இருந்துச்சு. அப்புறம் மனசுக்குப் புடிக்கல்லே. ஒடம்புக்கும் முடியலே. வாலிபத்துல வாங்கின அடியெல்லாம் பின்னாலதான் வலியா ரணகளமா மாறிச்சு. வயதான மரம். ஆனா மரம் எப்படி இருந்தாலும் வேருக மட்டும் உறுதியா இருக்கு....''

''வாஸ்தவங்க. ஆனா எங்கப்பா இப்ப நீங்க படற அனுபவத்தக் காணலியே? இனி தேசத்துல சந்தோஷம் பொங்கி வழியும்னு நெனச்சு நெனச்சு இறுமாப்புலதான செத்தாரு? எங்க அக்காவுக்குச் சுதந்திர தேவின்னு பேரும், தங்கச்சிக்கு கஸ்தூரி பாய்ன்னும் வச்சாரு. எனக்குச் சாமிவேலுன்னு வெக்கணும்னு சொன்னதும், எங்கம்மா சொன்னுங்களாம் 'இது என்னங்க அவனுக்கும் காந்தி, படேல்னு ஏதாவது வய்யீங்கன்னு. ஆனா அவரு, 'எனக்குத் தேசம்னு என்ன, சொதந்திரம்னு என்னன்னு சொல்லிக் குடுத்தது எங்க அஞ்சாம் கிளாசு வாத்தியார் சாமிவேலு. அவரு போட்ட வெதைதான் இப்ப எனக்குள்ளே ஆலமரமா வளந்திருக்கு. யார மறந்தாலும் அவர மறக்கக் கூடாதுன்னு இந்தப் பேரு வக்கப் போறேன்'னு சொன்னாராம். இப்பேர்ப்பட்ட அப்பா கிடைச்சதுக்கு நாங்க ஜென்மம் ஜென்மமாப் புண்ணியம் பண்ணியிருக்கோணும். அவருக்குச் சத்தியம் பண்ணிக் குடுத்த மாதிரி, ஒவ்வொரு சொதந்திர தினத்திலேயும், கொறஞ்சது பத்து ஏழைங்களுக்கு விருந்து போடறத என் கடமையா வச்சிருக்கேன்.... அதைத் தவிர எனக்கு என்னங்க வேலே...''

''வாஸ்தவம், வாஸ்தவம்.''

இருட்டின் ஆதிக்கம் திரை வெளியாய்ப் பந்தலாய் வளர்த்துக் கொண்டது.

பையன் டவுஜரைக் கையில் பிடித்துக் கொண்டு வாசலைத் தாண்டிக் கொண்டிருந்தான்.

நடைக் கதவு சற்றுக் கிரீச்சிட்டது.

தனு, காலை உள்ளே வைத்தாள்.

பையன் அவளிடம் ஓடிப்போய் 'கால் கழுவி உடு' என்று கையைப் பிடித்தான்.

சர்மா மெல்ல எழுந்து கொண்டார்.

தனு, வெளியோரம் படுத்திருந்த கோழியைப் பிடித்துக் கூடை வைத்து அடைத்தாள். நடை வாசலை மூடிவிட்டு வெளித் திண்ணையில் உட்கார்ந்தாள்.

''ஏங்க... சர்மா என்ன சொன்னாருங்க?''

''உன்ற மாமனார் புகழ்.''

''ம்'' என்றாள் தனு.

''நீ போன சமாசாரம் என்னாச்சு?''

''உங்க முதலாளி கையை விரிச்சுட்டாரு. 'உன்ற புருஷனுக்கு ஐநூறு ரூபா குடுத்து வைத்தியம் பார்த்திருக்கேன். தரவேண்டிய சம்பளத்துக்கு மேலே குடுத்தாச்சு. இனி, கால் நல்லாயி, எப்ப வர்றது... எப்பஎன்ற கடனே அடைக்கிறது'ன்னு கேக்குறார். இல்லீங்க, நாளைக்கு சொதந்திர தெனத்துக்கு வழக்கமா ஒரு பத்துப் பேருக்கு விருந்து போடணும்... எங்க மாமனார் கிட்ட எங்க ஊட்டுக்காரரு கையடிச்சுச் சத்தியம் பண்ணிக் குடுத்திருக்காருங்க. பத்தொன்பது வருசமா நடத்தறாருங்கன்னு சொன்னேனுங்க அவரு சிரிக்கிறாரு... 'விருந்தாவது கிருந்தாவது? கேணத்தனமா இருக்கு. பேசாம, நீ வேலைக்குவா. வாரத்துக்கு அம்பது ரூவாயாவது வரும்'ன்னு சொல்றாரு.''

சாமிவேலு இன்னும் மௌனமானான்.

தனு, குளிரினால் முந்தானையை இழுத்து மூடிக் கொண்டாள். எதிர்ச் சிகரங்களில் காட்டுத் தீ தகதகவென்று எரிந்து அக்கினிப் பிழம்பாய்த் தெரிந்தது.

சாமிவேலு அதைப் பார்த்து விட்டுச் சொன்னான்.

''தனு, என்ற மனசுக்குள்ளாற மனசாட்சி அந்தத் தீக்கொழும்பு மாதிரி தகதகன்னு எரியுது. எங்கப்பாவுக்குள்ள இருந்த தேச பக்தியும் சொதந்திர உணர்ச்சியும் இப்பிடித்தான் எரிஞ்சது. யாருக்குள்ள என்ன எரியுதுன்னு அவங்களுக்குத்தானே தெரியும்? அதோட சூடும் அவசியமும் அவங்களுக்குத்தானே தெரியும்? ஆனா, இப்ப இருக்கிற பொருளாதார நெலைல அது சாத்தியம் இல்லேன்னு நமக்குத் தெரியுது...''

''அதத்தானே உங்க மொதலாளியும் நேரடியா ஆனா மொரட்டுத்தனமா சொன்னாரு?''

''அட, நீ என்ன... நாம என்ன மிட்டா மிராசா? உங்க மாமனார் நெனச்சிருந்தாரால் பகதூர், திவான்பகதூர்னு பட்டம் வாங்கிட்டு, பவானிக் கரையோரம் நாத்துக்கணக்கான ஏக்கர்களை வாங்கியிருக்கலாம். பத்துப் பேருக்கென்ன ஆயிரம் பேருக்கு விருந்து வைக்கலாம். ஆனா நடைமுறை எப்படி இருக்குது? ஒருத்தன் கிட்ட பண்ணை ஆளாகக் கைகட்டி நிக்க வேண்டியிருக்குது. நம்ம அப்பாதான் பெரிய அரசியல்வாதி ஆச்சேன்னு பள்ளிக்கூடம்கூட சரியாப் போகாம வெளியோரத்து 'ஒடக்காய' அடிச்சிக்கிட்டிருந்தாச்சு. தோட்டத்துக் கெணறு வெட்டிக்கிட்டிருக்கிற சமயத்தில நான் போகணுமா... உள்ள வசச வெடி வெடிச்சு, கால்ல உளுகோணுமா? இப்பப் படுத்துட்டுப் 'பண்டிதம்' பாக்கணுமா? இருக்கிற காசையும் இருப்புல இருந்த அரிசி, சோளத்தையும் தின்னு தீத்தாச்சு. மொதலாளி எத்தனே நாளைக்குப் பணம் குடுப்பாரு... நம்ம கால் ஒழுங்கு ஆகலேன்னு, வேலைக்கு எங்க போறது. பொளப்புத்தனம் எப்படி நடத்தறது? சோத்துக்கு



ராமு: ''நேத்திக்கு என் சொப்பனத்துலே என் கதை பிரசுரமான மாதிரி கண்டேன்.''

கோபு: ''அப்ப நிச்சயமா உனக்கு மணியார்டர் வரும்.''

ராமு: ''எப்ப?''

கோபு: ''சொப்பனத்திலே தான்!''

- ஜி. நடராஜன்


Non-soggy blue detergent cake washes dirt out, puts whiteness in
AVIX
"பாருங்க! நான் எவிக்ஸ் வில்லையை கடைசித் துண்டு வரைக்கும் உபயோகிக்கிறேன்!"
எவிக்ஸ்
நீலநிற டிடர்ஜெண்ட் வில்லை கெட்டியாக
இருப்பதற்காக, நீடித்து உழைப்பதற்காக,
அதிகமான துணிகளைத் துவைப்பதற்காகவே
விசேஷமாக கலவை செய்யப்பட்டது.
எவிக்ஸ் சக்தி வாய்ந்த 'வெண்மையூட்டும் பொருளைக் கொண்
டுள்ளதால் உங்களுடைய ஆடைகளை முன்பைவிட அதிக
வெண்மையாகவும் அதிக பளபளப்பாகவும் துவைக்கிறது.
நீங்கள் நீலநிற சாதனத்தை இனிமேல் சேர்க்கவேண்டியதில்லை.
ஈரக்கசிவற்ற எவிக்ஸ் நீலநிற டிடர்ஜெண்ட்
வில்லை அழுக்கை அறவே அகற்றுகிறது.
அதிகப்படியான வெண்மையைத் தருகிறது.
கோத்ரெஜ்
தயாரிப்பு
CHAITRA-G123-TAM

எங்க போறது? எங்கப்பன் பெரிய தேச பக்தர்னு சொன்னுச்சோறு கெடைக்குமா? இதை எல்லாம் பார்த்துத்தான் மொதலாளி பணம் குடுத்தாத் திரும்பி வராதுன்னு பணம் இல்லேன்னுட்டாரு... இந்த லட்சணத்துல உனக்குச் சத்தியம் ஒரு கேடா... உங்கப்பன் சொன்னுச் சொல்லிட்டுப் போறாரு. உன்ற பொளப்பப் பாருன்னுட்டாரு.''

இருட்டின் பரவலில் சாமிவேலுவின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. குரல் மட்டும் அழுத்தமாய்க் கணீரென்று கேட்டது. தனு, தன் பார்வையை வேலி தாண்டி, வாசல் நடை தாண்டி, மறைந்த மாமனாரின் உருவத்தில், அவர் பேச்சில், உணர்ச்சியில் செலுத்திக் கொண்டிருந்தாள்.

''தனு என்ன செய்யலாம்?''

''நமக்குத் தெரிஞ்சவுககிட்ட எல்லாம் கடனுக் கேட்டாச்சு. நிச்சயமில்லாத நம்ம எதிர்காலத்தை நெனேச்சிட்டு அவங்க எதை யாவது சாக்குப் போக்குச் சொல்லி இல்லேன்னுட்டாங்க... பேசாம இந்த வருசம் உட்டுறலாங்க. அடுத்த வருசம், சௌகரியம் இருந்தா, பத்துப் பேருக்கு இருபது பேரா விருந்து போட்டுறலாம்....''

தனு மெல்ல ஆனுல் பயந்துதான் சொன்னுள்.

''அதத்தா சர்மாவும் சொல்றாரு. எங்க மொதலாளியும் சொல்றாருன்னு சொல்றே. எனக்கும் அது சரிதான்னு படுது. ஆனு... யோசிக்கப் பார்த்தா தனு... அப்படி ஒண்ணும் முடியாத காரியமா நமக்குத் தோணுல. சர்மா சொன்னுப்ல மரம் பழசானுலும் வேருக — சொதந்திர உணர்ச்சி யோட வேருக கெட்டியானது. அதைப் பாழ் பண்ணுமயாவது நாம பாத்துக் கணும்....''

''வாஸ்தவங்க. எதையாவது வித்து அதப் பண்ணிடலாம். நாம இதுவரை அப்படிச் செய்யலியே? நம்ம கஷ்டப்பட்டு ஒழைச்ச பணத்திலேதானே செஞ்சோம்?''

''செஞ்சோம். இப்பச் செய்ய முடிய லியே.... செய்யாம இருந்தா மனசு என்னைக் குத்திக் குதறிப் போடும்... தனு...''

''சரிங்க... எந்தச் சாமானே விக்கறது துன்னு சொல்லுங்க.''

''அம்பது ரூபாயாவது வேணுமில்லே... எதை விக்கிறது? அந்த அளவுக்குச் சாமான் எதுவும் இல்லியே... புத்தி இல்லாமப் பொழச்சதுல மிச்சமானது ரெண்டு கோழியும் ஒரு ஆடும்தான். ஊடு அப்பா சம்பாதிச்சது. சாமான்களே உங்க அம்மா ஊட்டி லிருந்து கொண்டு வந்தே. அதை ஒண்ணும் செய்ய வேண்டாம்.''

''பின்னே?''

''உள்ளே போய், சாமி படத்துக்குக் கீழே நால் கண்டு இருக்குது. எடுத்துட்டு வா. அப்படியே மஞ்சளும் எடுத்தா.''

''எதுக்குங்க....''

''எடுத்தா.''

தனு எழுந்து மௌனமாய் எடுத்து வந்தாள்.

நூலைத் திரித்து கயிறுக்கு மஞ்சள் பூசி, ''இந்தா கிட்ட வா. இதக் கட்டிக்கோ'' என்று மஞ்சள் கயிற்றைக் கட்டிவிட்டான். கட்டின கையோடு, ஏற்கனவே இருந்த தாலிக் கயிற்றைக் கழற்றினுன்.

''இதுல இருக்கிற தங்கத்தை வித்துட லாம். நான் கஷ்டப்பட்டுத்தான் இத்தனை வருசமா சத்தியத்தை நிறைவேத்திக்கிட்டு வர்றேன். இப்பக் கடன் வாங்கியோ, வேற வழியிலியோ அதைச் செய்ய மனசு வரல. இந்தத் தாலி நான் பண்ணிக் குடுத்தது. கஷ்டப்பட்டுக் கல்யாணத் துக்குன்னு சேத்து வச்ச பணத்திலே செஞ்சது. என்ற வேர்வை இருக்குது. இதுல. காலைல நேரத்துல வெங்கட்ராமாச்சாரி கிட்டக் குடுத்துப் பணம் வாங்கிட்டு வர்ற வழிலே மளிகைச் சாமான்கள் வாங் கிட்டு வந்திடு. என்ன?''

''சரிங்க'' என்றுள் தனு.

''மனுசன்னு இருந்தா ஒரு கொள்கை வேணும். சும்மா சோத்த தின்னு வெளிக் குப் போயி ஆத்துல கழுவிட்டே இருக்கிறது மனுசன்லே சேத்தி இல்லே. நாம பிரமாதமா சாதிக்காட்டாலும் அப்பாருக்குக் கொடுத்த சத்தியத்தை மீறுமையாவது இருக்கணு மில்லே?''

''கொடுத்த வாக்கைக் காப்பாத்த லாங்க.... இப்ப என்னச்சு... நமக்கு? நானில்லயா உங்களுக்கு.... தைரியமா இருங்க....'' என்றுள் தனு. ''காலைல ஆகிற காரியத்தை நான் பாத்துக்கிறேன்.''


''ம்.''

இருட்டு முற்றிலும் முற்றி அதனை மேற் பார்வையிட நட்சத்திரங்கள் பளிச்சிட்டன. குளிரின் முற்றுகை அதிகரித்தது. ஆத் தோரத் தோப்பிலிருந்து வழக்கம்போல் இன்னதென்று நிதானிக்க முடியாத ஒலிகள் வந்து கொண்டிருந்தன.

பெரிய பையன் உள்ளே இன்னமும் படித்துக் கொண்டிருந்தான்.

சாமிவேலு தூரத்துத் தீக்கனலையே பார்த்துக் கொண்டிருந்தான்!

ஆட்டோ! மவுண்ட் ரோடு வரியா?
வராது சார்!
சென்ட்ரல் வரியா?
வராது சார்!
எக்மோர் வரியா?
வராது சார்!
மாம்பலம் வரியா?
சரி குந்து சார்.
நான் வராது போங்கய்யா! - பிரியா பாலு





பொன்னி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

கிரைண்டரில் தோசை மாவு அரைபட்டுக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தபடி நான் அருகில் ஸ்டூலின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

தாழ்வாரத்தில் பொன்னி முறத்தில் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் வேறு யாரும் இல்லை. என் கணவர் ஆபீசுக்கும் என் இரண்டு பையன்களும் ஸ்கூலுக்கும் போய்விட்டிருந்தார்கள்.

பொன்னி ஒன்றும்பேசாமல் மௌனமாகத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அது அவள் சுபாவத்துக்கு விரோதமாயிற்றே!

''என்ன பொன்னி பேசாம இருக்கே?'' என்று அவள் வாயைக் கிளறினேன், வேண்டுமென்றே.

''என்னத்தெப் பேசச் சொல்றே? படா ரோதனையாப்போச்சு ஒண்ணுமே புடிக்கலெ. எங்கினாச்சும் ஓடிப் பூடலாமான்னிக்குது'' என்று சலித்துக் கொண்டாள்.

''அப்படி என்ன ஆச்சு இப்போ? வள்ளி ஏதாவது வம்பு பண்றாளா?'' என்று கேட்டு வைத்தேன்.

வள்ளி அவளுடைய சக்களத்தி. அவளை விட வயதில் சிறியவள். ஆனால் வள்ளிதான் அவர்களுடைய கணவனுக்கு மூத்தாள். பொன்னி இளையாள். அதோடு மட்டுமல்ல; வள்ளிதான் முறையான அதாவது கல்யாணம் செய்து கொண்ட மனைவி. பொன்னி சும்மா அப்படிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவள்.

அவர்களுடைய கணவன் கன்னியப்பன் கன்னங் கரேலென்று இருப்பான். உடம்பின் நிறம்தான் அப்படி இருக்கிறதே, உடையாவது வெள்ளையாகப் போட்டுக் கொள்ள மாட்டானோ? நீலக் கலர் அரை டிராயரும் கறுப்பு அரைக் கைச் சட்டையும் தான் அவன் யூனிபார்ம். அவன் உடலில் கொஞ்ச நஞ்சம் வெண்மையாக இருந்தது அவனுடைய பற்கள் தான். அதைக்கூடச் சுத்தமாக வெண்மையாக இருக்க விடாமல் வெற்றிலை பாக்கு புகையிலையைப் போட்டுக் குதப்பிக் காவி வண்ணமாக அடித்து விடுவான்.

பொன்னி, வள்ளி இரண்டு பேரையும் விட இரண்டங்குலம் குறைவாகத்தான் இருக்கும் அவன் உயரம். உயரம்தான் இல்லையே அதை ஈடுகட்டப் பருமனாவது உண்டா என்றால் அதுவும் இல்லை. உடம்பைப் பிடிக்கிறாற்போல அவன் போட்டுக் கொள்கிற சட்டையைத் துருத்திக் கொண்டு, ''எங்களை எண்ணிக் கொள்ளுங்கள்'' என்கிற மாதிரி விலா எலும்புகள் புடைத்துக் கொண்டு நிற்கும். எப்பொழுதும் நோய், நொடி என்று ஏதாவது ஒன்றைச் சொல்லி மூக்கால் அழுது கொண்டே இருப்பான். மாதத்தில் பத்து நாட்களாவது வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே உட்கார்ந்து விடுவான்.

மெக்கானிக் வேலையில் அவன் என்ன சம்பாதிக்கிறான் கடவுளுக்கே வெளிச்சம். அதில் ஒரு பைசா கூட வீட்டுச் செலவுக்ென்று அவன் கொடுத்ததில்லை என்று பொன்னி சொல்லுவாள். வருகிற பணத்தையெல்லாம் குடிப்பதற்கும், சினிமாப் பார்ப்பதற்கும், சீட்டாடுவதற்கும், சீசனின்போது ரேஸ் ஆடுவதற்குமே செலவழித்து விடுவானாம்.

குடும்பம் நடந்து வந்தது, பொன்னி, வள்ளி இருவருடைய சம்பாத்தியத்தில்தான். பொன்னி எங்கள் வீட்டில் மட்டும்தான் வேலை செய்து வந்தாள். பெரும்பாலும் அவளுடைய காப்பி, டிபன், சாப்பாடு இவை எங்கள் வீட்டிலேயே முடிந்து விடும். அது போக மாதம் நாற்பது ரூபாய் சம்பளம் என்று கொடுத்து வந்தோம்.

வள்ளி மயிலாப்பூர் பெண்கள் பள்ளியில் ஆயாவாக வேலை பார்த்து வந்தாள். மாதம் நூற்றைம்பது ரூபாய் அவளுக்குச் சம்பளம் கிடைத்தது. அவளுக்கு மூன்று குழந்தைகள். மூன்றும் பெண்கள்தான். அஞ்சலை, சோலை மருதாயி என்று பெயர். அஞ்சலைக்கு வயது பத்து. சோலை மருதாயி இருவருக்கும் ஆறும் இரண்டும்.

கன்னியப்பன் பொன்னியைத் தன்னோடு ''சேர்த்துக் கொண்ட''போது அஞ்சலை மட்டுமே பிறந்திருந்தாள். பொன்னி வந்த பிறகு அவள் கண்ணெதிரே பிறந்தவர்கள் தான் சோலையும் மருதாயியும். மூன்று பெண்களுமே இளையவளான பொன்னியை வயது காரணமாகப் பெரியம்மா என்று தான் கூப்பிட்டு வந்தார்கள்.

என் கணவருக்கு ஆச்சரியம். அழகும் இளமையும் நிரம்பிய பொன்னி கன்னியப்பனிடம் எதைக்கண்டு மோகித்து அவனுடன் வந்தாள். வந்ததோடு அல்லாமல் இவ்

வளவு வருடங்களாக அவனோடு ஒட்டிக் கொண்டும் இருக்கிறான் என்று.

இயற்கையிலேயே வள்ளியைக் காட்டிலும் பொன்னி அழகி. அதோடு கூட வள்ளி மூன்று குழந்தைகளைப் பெற்றதனாலும், பள்ளிக்கூடத்தில் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தாலும், அவள் மேனியின் மினு மினுப்பும், மிருதுத் தன்மையும் குறைந்துபோய், சதைப் பற்று இழந்து, மெலிந்து காணத் தொடங்கியிருந்தாள். பொன்னி அப்படியில்லாமல் நல்ல உடற்கட்டோடும் ஆரோக்கியத்தோடும் விளங்கினாள்.

''ஆமாம், நேத்து ராவு முழுக்கத் தூக்கமே இல்லே. சண்டை. பேஜாரு போ.''

''ஏன், என்னவாம் அவளுக்கு?''

''நேத்து அவளோட முறை அம்மா. அவுரு சீக்காளி மனுசனுச்சேன்னு ஒனக்கு அறிவு வேணும்? முந்தில நாள் நான் பேசாமப் பக்கத்துலே குந்திகிட்டு அவருக்கு இதமா கையைக் காலெ அமுக்கி விடலே? அவுரெத் தூங்க விடாம தே, தேன்னு கொடஞ்சி. இனே இருக்காம்மா!''

கூச்சமில்லாத அவள் பேச்சு எனக்கும் சிரிப்பை மூட்டியது.

பொன்னி எங்கள் வீட்டில் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் போல ஆகியிருந்தது. என் கணவர் ஆபீஸ் வேலையாகத் திருச்சி வரை போய் வர வேண்டியிருந்தது. இரண்டே நாட்கள், ஒரு இரவு மட்டும் நான் தனியாக இருக்க வேண்டும். எனக்குப் பயமில்லை. ஆனால் அன்று பார்த்து என் மூத்த பையன் ராஜேஷுக்கு நல்ல ஜுரம். எனவே துணைக்கு யாராவது இருந்தால் தேவலை என்று தோன்றியது.

''நீ வந்து படுத்துக்க முடியுமா பொன்னி?'' என்று கேட்டேன்.

''இல்லேம்மா, இன்னிக்கு என்னோட முறை'' என்று கூறி வெட்கினாள்.

கடைசியாக, கன்னியப்பன், பொன்னி இரண்டு பேருமே வந்து எனக்குத் துணையாக எங்கள் வீட்டில் காவலுக்குப் படுத்துக் கொண்டார்கள்.

அவர்கள் வசித்து வந்தது எங்கள் வீட்டுக்கு அருகிலேயே இருக்கும் குடிசை மாற்று வாரியக் கட்டிடத்தின் ஒரு ஃப்ளாட்டில். ஒரே ஒரு படுக்கை அறைதான். எனவே, முறை யாருடையதாயிருந்தாலும் மற்றவளும் அதே அறையில்தான் இருக்க வேண்டிய நிலை.

வள்ளிக்கு, தான் பொன்னியைக் காட்டிலும் — ஏன் கன்னியப்பனைக் காட்டிலும்கூட அதிகம் சம்பாதிக்கிறோம் என்கிற கர்வமாம். அதனால் கன்னியப்பன், பொன்னி இரண்டு பேருமே தனக்கு அடங்கித் தன் விருப்பத்துக்கிணங்க நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறாளாம்.

''இவ ஜாஸ்தி சம்பாதிச்சா ஆயிடுத்தா? இவ குழந்தைகளாலேதானே செலவும் ஜாஸ்தியாகுது? அது தெரியுமா இவளுக்கு? என்னம்மா நா சொல்றது? இவ சம்பாரிக்கிறதுலே பாதித் துட்டு இவ புடவைக்கும் பவுடருக்கும், சினிமாவுக்கும்தானே செலவழியுது? எனக்கா செலவழிக்கிறா? என் முக்காவாசி நாளும் நீயே போட்டுடறே. அப்புறம் என் நாப்பது ரூவாயிலே எனக்கென்னம்மா செலவு? நீயே சொல்லு'' என்று பொரிந்து கொட்டுவாள்.

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு தகராறு அவர்கள் வீட்டில் நடந்து கொண்டே இருக்கும். அதையெல்லாம் என்னிடம் வந்து சொல்லிக் கொள்வாள்.

கன்னியப்பனுக்கும் வள்ளிக்கும் இடையே ஏதோ பலத்த மனஸ்தாபம் ஏற்பட்டது. வள்ளியின் வீட்டார் (அவரது அண்ணன்மார், மாமன்மார் முதலியவர்கள்) வந்து கன்னியப்பனோடு சண்டை போட்டுக் கைகலப்பும் அடிதடியும் நடந்து அதன் முடிவில் வள்ளி கன்னியப்பனை விட்டு விட்டு அவள் ஜனங்களோடு போய்விட்டாள்.



ஆனால் குழந்தைகளைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போகவில்லை.

குழந்தைகளைப் பராமரிக்கிற பொறுப்பு கன்னியப்பன் தலையில் விழுந்தது. ஆனால் அந்தப் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ளக்கூடிய மனுஷனாக அவன் இல்லாததால் உண்மையில் பொறுப்பு முழுவதையும் பொன்னிதான் சுமக்க வேண்டியிருந்தது.

''இதென்ன அநியாயம் பார்த்தியாம்மா. புருசனைத்தான் வேண்டானிட்டு ஓடினா. பெத்த புள்ளங்களைக்கூடவா எக்கேடோ கெட்டுப் போகட்டும்னு வுட்டுட்டுப் போவா ஒருத்தி? என்ன மனுஷிம்மா இவ?'' என்றாள்.

வள்ளியின் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டே வேலைக்கு வரத்தொடங்கினாள் பொன்னி. அந்தலை பொன்னிக்குக் கூட மாட இருந்து ஒத்தாசை செய்து வந்தாள். சோலை குழந்தை மருதியைப் பார்த்துக் கொள்வாள். அக்குழந்தைக்கு என்ன உடம்போ தெரியவில்லை. வயிறு உப்பிப் போய், கை கால்களெல்லாம் சூம்பிப்போய் என்றைக்குப் பிராணனை விட்டு விடுமோ என்பது போல இருந்தது. எப்போது பார்த்தாலும் அழுகை.

என் கணவருக்கோ இந்தக் குழந்தைகளை வீட்டில் பார்க்கும்போது கோபம் பொத்துக் கொண்டு வரும். பொன்னி ஏன் கிடந்து உயிரை விட்டு அவைகளைப் பராமரிக்க வேண்டும் என்பதுதான் அவருக்கு ஆத்திரம். குழந்தைகளையும் கொண்டு போய் அவளிடமே தள்ளிவிட்டு வந்துவிடும்படி கன்னியப்பனிடம் கத்துவார்.

பொன்னி அவைகளுக்குப் பரிந்துகொண்டு வருவாள். ''அவ ஒரு பெத்த தாயாம்மா? குழந்தைங்களைக் கொன்று போட்டாலும் போட்டுடுவா. அவளுக்கு அவுரே வேண்டானப்ப அவுரோட குழந்தைங்க மாத்திரம் எதுக்கம்மா?'' என்று கேட்பாள்.

அந்தப் பெண்களை எங்கள் வீட்டிலேயே கிணற்றங்கரையில் குளிப்பாட்டுவாள். தலை பின்னி விடுவாள். அவளுக்கென்று நாங்கள் கொடுக்கும் சாப்பாட்டை உருட்டி உருட்டி அந்தக் குழந்தைகளின் கையிலே போட்டுச் சாப்பிடச் சொல்வாள். சில சமயங்களில் கன்னியப்பனும் உட்கார்ந்து அவளிடமிருந்து

''ஏண்டா! அதோ போறாளே ஒரு பொண்ணு செக்ஸியா டிரஸ் செய்துக்கிட்டு அவளை என்னன்னு கூப்பிடலாம்?''

''A' பொண்ணு!...'' - கிருஷ்ணராஜ்



தாச உருண்டைகளைக் கையில் வாங்கி வாங்கிச் சாப்பிடுவான்.

வள்ளி போன ஒரு மாதத்துக்கெல்லாம் அந்த மூன்றாவது பெண் — மருதாயி — செத்துப் போய்விட்டாள். கன்னியப்பனும், பொன்னியும்தான் கதறிக் கதறி அழுதார்களே ஒழிய பெற்ற மகராசி குழந்தையின் சடலத்தைப் பார்க்கக் கூட வரவில்லை.

அவ்வளவு கல் நெஞ்சக்காரியாக இருப்பவள் இனி கணவனிடம் திரும்பி வரவே மாட்டாள் என்றுதான் நானும் என் கணவரும் நினைத்தோம்.

ஆனால் நாங்கள் நினைத்தபடி நடக்கவில்லை. குழந்தை இறந்த பதினைந்தாவது நாளே திரும்பி வந்து குதித்தாள் ஒரு நாள்!

அவள் திரும்பி வந்தது கூட எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. அப்படி அவள் வந்தால் செருப்பைக் கழற்றி அவள் முகத்தில் அடித்து அவளைத் துரத்தியடிப்பேன் என்று கூறிய கன்னியப்பன் அப்படியெல்லாம் ஒன்றும் செய்யாதது மட்டுமல்ல, பல்லை இளித்துக் கொண்டு அவளை மாலை போட்டு வரவேற்காத குறையாக வீட்டுக்குள் சேர்த்துக்கொண்டதுதான் ஆச்சரியமாக இருந்தது. அப்படி அவன் மறுபடியும் அவளைச் சேர்த்துக்கொண்டதை எதிர்த்துப் பொன்னி ஒரு வார்த்தை கூடச் சொல்லாதது அதைவிட ஆச்சரியமாக இருந்தது.

''என்னடி பொன்னி, இப்படிப் பண்ணிட்டீங்க ரெண்டு பேரும்? மறுபடியும் எப்படி அவளை வீட்லே சேர்த்துண்டீங்க?'' என்று கேட்டேன்.

''என்னம்மா செய்யச் சொல்றே? என்ன இருந்தாலும் கட்டின பொண்டாட்டியாச்சே! வேண்டாம் போன்னு சொல்லிட முடியுமா? என்னை மாதிரி இருந்தாலாவது போமன்னு கழுத்தைப் புடிச்சு வெளியே தள்ளலாம்'' என்றாள் கொஞ்சம் கூட ஆத்திரப்படாமல்.

''நீ வாழ்ந்தே போ, சரியான இளிச்சவாய்'' என்று அவளைத் திட்டினேன்.


அவள் சிரித்தாள். அவ்வளவுதான்.

வள்ளி திரும்பி வந்த பிறகு அவளைப் பற்றியும் கன்னியப்பனைப் பற்றியும் பொன்னியின் புகார்கள் அதிகமாகத் தொடங்கின. முன்பு இருந்ததை விட இப்பொழுது அவளுடைய அட்டகாசம் கூடுதலாக இருப்பதாகவும், முன்பெல்லாம் இருவரையும் சமமாக நடத்திய கன்னியப்பன் இப்பொழுது முழுக்க முழுக்க அவள் ஆட்டியபடி ஆடுவதாகவும் அவன் பொன்னியை அடிக்கக் கூடக் கையை ஓங்கிவிடுவதாகவும் நன்றாக ஏதோ சொக்குப் பொடி போட்டுவிட்டாள் போலிருக்கிறது என்றும் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு துயரக் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒண்ணுதான் எனக்குப் புரியலே, இவ வயசானவளாயிருந்தாலும் வள்ளியை விட அழகா இருக்கா. உடம்பு கட்டுக் குலையாம இருக்கு. இவளை விட்டுட்டு அந்த வள்ளி கிட்டே என் மோகம் அவனுக்கு?'' என்று கேட்டார் கணவர்.

''அவ கிட்டே மோகமும் இல்லே, ஒரு மண்ணும் இல்லே. அவளுக்கு மறுபடியும்

உன்னதமான ஸ்டீரியோ ஸிஸ்டம் இந்தியாவின் நவீன ஸ்டீரியோ ரேடியோவுடன் கூடியது



பிலிப்ஸ்
ஹை-க்யூ இன்டர்நேஷனல்
ஸ்டீரியோ ஏஎம்/எஃப்எம் ட்யூனர் ஆம்ப்ளி:பையர்

ஒரு பட்டனை அழுத்தவும்... அது ஒரு உயர்சக்தி ஸ்டீரியோ ஸிஸ்டம்.

ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளி:பையருடன் பிளேயர் அல்லது டேப் ரிக்கார்டரை இணைக்கவும்—உடனடியாக உங்களுக்கு கிடைக்கிறது. ஒரு சிறந்த ஸ்டீரியோ ஸிஸ்டம்.

மற்றொரு பட்டனை அழுத்தவும்—அது ஒரு எஃப் எம்முடன் கூடிய 5-பாண்டு ஸ்டீரியோ ரேடியோ.

புதிய எஃப் எம் பாண்டுடன் (எஃப்எம், ஏற்கனவே கல்கத்தா மற்றும் சென்னையில் கிடைக்கிறது. மேலும் மற்ற முக்கிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் உள்ளது.) கூடிய முதல் ஆம்ப்ளி:பையர் ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளி:பையர் ஆகும். டிவி ஒலிபரப்புகளை பெறுவதற்கு, ட்யூனரைக் கூட மாற்றி அமைக்க முடியும்.

ரேடியோகிராம்களுக்கும் கூட உன்னதமானது!

நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்தவிதமான ரேடியோ காபினெட்டிற்கும் எங்கள் ஹை-க்யூ ட்யூனர் ஆம்ப்ளி:பையர் சுலபமாக இணையக்கூடியது.

இலாபம் உங்களுக்கு!

தனிப்பட்ட ஸ்டீரியோ ஸிஸ்டம் (ஒற்றுமையான வாட்டேஜ்) மற்றும் ஸ்டீரியோ ரேடியோவை விட பிலிப்ஸ் ஹை-க்யூ ஸ்டீரியோ ட்யூனர் ஆம்ப்ளி:பையர் விலை குறைவு. இன்றே உங்கள் பிலிப்ஸ் டீலரை காணுங்கள். ட்யூனர் ஆம்ப்ளி:பயரின் ஒலியை கேட்டு மகிழுங்கள்.

PHILIPS

பிலிப்ஸ்
இந்தியாவில் 50 ஆண்டுகள்

OBM/3179 TM

ஆசிரியர்: ''உங்க பையன் பாதிநாள் ஸ்கூலுக்கு வர்றதே இல்லே..''

பையனின் தந்தை: ''அப்படியா?... இனிமே அவனைக் கண்டிச்சுத் தினமும் அனுப்பி வைக்கிறேன்...''

ஆசிரியர்: ''ஐயோ!... வேண்டாங்க... அவன பண்ற விஷமத்துக்குப் பாதிநாள் வர்றதே போதும்,... எல்லா நாளும் அனுப்பிடாதீங்க!...''

வி. என். ராஜராஜன்



அந்த ஸ்கூல்லே வேலே கிடைச்சாச்சு. அவ கைல கிடைக்கிற பணத்தின் மேலேதான் மோகம் அவனுக்கு. அவனுக்கு அநுசரணை யாயிருந்தாத்தானே இவன் குடிக்கிறதுக்கும் சீட்டாடறதுக்கும் இவனுக்குப் பணம் குடுப்பா?''

வள்ளி திரும்பி வந்து இருபது நாட்க ளாயின. மறுபடியும் அவர்கள் வீட்டில் பெரிய சண்டை. ஆனால் இந்தத் தடவை கன்னியப்பனை விட்டு விட்டு ஓடியவள் வள்ளி அல்ல. பொன்னி.

அப்படி ஓடியவள் வேறு எங்கும் போகாமல் எங்கள் வீட்டிலேயே இனிமேல் தங்கி விடப் போவதாக அவளாகவே முடிவு செய்துவிட்டாள்.

அவளை வீட்டோடு வைத்துக் கொள்ள எங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் அவள் கோவில் குளத்திலோ கடலிலோ விழுந்து விடுவதாகப் பயமுறுத்தினாள்.

அப்படி ஏதாவது செய்து வைத்துவிடப் போகிறாளே ஸ்திரீஹத்தி தோஷம் வந்து விடப் போகிறதே என்று பயந்துகொண்டு வந்தது வரட்டும் என்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அவளை எங்கள் வீட்டில் தங்க அனுமதித்து விட்டோம்.

ஒரு நான்கு நாட்கள் எந்த விதமான சம்பவமும் நிகழவில்லை.

ஐந்தாவது நாள் காலையில் கன்னியப்பன் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்று கொண்டு பொன்னியை வெளியே வரும்படி கூவி அழைத்த வண்ணம் வசவுகளை அள்ளி விட்டுக் கத்திக் கொண்டிருந்தான்.

நானும் என் கணவரும் பொன்னியை வெளியே போய் அவனைச் சமாதானப் படுத்தி உள்ளே அழைத்துக் கொண்டு வரவோ அல்லது அவர்கள் வீட்டுக்கே அழைத்துக் கொண்டு போகவோ சொன்னோம்.

''ஏன்யா கத்தறே எருமை மாட்டுக் கணக்கா? இப்ப நா வேண்டியிருக்குதோ உனக்கு? நா வரமாட்டேன் போ. உன் பொண்டாட்டி இல்லே ஊட்லே? அவ பொங்கிப் போடுவா துண்ணு...'' என்று அவள் அசிங்கமான வார்த்தை ஒன்றைச் சொல்ல, பளீரென்று ஓர் அறை விழுந்தது அவள் முகத்தின் மீது.

''என்னடி மூதேவி சும்மா சும்மா நாக்கை ஆட்டிக்கிட்டே இருக்கே? உடம்பு துளுத்துப் போச்சா? ஏண்டி'' என்று அவள் தலை மயிரைப் பிடித்து இழுத்து அவளைக் குனிய வைத்து முதுகின் மீது குத்தினான்.

''ஐயோ, ஐயோ.. அடப் பாவி போட்டுக் கொல்றானே. உன் கண்ணு அவிஞ்சு போக. உன் கையி ஒடிஞ்சு போக.'' என்று பொன்னி ஓலமிட ஆரம்பித்தாள்.

கூட்டம் கூடி விலக்கவே கன்னியப்பன் அவளை வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுப் போய்விட்டான்.

பொன்னியை நாங்கள் சமாதானப்படுத்தி ''இனிமேல் நீ இங்கிருப்பது நல்லதில்லே பொன்னி, உங்க வீட்டுக்குப் போயிடு. இல்லேன்னு உங்க ஊருக்குப் போயிடு'' என்று சொன்னோம்.

பொன்னி அழுது கொண்டே ''அம்மா! இத்தினி நாள் வரைக்கும் அந்த ஆள் என்னைக் கைதொட்டு அடிச்சதில்லே. இன்னிக்கு அடிச்சிட்டான். இனி நா செத்தாலும் சாவேனே தவிர அந்த ஆள் ஊட்டு வாசல்படி மிதிக்க மாட்டேன். நாலு நாள் எனக்கு டயம் கொடு. இனி இந்த மெட்ராஸிலேயே காலடி எடுத்து வைக்கப் போறதில்லே'' என்றாள்.

நாலு நாள் என்று சொன்னவள் ஆறு நாள் ஆகியும் வீட்டை விட்டு நகரும் வழியாக இல்லை. வீட்டு வேலைகளை மட்டும் ஜரூராக வழக்கம் போல் செய்து வந்தாள்.

ஏழாவது நாள் காலையில் வாசலில் ஏதோ பேச்சுக் குரல் கேட்டு எழுந்து போய்ப் பார்த்தேன்.

பொன்னியுடன் வள்ளியின் மூத்த மகள் அஞ்சலை பேசிக் கொண்டிருந்தாள்.


''என்ன பொன்னி?'' என்று கேட்டேன்.

''நா ஊட்டுக்குப் போறேம்மா. அவுருக்கு உடம்பு சீக்கா இருக்காம். கஞ்சி வெச்சுக் குடுக்கறதுக்குக் கூட ஆள் இல்லியாம். பொன்னி, பொன்னின்னு பினாத்திக்கிட்டுக் கிடக்கிறாராம்!'' என்றாள்.

''என்னமது? நிஜமாத்தான் சொல்றியா? வள்ளி இல்லியா, பாத்துக்க மாட்டாளா?''

''ஐயோ, அந்தச் சனுதைக்கு ஒரு எளவும் தெரியாதும்மா. அவுரேச் சாகடிச்சிடுவா அவ. நா போறேம்மா'' என்று கூறிவிட்டு என் பதிலுக்காகக் காத்திராமல் ''வாடி போகலாம்'' என்று அஞ்சலையைத் தோள் மீது கைவைத்துத் தள்ளிக் கொண்டு நடந்து விட்டாள்.

பொன்னி, வள்ளி, கன்னியப்பன் மூவரையுமே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மலைத்துப் போய் நின்றுவிட்டேன் சில விநாடிகள். பிறகு என் கணவரிடம் அந்த அதிசயத்தைச் சொல்வதற்காக உள்ளே திரும்பினேன்.






கருத்துக்கினிய ஒரு காட்சி!

— டி. எஸ். கே



ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை உண்டு. நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு.

-அராபிய பழமொழி



தஞ்சை மாநகரில் சென்ற மாதம் நடந்தது, மருத்துவக் கண்காட்சி.

திருமணம் செய்து கொண்டவனுக்குப் பிள்ளையே பிறக்கவில்லையாம். அவள் வேதனையைப் பாட்டாகப் போட்டிருந்தார்கள்.

பெண்ணாய்ப் பிறந்தவள்
கணவனை அடைந்தவள்
தாயாக இயலாத
தவிப்பினை ஒருதுளி
பகிரத்தான் இயலுமோ
படைத்தவனுக்கே!

"இது என்ன விருத்தம்?" என்று கேட்டேன், விளக்கத் தயாராய் நின்ற மாணவரை.

"இது விருத்தம் இல்லை ஸார் — வருத்தம்!"

இப்படி மகவுக்காக ஏங்கும் மனையாட்டியின் மனநிலையை நினைத்துக் கொண்டே அடுத்த வரிசைக்குள் நுழைந்தேன். அங்கேயும் ஒரு சிறிய பாட்டு:

தினம் ஒரு மாத்திரை — தீராத இன்பம்
மாத்திரையை மறந்தால்—மாளாத துன்பம்!

⌘ தஞ்சை மருத்துவக் கல்லூரி

⌘ கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பேசுகிறார் சுகாதார அமைச்சர் மாண்புமிகு நாராயணசாமி முதலியார் ஹண்டே.

⌘ "ஷாக் - டிரீட்மெண்ட்" - சுற்றிலும் உள்ளவர்களுக்கு அல்ல! போட்டோ: எஸ்.பி.எஸ். தஞ்சை

"மிஸ்டர் மாணவரே! இது என்ன வருத்தம்?" என்றேன், சற்றுக் குத்தலாக.

மருத்துவ மாணவர் சளைப்பாரா? "இது வருத்தம் இல்லை, சார். திருத்தம்!" என்றாரே பார்க்கலாம்.


● ● ●

"இந்தப் பகுதியில் STD ஐப் பற்றி விளக்கியிருக்கிறது...."

"அப்படியென்றால்?"

Sexually transmitted diseases தகாத பால் உறவின் காரணமாகத் தோன்றும் நோய்கள் என்று பெயர்."

அந்தக் காலத்தில் V. D. என்று சொல்லப்பட்ட நோய்களை இந்தக் காலத்தில் S.T.D. என்கிறார்களாம்.



அனுமான் பிரம்மச்சாரியா? இல்லை. அநங்க சுதாவை மணந்தவர் அநங்கசுதா யார் தெரியுமோ? இராவணனின் உடன் பிறப்புக்களில் ஒருவரின் மகள்.

லட்சுமணர் தன் ஒரேமனைவிக்குத் தனது தூக்கத்தையும் கொடுத்துவிட்டு அண்ணனையும் அண்ணியையும் காவல் புரிய விழிப்பாய் இருந்தார் என்று எண்ணுகிறீர்கள். மகாபாரத அர்ஜுனன் போன்று பல மனைவிகளை மணம்கொண்டவர் அவர். அவர் தான் இராவணனைக் கடைசியில் கொன்றவர்; இராமர் அல்ல.

அப்படியா என சந்தேகமா? பதும பலதேவாவின் புராணம் படியுங்கள். பதும பலதேவா யார் என்கிறீரா? அதுதான் ஜைன நாமம் ஸ்ரீராமருக்கு. ஜைன ராமாயணம் தான் பதும புராணம்.

- கே. ஆர். மூர்த்தி

ரொம்பப் பேர்களைப் பற்றியிருக்கின்றனவாம் இவ்வகை நோய்கள்!

ஒரு சின்ன டி. வி. பெட்டி போன்ற கருவியில் ஒரு சீரான செங்குத்தாய் ஒரு ஒளிக்கோடு ஓடிக் கொண்டே இருக்கிறது. Cardiac Monitor என்று பெயர். இருதயத் துடிப்பின் போக்கினை உடனுக்குடன் காட்டுகிறது. விநாடிக்கு எத்தனை துடிப்பு என்றும் எண்களால் குறிக்கிறது.

''நீங்கள் கொஞ்சம் ஸ்ட்ரெச்சரில் படுத்துக் கொள்ளுங்களேன். உங்கள் இருதயத் துடிப்பைக் காணலாம்...''

ஒரு விநாடி ஆசைக்குப்பின் சமாளித்துக் கொண்டேன். 'என் பக்கத்து வீட்டுக்காரருக்கு நான் உபகாரம் செய்யாத போதெல்லாம்''இருதயமே இல்லாத மனிதர் ஐயா நீர்!'' என்று என் செவியில் படும்படியாகவே அர்ச்சனை செய்திருக்கிறார். ஒருவேளை அது உண்மையாக இருந்து விட்டால்?...'

● ● ●

''பிளாஸ்டிக் நீங்களே தயாரிக்கிறீர்களா? அல்லது கடையிலிருந்து வாங்கிக் கொள்கிறீர்களா?''

ஹோ என்று நையாண்டிச் சிரிப்பு, என்னைச் சுற்றிலும். அப்படி என்ன தப்புப் பண்ணிவிட்டேன், என்னைப் பார்த்துச் சிரிப்பதற்கு?

''மன்னிக்க வேண்டும், சார்... உங்களிடம் ஒரு சின்னக் கேள்வி.''

''தாராளமாய்க் கேளுங்கள்.''

''மைசூர் போண்டாவில் மைசூர் எங்கே இருக்கிறது? மூக்குப் பொடியில் மூக்கு எங்கே இருக்கிறது? அதே போலத்தான் பிளாஸ்டிக் சர்ஜரியில் பிளாஸ்டிக்குக்கு வேலையில்லை! புற உடலில் உள்ள சில சிறு குறைபாடுகளை சஸ்திர சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்து கொள்வதற்குப் பெயர் தான்...''

''பிளாஸ்டிக் சர்ஜரி என்பது எனக்குத் தெரியாதா..... சும்மா உங்களை எல்லாம் ஒரு மடக்கு மடக்கிப் பார்த்தேன்!''

● ● ●

உயிரியல் மேதை லூயிபாஸ்ச்சர் (Louis Pasteur) என்பவரைப் பற்றி நமக்கெல்லாம் தெரியும். அவர் தம் ஆராய்ச்சிகளின் போது எப்படிக் குறிப்பெடுத்திருப்பார்: அவர் குறிப்புகள் எம்மாதிரி இருந்திருக்கும்?

சுமார் நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன் அவர் கைப்பட எழுதிய குறிப்புக்களின் ஒரு பக்கத்தைப் போட்டோவில் கண்டபோது மெய்மறந்தேன். அந்த மாபெரும் ஆராய்ச்சியாளரின் கையெழுத்தைக் காண்கிறேன்! ஆகா! தேதி என்ன தெரியுமோ 12, பிப்ரவரி 1861.

● ● ●

''எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் நன்மை ஏதும் இல்லை'' — இந்த அறிவிப்பு, என் கடைசிப் பெண்ணின் கண்களில் பட்டு விட்டது. ஒரே ஆனந்தம் அவளுக்கு.

''அம்மா கிட்டே போய்ச் சொல்லுங்கோ அப்பா'' என்றாள். வெள்ளிக் கிழமைகளில் நடக்கிற எண்ணெய் தேய்ப்பு யுத்தக் காட்சி என் முன் விரிந்தது.

அடுத்த பலகை: ''விளக்கெண்ணெய் சாப்பிடுவது கூடாது.''

''விசாலாட்சி! இதையும் அம்மாவிடம் சொல்கிறேன்!'' என்று நானே முந்திக் கொண்டேன்.

● ● ●

''இது உளவியல் மருத்துவத் துறை. மனிதர்களின் எந்தச் செயலுக்கும், ஓர் உளவியல் அடிப்படையான காரணம் இருக்கும். மனவலிமை குறைந்தவர்களே, தாங்கள் அவதிப்படுவதோடு, தங்களைச் சேர்ந்தவர்களையும் அவதிக்கு உள்ளாக்குகிறார்கள். இந்தத் துறையில் பணிபுரியும் மருத்துவருக்கு அளவு கடந்த பொறுமையும், மனிதாபிமானமும் வேண்டும். உதாரணமாக, நீங்கள் சட்டென்று சமநிலை இழந்து 'வள்ளென்று பாய்கிறீர்கள் என்றால்...''

மேலே கேட்கவில்லை நான். விருட்டென்று நகர்ந்துவிட்டேன். நான் அடிக்கடி 'சமநிலை இழந்து வள்ளென்று பாய்'வதை எந்த இட்சணிதான் இந்த மாணவரிடம் சொல் வித்ரோ?

● ● ●

சூற்றவியல், காது, மூக்கு, தொண்டை, ரத்தசெமிப்புத் தகவல்கள், நரம்பியல் என்

தெல்லாம் பார்த்துக் கொண்டு கூட்டத்தில் இடிபட்டு, சோர்ந்து போனேன். கொஞ்ச நேரம் தனியாக இருக்க மாட்டோமா என்றிருந்தது. 'வாருங்கள், அடபடிச் சத்த மில்லாத, சந்தடி இல்லாத பகுதிக்கு அழைத்துப் போகிறேன்' என்றார், உடன் வந்த மருத்துவ மாணவர் திரு பாண்டி.

போனோம், ஓர் அறைக்கு. 'இந்திய முறை மருத்துவம்' என்று பலகை அறி வித்தது. யாரோ ஒருவர் அரைத் தூக்கத் தில் இருந்தார். உறங்குபவரை எழுப்பு வது பாவம் என்பது பாட்டியின் அறிவுரை. நானோ, கண்காட்சிக்கு வந்திருந்த ஆயிரக் கணக்கானவர்களோ அந்தப் பாவத்தை அறவே செய்யவில்லை!

• • •

கலப்படம் பற்றிய ஆராய்ச்சிப் பகுதி. உள்ளே நுழைந்தோம். ஏழெட்டு மாண விகள் வரவேற்றனர் — கலப்படமில்லாத புன்னகையுடன்.

''இது, சுத்தமான தேங்காயெண்ணெய் இல்லை, கலப்படமானது. முகர்ந்து பாருங்கள், அசல் மாதிரியே இருக்கும். இதைத் தேய்த் துக்கொண்டால், முடி நரைத்துப் போகும்'' என்று என்னை நிமிர்ந்து பார்த்தாள், அந்த மாணவி. எனக்கொன்றும் அவமானமாக இல்லை. என் தலையில் இன்னும் நாலைந்து கருமையான இழைகள் இருக்கத்தான் இருந்தன. நான் ஏன் அவமானப்பட வேண்டும்?

• • •

திருவிழாக் கூட்டம் போல் அக்கம் பக்கம் மாவட்டங்களிலிருந்தும், பெரியவர்களும் சிறியவர்களும் வந்து கண்காட்சியைப் பார்த்தார்கள்.

பாமர மக்களும் பயன்பெறுமாப் போலே அமைத்திருக்கும் கண்காட்சியில், எலும்புக் கூடுகளின் வாத்ய இசை, 'உருகும் மனிதன்', 'எலும்புக் கூடுகளின் பூஜை', 'வெட்டப் பட்ட தலை பேசுகிறது' — எல்லாம் அவ சியமா? இப்படி யெல்லாம் சக்தியைச் செலவழித்து உங்கள் நேரத்தையும் எங்கள் காசையும் வீணாக்காதீர்கள். ரிப்பன்—வலோ யல், பொரிகடலை எக்ஸிபிஷனில் இவைகளை யெல்லாம் பார்த்துக் கொள்கிறோம்.

• • •


இருபத்தியாறு பகுதிகளையும் பார்த்து முடிக்கும்போது, நமக்கு ஒரு விடுதலை உணர்ச்சி உண்டாகிறது. இனிமேல் நம்மை எதுவும் பயமுறுத்துவதற்கில்லை அல்லவா? ஒவ்வொரு பகுதியையும் பார்க்கும்போது, நமது ஒவ்வோர் அவயவத்துக்குள்ளும் ஏதோ ஒரு நோய் ஒளிந்துகொண்டிருப்பது போன்ற உள் மனக் கலக்கம், கடைசி யிட்டால் — சுவாச நோய்ப் பகுதி!—பார்த்து விட்டு வரும்போது, நீண்ட பெருமூச்சாய் வெளியேறுகிறது.

• • •

பல பகுதிகளிலும் சிகரெட் குடிப்பதனால் உண்டாகும் தீமைகளை, பலவிதமாக விளக்கியிருந்தார்கள். மனத்தில் உறைக் கும்படியாக இருந்தது.

• • •

தஞ்சை மருத்துவக் கல்லூரிப் பேராசிரி யர்களும் மாணவ — மாணவியரும் ஒரு சாதனையைச் செய்து காட்டியிருக்கி றார்கள். வரும் ஆண்டுகளில் இன்னும் உயர் வாகவே செய்வார்கள்.



பிளேட் இட்லிகள் அல்ல!

மூன்றும் உலக யுத்தம் வந்து மனிதகுல நாக ரிகமே அழிந்து விடுமோ என்ற அச்சம் மேலைநாடுகளில் தோன்றிவிட்டது. எனவே, சரித்திர சாசனங்கள், கலைப்படைப்புக்கள் போன்றவற்றை வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாத்து வைக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்துள்ளனர். அவற்றை மைக்ரோ ஃபிலிம் செய்து, காற்றுக் கூடப் புகாத எஃகுப் பெட்டகங்களுக்குள் அடக்கி, பயனற்றுப் போன பழைய சுரங்கங்களில் வரிசையாக அடுக்கு கிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் 200 மீட்டர் கனமுள்ள பாறைகளுக்கு அடியில் ஒரு சுரங்கம், சரித்திர கலைப் பொக்கிஷங்களின் காப்பகமாக மாறியுள்ள தைப் படத்தில் காண்கிறோம்.



பணமீட்சி 5 ஆண்டுகளுக்குப் பின்


குறித்த இடைக்காலங்களில் ரொக்கப்பணம் பெறுங்கள். அத்துடன் ஆயுள் பாதுகாப்பையும் அடையுங்கள்.



பணமீட்சி மீண்டும்
10 ஆண்டுகளுக்குப் பின்



பணமீட்சி மீண்டும்
15 ஆண்டுகளுக்குப் பின்



பணமீட்சி மீண்டும்
20 ஆண்டுகளுக்குப் பின்

பண மீட்சிப் பாலிசி

தற்கால வாழ்க்கை முறையில் ஏற்படும் தேவைகளை சமாளிக்க் ஒரு லட்சியத் திட்டம்.

இதோ ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டம்—உங்களுக்கு சமகால அளவுகளில் பணத்தைத் திரும்ப அளிக்கிறது மன்றி பாலிசியின் காலத்தில் உங்கள் குடும்பத்திற்கு முழு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பையும் கொடுக்கிறது.

பணமீட்சிப் பாலிசி 12 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அல்லது 25 ஆண்டுகள் பேரன்ற கால அளவிற்கு கிடைக்கின்றன. பாலிசிதாரர் தேர்ந்தெடுக்கப்படும் கால அளவைப் பொறுத்து மூன்று அல்லது நான்கு தவணைகளில் முழுப்பணத்தையும் திரும்பப் பெறுகிறார். குறிப்பிட்ட காலங்களில் கிடைக்கும் இப் பண வரவுகள் மக்களின் படிப்பு, திருமணம், வாழ்க்கையைத் துவக்குதல் போன்ற தேவைகளுக்கும், தனக்கென்று ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொள்ளவும் அல்லது இதர அவசரமான தேவைகளுக்கும் கைகொடுத்துதவுகிறது.

பாலிசியின் காலத்தில் எப்போதாகிலும் இறக்க நேர்ந்தால், முழுக் காப்புத் தொகையும், எத்தனை வருடங்களுக்குப் பிரீமியங்கள் செலுத்தப்பட்டிருக்கின்றனவோ அத்தனை காலத்திற்கான போனசுடன் அளிக்கப்படும். இத்தொகை பாலிசிதாரர் ஏற்கனவே பல தவணைகளில் தொகைகளைத் திரும்பப் பெற்றிருந்த போதிலும் அளிக்கப்படும்.

பொன்னான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு விவேகத்துடன் செயல்படும் மக்களுக்கு இது ஒரு லட்சியப் பாலிசி.

முழு விவரங்களுக்கு உங்கள் எல்ஐசி முகவரையோ அல்லது அருகாமையிலுள்ள எங்கள் கிளை அலுவலகத்தையோ அணுகுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா.

RADEUS/LIC/AS-29

வட்டமேஜை

● நாட்டில் வகுப்புக் கலவரங்கள் அதிகரித்து வருவதற்குப் பிரதமர் கூறிய காரணங்களைக் கிண்டல் செய்திருக்கும் உமது தலையங்கத்தில் நகைச்சுவை உணர்வைத்தான் காண முடிகிறதேயல்லாமல், நியாய உணர்வையல்ல! 'செய்திகள் பத்திரிகைகளால் மிகைப்படுத்தப்படுகின்றன' என்ற அவரின் குற்றச்சாட்டை ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் நீங்கள் மறுக்கலாம். ஆனால் தமிழகத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் பெரும்பாலானவற்றைத் தொடர்ந்து படிக்கும் என்போன்ற வாசகர்களால், அவரின் கருத்தில் ஆழ்ந்திருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

வேலாயுதம்பாளையம் — எம். சம்பத்

● மொராதாபாத்! ஜிந்தாபாத்! படித்தேன். நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணத்தை அம்மையாரும் அவருடைய மந்திரிகளும் எவ்வளவு தடவை எடுத்துச் சொன்னாலும் உங்களுக்குப் புரியவில்லை. முந்தி இருந்த ஜனதா ராஜ்யம் ஒன்று போதாதா? இந்திரா காந்தி சொல்லும் புத்திமதியைக் கேட்க வேண்டுமே தவிர அதை ஆராயக்கூடாது!

பம்பாய் — சீதாராமன்

● இந்த வார கல்கி இதழில் ''தமிழகத்தில் சட்ட ஒழுங்கு நிலை'' பற்றிய கார்ட்டூன் மிக அருமை. இதே கருத்தை தமிழக முதல்வர் அவர்கள் சில தினங்களுக்கு முன் சட்டமன்றத்தில் கூறியபோது கல்கி இதழில் செம்பியன் அவரைச் சாடினார். இப்போது செம்பியனுக்குக் கல்கியே பதில் அளித்திருக்கிறது.

சென்னை-14 — இரா. சந்திரன்

● நக்சலைட்களின் குண்டு வீச்சும், குழந்தைகளைக் கடத்தும் செய்தியும் எம். ஜி. ஆர். ஆட்சியில் சாதாரண குடிமகன் கூட காணும் போது ஏன் மத்திய அமைச்சர் சொல்லக் கூடாதா?

வேலூர் — கலைஞர் ப்ரியா

● 'பொருளாதாரத்தின் அடிமட்டத்தில் உள்ள பெண்கள் வறுமை காரணமாகவே விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள்' என்று திருமதி சுதா ராமலிங்கம் குறிப்பிட்டுள்ளார். வறுமையை வெல்ல எத்தனையோ பெண்கள் பல வழிகளில் உழைத்து வருகிறார்கள். மனத்தைப் பக்குவமாய் வைத்திருக்கும் இவர்களைப் போன்ற பல்லாயிரக் கணக்கான பெண்களைப் பாழ்படுத்திவிடக் கூடிய சூழ்நிலையை நாமே உருவாக்கக் கூடாது. விபசாரத் தடைச் சட்டத்தைத் தளர்த்தவும் கூடாது.

அரகண்டநல்லூர் — கே. பிரதாப் சிங்

● உதகமண்டலம் காங்கிரஸ்(இ) உறுப்பினரை அறிமுகப்படுத்தும்போது கல்லன் என்ற அவர் பெயரை ''கள்ளன்'' ஆக்கிவிட்டீர்கள். கல்லன் என்ற பெயர் எங்கள் குலதெய்வத்தைக் குறிப்பதாகும்.

குன்னூர் — ஆலன்

[தவறு நேர்ந்தமைக்கு மிகவும் வருந்துகிறோம். — ஆர்.]

● வித்யாவின் கண்கள்தான் பேசும் என்று நினைத்திருந்தேன். பேனாகூட அழகாகப் பேசும் பாங்கைப் பெற்றிருக்கிறது.

மேட்டுப்பாளையம் — பி.ஏ. வதாத்

● ''நைந்துபோன சாரங்கள்'' என்கிற கதையில் அநேக இடங்களில் நடக்கும் விஷயத்தைத் தத்ரூபமாகவும், மிக அழகாகவும் பானுமதி ராஜகோபாலன் சித்திரித்துக் காட்டியிருக்கிறார்.

புதுக்கோட்டை — என். வேங்கடேசுவரன்

● உமாபதியின் 'டாக்டர்கள் ஓவர்டோஸ்' ஜோக்ஸும் அதைத் தொடர்ந்து தங்கள் 'சிரிப்பைப் பற்றி சற்று சீரியஸாக' தலையங்கமும் வட்டமேஜைக் கடிதங்களும் பார்த்தேன்.

டாக்டர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகிக்கொண்டிருக்கிற வேளையில் 'ஓவர்டோஸ்' உண்மையாகும் நாள் தொலைவில் இல்லை.

அரசாங்கம் 'ஐந்நூறு பேருக்கு வேலை' என்ற அறிக்கை விடுவதோடு சரி. பட்டம் பெற்று வெளியே வருபவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் உறுதி இல்லை என்ற நிலையில் குறைந்த ஊதியத்துக்கு உழைக்க வேண்டிய அவலம். குளிர்காய்பவர்கள் சொந்தமாக நர்ஸிங்ஹோம் வைத்திருப்பவர்கள்தாம்.

திருச்சி போன்ற நகரங்களில் மூன்று ரூபாய்க்கு அதிகமாக யாரிடமும் டாக்டர் வாங்குவதில்லை. இருபதும் நாற்பதும் நிபுணர்கள் வசூலிக்கும் ஃபீஸ். 'இன்வெஸ்டிகேஷன்ஸ்' செய்யச் சொல்பவர்களும் அவர்கள்தாம். அதுவும் தேவையில்லாமல் சொல்வதில்லை.

நம் மக்கள் மிக வேடிக்கையானவர்கள். பிளாக்கில் சர்க்கரை, சினிமா டிக்கெட் எல்லாம் வாங்கத் தயாராயிருப்பார்கள். உடலைப் பரிசோதிக்கும் டாக்டரிடம் ஃபீஸ் தர மட்டும் யோசிப்பார்கள். திடீர் ஏழைகளாய் விடுவார்கள். அறியாமைதான் காரணம்.

திருச்சி-3 — டாக்டர் வெ. வெங்கட்ராமன்

● ராபர்ட் நொபிலி பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறேன். 10-8-80 இதழில் ஏ. கே. பி. தெரிவித்துள்ள செய்தி உண்மை எனினும் அதனை நொபிலியுடன் இணைத்திருப்பது சரியல்ல. அச் செய்தி நொபிலிக்குப் பிற்காலத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு நடந்தது. அதில் குறிப்பிட்டுள்ள நாலுக்கும் நொபிலிக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

சென்னை-34 — ச. இராசமாணிக்கம்

அத்தியாயம் 59

இணைந்த கைகள்

பம்பாய் துறைமுகத்தில் கவர்னர் மாளிகையில் காப்டன் மாக்ரே கவர்னர் முன்பாக விரித்த அரபிக் கடற் பகுதிப் படத்தில் எந்த இடத்தில் தனது ஆள்காட்டி விரலை ஊன்றியிருந்தானோ, அதே இடத்தில் அதே இரவில் 'கடல் ராணி'யின் தனது அறையில் அதே மாதிரிப் படத்தில் தனது ஆள்காட்டி விரலை ஊன்றியிருந்தான் காப்டன் லிவாஸியர். அவன் மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த அனந்தும், சாருவும், ரத்னாவும் அவன் விரல் பதிந்து கிடந்த இடத்தை ஆச்சரியமும் குழப்பமும் கலந்த உணர்ச்சிகளுடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று பகல் போஜனத்தின் போது ''மாக்ரேயை இன்னும் நான்கு நாட்களில் நாம் சந்திப்போம்'' என்று லிவாஸியர் அறிவித்தபோது ஏற்பட்ட சந்தேகங்களும், ஆட்சேபணை சமாதானங்களும் அப்பொழுதும் அவர்கள் சிந்தனையில் இருந்தன. உணவுக்கு முந்தி லிவாஸியர் செய்த பிரார்த்தனை முடிந்ததும் அவன் செய்த அந்த அறிவிப்பில் நிச்சயமிருந்தது. சந்திப்பதோடு வெற்றியும் கொள்வோம் என்ற ஆசையும் இருந்ததை உணவு மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த அனைவருமே கவனித்தார்கள். ஆனால் மாக்ரேயைச் சந்திக்க நான்கு நாட்கள் எதற்கு என்ற சந்தேகம் மற்றவர்களுக்கு ஏற்பட்டாலும் அனந்துக்கு ஏற்படாததால் அவன் கேள்வி ஏதும் கேட்கவில்லை. ஆனால் ராணி மட்டும் கேட்டாள்: ''மாக்ரேயைச் சந்திக்க நான்கு நாட்கள் எதற்கு?'' என்று.

லிவாஸியர் தனது உணவுத் தட்டிலிருந்து கண்களைச் சிறிது தூக்கி ராணியின் கண்களைச் சந்தித்தான். ''ராணி! நீ என்னிடம் இந்த மாதிரிக் கேள்விகளைக் கேட்பாய் என்பது முன்னமே தெரியும். நீ என்னை முழுதும் நம்பவில்லை என்பதும் எனக்குத் தெரியும்'' என்று கூறினான்.

இந்த சமயத்தில் சற்று எட்ட உட்கார்ந்திருந்த ஸில்வர் தனது தோளின் மீதிருந்த அகரக் கிளிக்குத் தட்டிலிருந்த ஒரு மாமிசத் துண்டை ஊட்டிக்கொண்டே சொன்னான். ''உன்னை யாரும் நம்ப முடியாது. நான்கூட நம்பவில்லை'' என்று.

லிவாஸியரின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''நீ நம்பினால் என்ன நம்பாவிட்டால் என்ன'' என்று லிவாஸியர் கேட்டான், ஒரு மாமிசத் துண்டைக் கத்தியால் கொத்தி எடுத்து வாயில் அடைத்துச் சுவைத்த வண்ணம்.

''ராணியின் நம்பிக்கை மட்டும்தான் எனக்கு வேண்டுமாக்கும்'' என்று விஷமத்துடன் [illegible] ஸில்வர்.

இதைக் கேட்ட ராணியின் முகம் சிவந்தது சினத்தால். அதை லிவாஸியரும் கவனித்திருக்க வேண்டும். அடுத்து வந்த அவன் சொற்களில் பயங்கரமான ஏதோ ஒரு ஒலி ஊடுருவி நின்றது. ''எந்த புத்தி




சாவியின் நம்பிக்கையும் எனக்கு வேண்டும். இங்குள்ள மாலுமிகளில் முக்கால்வாசிப் பேர் ராணியைச் சேர்ந்தவர்கள். ராணி என்னை நம்பினால் அவர்கள் என்னை நம்புவார்கள். அடுத்து சாரு பேஷ்வாவின் உறவினன். அவன் தயவிருந்தால் கரையில் இறங்கும் போது நமது வலு அதிகமாகும். அனந்தைப் பற்றி நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர் உன்னையும் என்னையும் எல்லோரையுமே அழித்துவிடும் ஆற்றலும் அறிவும் உள்ளவர்....'' என்ற விவாளியர் தனது பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினன்.

அந்த நிறுத்தத்திலேயே அபாயமிருந்ததை வில்வர் கவனித்தான். இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் வினவினன் ''அறிவாளிகள் பட்டியலில் என் பெயரைச் சேர்க்கவில்லையே ஏன்?'' என்று.

விவாளியர் மேலும் வாயிலிருந்த மாமிசத்தைச் சுவைத்த வண்ணம் வில்வரை விஷமக் கண்களால் பார்த்தான். ''அறிவாளி என்று நீயே உன்னை நம்புகிறாயா?'' என்று கேட்டான்.

வில்வர் மெள்ள மெள்ள நிதானத்தை இழக்கத் தொடங்கினன். ''நம்பினால் அது தவறு?'' என்று வினவிய அவன் குரலில் சினத்தின் சாயை இருந்தது.

விவாளியர் தனது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு கால்களையும் நீட்டினன் மேஜைக்கு அடியில். ஏதோ கதை சொல்வது போல் பேசலானன். ''வில்வர்! இந்தக் கப்பலில் உள்ள மாலுமிகள் அனைவரும் உன்னைப் பற்றி அறிவார்கள். நீ மலையாளத்தில் செய்துள்ள கொலைகளைப் பற்றி அறிவார்கள். டெய்லர், இங்கலண்ட் இவர்களின் பெயர்களைப் போல் உன் பெயரும் அரபிக் கடல் பகுதியில் பிரசித்தம். அப்பேர்ப்பட்ட நீ டெய்லரையும் இங்கலண்டையும் எச்சரிக்க உன் கிளியைப் பகிரங்கமாகத் தூது விட முனைந்தாய். இது அறிவுள்ளவன் செயலா? அது கிடக்கட்டும். நான் பாண்டவகட்டை நெருங்குவதானல் சிந்து நுர்க்கத்தைத் தாண்டித்தான் வரவேண்டும். இவ்வளவு பெரிய கப்பலைக் கவனிக்காமலிருக்க டெய்லரும் இங்கலண்டும் அத்தனை அறிவிலிகளா? அறிவாளியாயிருந்தால் இவற்றையெல்லாம் நீ கவனித்திருப்பாய். கவனித்திருந்தால் கப்பல் தளத்திலிருந்து அவர்களுக்குக் கிளியைத் தூது விட நினைத்திருக்க மாட்டாய். அப்பா! அதற்குப் பிறகு உன்னைத் தப்புவிக்க மாலுமிகளை நான் எத்தனை தூரம் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது!'' என்று அலுத்துக் கொண்டான் விவாளியர். அவன் ஒவ்வொரு சொல்லிலும் ஏளனமும் 'நீ முட்டாள், நீ முட்டாள்' என்ற உட்பொருளும் ஒலித்ததை வில்வர் மட்டுமல்ல மற்றவர்களும் உணர்ந்தார்கள். ஏதோ பயங்கர முடிவுக்கு வில்வரை அழைத்துச் செல்லவே, விவாளியர் இவ்விதஉரையாடலில் இறங்கி



யிருக்கவேண்டும் என்பதும் மற்றவர்களுக்குத் தெளிவாக விளங்கியது. கோபத்தால் நிதானத்தை அறவே கைவிட்ட வில்வருக்கு மட்டும் அது விளங்காததால் அவன் முகத்தில் வெறி பெரிதும் குடிகொண்டது. சாதாரணமாக மிக நிதானத்தைக் காட்டும் கண்களில் கோபாக்கினி துளிர்த்தது. ''என்ன அவதூறு கூறிவிட்டுப் பிழைக்கும் மனிதன் மாநிலத்தில் கிடையாது'' என்றான் சீற்றம் நிரம்பிய குரலில்.

''மாகடலில்?'' என்று கேட்டான் விவாலியர்.

''என்னிடம் விளையாடாதே விவாலியர். உன்னைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை'' என்றான் வில்வர்.

''நான் காதலிக்'' என்றான் விவாலியர். அத்துடன் ''ஸோ ஐ பிலீவ் அவர் லைவ்ஸ் ஆர் இன் த ஹாண்ட்ஸ் ஆப் அவர் குட் லார்ட் (நான் காதலிக் ஜாதி. ஆகையால் நமது உயிர்கள் ஆண்டவனிடம் இருப்பதாக நினைக்கிறேன்'') என்றும் கூறினான். மேலும் தொடர்ந்தான்: ''நான் பிரார்த்தனை செய்தபோது நீ பிரார்த்தனை செய்யவில்லை. ஐ பிலீவ் யூ ஆர் எ ஹெரிடிக் (நீ ஒரு நாஸ்திகன் என்று நினைக்கிறேன்)''என்று.

அவன் வலையில் மேலும் விழுந்த வில்வர் சட்டென்று தனது கைத்துப்பாக்கியை எடுத்து விவாலியர் முன் நீட்டினான் மேஜைக்குக் குறுக்கே. ''மை டியர் விவாலியர்! ஸப்போஸ் ஐ ஸெண்ட் யூ டு யுவர் பிலவ்ட் லார்ட்? (விவாலியர் டியர், உன்னை உனது ஆண்டவனிடம் அனுப்பினால்)'' என்று கேட்டு நகைத்தான்.

மேஜையைச் சுற்றியிருந்த மற்றவர்கள் அதிர்ச்சியுற்றாலும் அனைத்தும் விவாலியரும் சிறிதும் கலங்கவில்லை. விவாலியர் சொன்னான், ''காட் டஸ் நாட் வாண்ட் மீ நௌ (கடவுள் இப்போது என்னை அழைக்கவில்லை) என்று. ''உன்னையும் அழைக்கவில்லை நீ நாஸ்திகன் என்பதால். ஆனால் நரகம் உன்னை அழைக்கிறது. அங்கு உன்னை அனுப்ப முடியும்'' என்றும் கூறினான்.

வில்வருக்கு ஏதும் புரியவில்லை. தன்னையும் மீறிய விவகாரம் ஏதோ நடந்திருக்கிறது என்று நினைத்தான். அப்பொழுது சொன்னான் விவாலியர், ''வில்வர்! நீ அறிவாளியாயிருந்தால் எனது இடது கை மேஜை மீது இல்லை என்பதைக் கவனித்திருக்க வேண்டும். அதில் ஒரு சிறு கைத்துப்பாக்கி உன் வயிற்றை நோக்கி விழித்துக் கொண்டிருப்பதை நீ ஊகித்திருக்க வேண்டும். ஒரு நாயைச் சுடுவது போல் உன்னை இப்போது நான் சுட்டுவிட முடியும். உன்னுடைய துப்பாக்கியின் குதிரை இழுக்கப்படுமுன் விவகாரம் முடிந்துவிடும். ஆனால் நான் கண்ணியமுள்ளவன். உன்னைக் கொலை செய்ய இஷ்டப்படவில்லை. வெளியில் கப்பல் தளத்தில் என்னைச் சந்திக்கலாம். எந்த ஆயுதங்களைக் கொண்டு போரிடுவது. பிஸ்டலா, கத்தியா என்பதை நீயே முடிவு செய்யலாம்'' என்று.

வில்வர் குதித்து எழுந்தான். ''கத்திகளே போதும் உன்னைக் கொல்ல'' என்றான்.

''குத் (நல்லது)'' என்று விவாலியர் கூறினான் புன்னகையுடன்.

''இதில் நல்லது என்ன இருக்கிறது'' என்று வினவினான் வில்வர்.

''நான் அனைத்தைப் போல் கருணை உள்ளவன் அல்ல. கையிலும் காலிலும் குடமாட்டேன். என் துப்பாக்கி எப்பொழுதும் புரு

அப்பாவும் பிள்ளையும் அம்மாவைச் சந்தேகப்படும் கதை. அப்பா பிரிகேடியராக ராஜேஷ் கம்பீரமாய் கோபக் கண்களோடு சந்தேகத் துப்பாக்கியால் அனயாசமாகச் சுடுகிறார். அம்மா வடிவுக்கரசி பாத்திரத்துக்கேற்ப நடையுடை பாவனை பார்வை எல்லாம் ஒத்துழைக்க, தான் நடிப்புக்கும் அரசி என நிரூபிக்கிறார். மகனாய் வரும் ஓவியன் ராஜ்குமாரிடம் வழிதல் ஏதுமில்லை. முன்னுக்கு வந்து விடுவார். பாத்திரப் பெயருக்கேற்ப (மந்தஹாசினி) மந்தமாய்ப் புது முகம் ராஜ்கலா. இரண்டு பாட்டுப் பாடி, பூ விற்று, தான் வயசுக்கு வந்தவள் என்பதை அடிக்கடி சொல்லும் வனிதாஸ்ரீ. நடிப்பவர்களெல்லாம் கடந்த காலம் சொல்ல பிளாஷ்பேக்கிற்குள் நுழைகிறார்கள்.

வியட்நாம் வீடு சுந்தரத்தின் வசனத்திலும் மாதவன் டைரக்ஷனிலும் தெரிவது அனுபவம்.

நான் நானேதான் என்கிறார் வடிவுக்கரசி; என்கிறார் ராஜேஷ்; என்கிறார் டைரக்டர்.

-நளினி சாஸ்திரி



வத்தின் மத்தியை அல்லது நெஞ்சை நோக்கும். கத்தி அத்தனை தீமை விளைவிக்காது'' என்று கூறிஎழுந்தான் விவாலியர்.

வில்வரும் மற்றவரும் எழுந்தனர். வெளியில் தளத்தில் கத்திகளுடன் இருவரும் சந்தித்தனர். சண்டை மூன்று நிமிடங்கள் கூட நடக்கவில்லை. விவாலியரின் வாள் வில்வரின் வலது கையில் பாய்ந்தது. ''வில்வரை அழைத்துச் சென்று காயத்துக்குக் கட்டுப் போடுங்கள். மதுவை நிரம்பக் கொடுங்கள். அவன் தூங்கட்டும்.'' என்று சற்று எட்ட நின்றிருந்த தனது உதவிக் காப்டனுக்கு உத்தரவிட்ட விவாலியர் ஏதுமே நடக்காதது போல் மற்றவர்களுக்குத் தலை சாய்த்து விட்டுத் தனது அறையை நோக்கி நடந்துவிட்டான்.

இந்தச் சண்டையில் அனந்த் தலையிடவில்லை. அவனை இரு பெண்களும் காரணம் கேட்டபோது ''இந்தச் சண்டை சாதாரணமாக ஏற்பட்டதல்ல. இதைப் பற்றி இன்றிரவு நாம் அதிகமாக அறிய முடியும்'' என்று காரணம் சொன்ன அனந்த் அவர்களை அழைத்துக் கொண்டு அவர்கள் அறைக்குச் சென்றான். அவன் சொன்னபடிதான் நடந்தது. இரு பெண்களையும் அனந்தையும் அன்றிரவு தனது அறையில் சந்திக்கும்படி செய்தி அனுப்பினான் விவாலியர். அவர்கள் மூவரும் உள்ளே நுழைந்தபோது விவாலியர் மேஜைக்கு எதிரே நின்று கொண்டிருந்தான். மேஜையில் அரபிக் கடல் கரைப் பகுதியின் படம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் ஓர் இடத்தில் திடமாக ஊன்றியிருந்தது அவன் விரல். அதை நோக்கி ராணி ஒருபுறமும் சாரு ஒரு புறமும் வர நடந்து சென்றான் அனந்த். மூவரும் மேஜையைச் சுற்றி அமர்ந்து கவனமாக நோக்கினார்கள். விவாலியரின் விரல் 'தேவ்கர்' துறைமுகத்தின் மீது ஊன்றியிருந்தது. அது சொல்லிய கதை மூவருக்கும் புரிந்தது. மூவரில் அனந்தின் கண்களில் மட்டும் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. அதைக் கவனித்த விவாலியர் சொன்னான். ''கதவை மூடிவிடு ராணி'' என்று. ராணி சென்று கதவை மூடிவிட்டு வந்தாள்.

''நௌ அனந்த்! லெட் அஸ் எக்ஸாமின் த பொஸிஷன் (அனந்த் இப்பொழுது நிலைமையை ஆராய்வோம்)'' என்றான்.

அனந்த் தலையை ஆட்டினான். விவாலியர் சொன்னான்: ''மாக்ரே இங்குதான் நம்மைச் சந்திக்க முயற்சி செய்வான்'' என்று.

அனந்த் அதற்கும் மௌனமாகவே தலை ஆட்டினான். பிறகு தனது ஆள்காட்டி விரலைப் படத்தின் வேறொரு இடத்தில் ஊன்றினான்.

''ரைட் கொய்ட் ரைட்'' என்று குதூகலித்தான் விவாலியர். ''அனந்த்! ஐ ஹாவ் நெவர் கம் அக்ராஸ் எ க்ளவரர் ஸெய்லர்! (நான் சந்தித்த மாலுமிகளில் உன்னைவிடச் சிறந்தவை யாருமில்லை)'' என்று கூறி ''டுகெதர் வீ வில் மேக் இட் (நாம் இருவரும் இதற்கு முடிவு காண்போம்)'' என்றும் சொல்லிக் கையை நீட்டினான். அனந்தின் கையும் விவாலியர் கையும் இணைந்தன. இறுக்கிப் பிடித்தன ஒன்றை ஒன்று. (தொடரும்)

வண்டிச்சக்கரம்

வண்டிச் சக்கரம் தடுமாறாமல், ஆர்ப்பாட்டமில்லாமல், சீராக மெதுவாகச் சுழல்கிறது. தண்டல் வசூலிக்கும் முரட்டு கஜா சிவகுமார் தந்தையைப் பறிகொடுத்த சரிதாவுக்குத் தம் வீட்டில் அபயமளிக்கிறார். சரிதாவோ கஜாவை மாற்றி உழைக்கும் மனிதனாக்குகிறார். ஒரு சிக்கலில்லாத குடிசைக் கதை. சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வழக்கமான நடிப்பை எதிர்பார்த்தால் ஏமாற்றிவிட்டு சிவகுமார் வித்தியாசமான நடிப்பு தருகிறார். வர வர சரிதா நடிப்பில் மெருகேறுகிறது. சாப்பாட்டுக் கடைக்காரியாக வந்து சிவசந்திரனை உரிமையோடு திட்டி, குடித்த அப்பாவிடம் பாசம் காட்டி உதவிய சிவகுமாரைக் கடிந்து நடிப்பால் உயர்கிறார்.

அப்பா சாமிக்கண்ணுவும் சிவகுமாரின் தோஸ்த் முத்துவும் மனத்தில் நிற்கிறார்கள்.

பூட்டிய கடையில் அகப்பட்ட கருணி பசி தாங்காமல், தலையணையைப் பிய்த்துத் தண்ணீரில் தோய்த்து விழுங்குகிறார். அவருக்கு வயிற்று வலி வருகிறதோ இல்லையோ, நமக்கு வருகிறது, சிரிப்பதால்.

பாலகிருஷ்ணன் கேமரா அழகாக உழைத்திருக்கிறது. இரவு நேரக் குடிசைகள் ஆயில் பெயின்டிங்காய் காட்சிக் காட்டுகின்றன. சங்கர் கணேஷின் இலேசான இசையின் இனிமை அருமை.

டைரக்டர் விஜயனை வண்டிச் சக்கரம் கீழே தள்ளாமல் மேலேதான் கொண்டு போயிருக்கிறது.

-நளினி சாஸ்திரி



வாசகர் விமர்சனம்

சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதா?



● சிவாஜி சகாப்தம் முடிந்து விட்டதா? என்று கேள்வி கேட்கும் அளவுக்கு உமக்குத் தைரியம் வந்துவிட்டதா? ஜாக்கிரதை!

சிவகாசி — லட்சுமிகரேஷ்

● கிளார்க் கேபிளும் மரிலின் மன்ரோவும் இடுப்பை இடித்து ஆடியும் பாடியும் மரங்களுக்குப் பின் ஓடியும் காதல் பாட்டுப் பாடியுமா ரசிகர்களை மகிழ்வித்தார்கள்? வயதுக்கேற்ற — தோற்றப் பொலிவுக்கேற்ற ரோலை சிவாஜி ஏற்கட்டும். சகாப்தம் தொடரட்டும். ஆட்சேபணை இல்லை.

திருச்சி — என். மதுரம்

● வியட்நாம் வீடு சுந்தரம் குறிப்பிட்ட ''கப்பலோட்டிய தமிழன்'', ''பாசமலர்'', ''இருவருட் செல்வர்'', ''கட்டபொம்மன்'' ''உயர்ந்த மனிதன்'', ''பாகப் பிரிவினை'' சிவாஜியைப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்போன்ற ரசிகர்களின் அவா. 'தர்ம ராஜா', 'ரத்த பாசம்', 'வெற்றிக்கு ஒருவன்' சிவாஜியை அல்ல. அவர் விலக வேண்டும் என்பது எங்கள் கருத்து அல்ல. உலகில் சிறந்த நடிகர் என்ற பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற ஏக்கம்தான்.

விழுப்புரம் — கே.எஸ். குமார்

● சிவாஜியின் சகாப்தம் முடிந்து விட்டது உண்மையே! சிறிது சிந்தித்தால், 'அவர் ஏற்று நடிக்காத பாத்திரம் எதுவுமே இல்லை. நடித்ததையே திருப்பி நடிப்பதற்கு சிவாஜி தேவையில்லை' என்பது புரியும். அவராகவே இளைய தலைமுறையினருக்கு நடிப்பைக்கற்றுக் கொடுக்க முன்வந்து, நடிப்புத் தொழிலை விட்டு விலகினால் தமிழ் நாடு தன்னிகரில்லா நடிகர் திலகத்தை நினைவு கொள்ளும்.

சென்னை — நிர்மலா உமாபதி

● கிளார்க் கேபிள் எழுபது வயதில் மாரிலின் மன்ரோவுடன் நடிக்கலாம். ஹாலிவுட் கலையுலகம் அதை விரும்புவதிலும் தவறேதுமில்லை. ஏனெனில் 70 வயதில் ஏழுமுறை கல்யாணம் செய்து கொள்ளும் ரசனை மிகுந்த நாடு அவர்களுடையது. அதைக் காரணமாக வைத்துக் கொண்டு 'நானும் சாகும்வரை கதாநாயகனுக்குத்தான் நடிப்பேன்' என்றால் எப்படி?

'அறுபதிலும் ஆசை வரும்' என்று இனியும் அவர் டூயட் பாடி நடித்தால் கிடைத்த புகழை அவர் இழக்க வேண்டியிருக்கும். சிவாஜி சிந்தித்துச் செயல்படுவது நல்லது.

கல்பாக்கம் — சி.பி. ராஜு

● சிவாஜி சகாப்தம் முடிந்து விட்டது என்பது போல் விஜயன் சொல்லியிருக்கிறார். சிவாஜி இந்த மாதிரி சின்ன வயதுள்ள பாத்திரத்தை எடுக்க ஆரம்பித்ததற்குக் காரணமே விஜயன்தான். 'ரோஜாவின் ராஜா', 'இளைய தலைமுறை' போன்ற படங்கள் தான் சிவாஜியின் சரிவுக்கு முக்கிய காரணங்கள். சிவாஜியுடன் மனத்தாங்கல் காரணமாகத்தான் இன்று இவர் சிவாஜியைக் குறை கூறுகிறார்.

சென்னை — உ. தயாகுமார்

● ரஜினியோ கமலோ கிழவன் வேடத்தில் வந்தால் கைதட்டி ரசிக்கின்ற உள்ளங்கள், சிவாஜி இளைஞனாக நடித்தால் மட்டும் எரிச்சல் அடைவது ஏனென்று புரியவில்லை. நடிப்பு வயதைப் பொறுத்ததல்ல, அவரவர்களின் சுய திறனையும் உடல் அமைப்பையும் பொறுத்தது என்பது விஜயன் போன்றவர்கள் உணர வேண்டிய ஒன்று.

வேலாயுதம்பாளையம் — எம். சம்பத்

● சிவாஜியிடம் ஒரு பாத்திரத்தை ''இப்படிச் செய்யாதீர்கள், மாற்றிச் செய்யுங்கள்'' என்று உரிமையோடு தைரியமாக (அதாரிட்டி) சொல்லக்கூடிய டைரக்டர்கள் பலர் மறைந்துவிட்டனர். (பீம்சிங், பந்துலு, நாகராஜன்) சிலர் ஒதுங்கிவிட்டனர். (ஸ்ரீதர், கே. எஸ். கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணன், பஞ்சு) மேலும் எம். ஜி. ஆர். நடிக்காதது சிவாஜிக்கு நஷ்டம். முன்பு போட்டி மனப்பான்மை அவரைச் சிந்தித்துச் செயல்படச் செய்தது. இன்று தன்னை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தில் நடிப்பதில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு அரசியலில் நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

நாக்குக்குடி — எம். ஜீ. ராமசாமி

● சமீபத்தில் வெளியான திரிசூலம் என்ற படத்தின் வெற்றியை உலகமே அறியும். அண்ணன் ஒரு கோயில், அந்தமான் காதலி, தியாகம், ரிஷி மூலம் போன்ற படங்கள் வெற்றிப் படங்கள் இல்லையா?

அவர் இளைஞனாக நடித்த படங்கள் ஓடவில்லையா?

திருச்சி-2 — சிவாஜி ரசிகர்கள்


13

நீ இவ்வளவு காலம்
எங்கிருந்தாய்?
உன் வருகையால்
இன்பச் சொர்க்கத்தை
கையால் எட்டித் தொடுகிறேன்—
என்றாலும்
இவ்வளவு காலமும்
உன்னைக் காணாமல்
வீணாகப் போய்விட்டதே
என்று எண்ணிக்
கவலைப் பள்ளத்தில் கால் வழுக்கி
விழவும் செய்கிறேன்.
—மீரா: ''கனவுகள் + கற்பனைகள்
= காகிதங்கள்

ராஜீவ் மேலும் தனது சொந்தக் கதையைத் தொடர்ந்தான். ''அப்படியே கிட்டத்தட்ட ஒரு வருஷம் எங்கள் வாழ்க்கை நீடித்தது. நான் துளியும் நிம்மதி இல்லாமல் இருப்பதை, எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷமே இல்லாமல் இருப்பதை, என்னுடைய அப்பா அம்மாவுக்கு நான் தெரியப்படுத்தவேயில்லே. அவங்க மனசை நோக வைக்க நான் விரும்பவில்லே. ஏற்கனவே என் அண்ணன் அப்படி நடந்துக்கிட்டதாலே மனம் நொந்து போயிருந்தாங்க. ஏதோ இளைய மகனாவது ஒழுங்கா அவங்க விருப்பப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியாக் குடித்தனம் நடத்தறதாக அவங்க நம்பினதாலே, அவங்க மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருந்தது. அவங்க மனச் சாந்தியைக் கெடுக்க நான் இஷ்டப்படலே. அப்பா அம்மாவுக்கு முன்னாலே சந்தோஷமா வாழ்க்கை நடத்துற மாதிரியே நடிப்பேன்.''

ராஜீவுடைய தாய் தந்தை, கமலாவுடைய தகப்பனார், மூவரும் சேர்ந்து புனித க்ஷேத்திரங்களுக்குத் தீர்த்த யாத்திரை போக வேண்டுமென முடிவு செய்து ஒன்றாகக் கிளம்பினார்கள். அருப்புக்கோட்டையிலிருந்து மதுரைக்குப் போகும் வழியில், அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் ஒரு பயங்கர விபத்துக்கு உள்ளாயிற்று. பஸ் தலைகீழாகக் கவிழ்ந்து பற்றி எரியத் தொடங்கியது. உதவி வந்து சேருவதற்குள் அதில் பயணம் செய்த அத்தனை பேரும் மாண்டு விட்டிருந்தார்கள். அந்த விபத்திலிருந்து ஒருவர் கூட மீளவில்லை. ராஜீவுடைய பெற்றோர், கமலாவின் தகப்பனார், மூவரும் அதே விபத்தில் இறந்து போனார்கள்.

''எனக்கு அந்தச் செய்தி பெரிய அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அப்பாவைப் பறி





பியூன்: ''லேடி டைப் பிஸ்ட் உள்ளே நுழைந்த போது மணி 10.30...., டெஸ்பாட்ச் உள்ளே நுழைந்தபோது மணி 10. 42,..., ஸ்டெனோ உள்ளே வந்தபோது மணி 10.58... மானேஜர்....''

ஸோர்க்: ''போதும் நிறுத்து! புது ரிஸ்ட் வாட்ச் வாங்கின நாளு நாளா நீ அறுக்கிற இந்த அறுவை சகிக்கலே!''

— உ. ராஜாஜி

கொடுத்துட்டாளேன்னு கமலா கிட்டே இன்னும் கொஞ்சம் பரிவோடு நடந்துக்க முயற்சி பண்ணினேன். ஆனால் பெத்த தகப்பனார் போயிட்டாரேங்குற வருத்தம் துளியும் அவளுக்கு இருந்ததாகத் தெரியலே. எங்க அப்பா அம்மா அசம்பாவிதமா இறந்துபோயிட்டதை நினைச்சு நான்தான் கண்ணீர் சிந்தினேனேயொழிய கமலாவோட கண்கள்லே ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட நான் பார்க்கலே. அப்போ கூட, அவ தந்தை மேலே அவளுக்கிருந்த துவேஷம் குறையலே. செத்துப்போன பிறகு கூட அவளாலே அவரை மன்னிக்க முடியலே. ரியல்லி, உஷா, ஷீ வாஸ் ஏன் அன்னேச்சுரல் வுமன்! கொஞ்சம் கூட ஈவு இரக்கமே இல்லாத உள்ளம். அப்படி ஒரு பெண்ணை நான் வேறே எங்கேயும் பார்த்ததில்லே. சில சமயங்கள்ளே அவள் உண்மையா பெண்தானுங்குற சந்தேகம் கூட எனக்குத் தோணும். சாதாரணமாக எந்தப் பெண்ணாலேயும் அவ்வளவு கடினமா இருக்க முடியாது''என்றான் ராஜீவ்.

திடீரென்று ராஜீவ் அவள் முகத்தைத் தன் இரு கரங்களின் நடுவே எடுத்துக் கொண்டு, உணர்ச்சி ததும்பும் பார்வையோடு அவள் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான். ''உஷா! இத்தனை காலமா நீ எங்கே இருந்தே? அப்போவே நீ என்கிட்டே வந்திருக்கக் கூடாதா?''

உஷா மெல்லச் சிரித்தாள். ''அப்போ நான் பிறந்தே இருந்திருக்க மாட்டேனே ராஜீவ்!''

ராஜீவும் சிரித்தான். ஆனால், அந்தச் சிரிப்புக்குப் பின்னால் சோகம் ஒலித்தது.

உஷா அவன் கன்னத்தை அன்பாக வருடி விட்டாள். அவன் கண்கள் மீது ஆறுதல் கூறும் வகையில் முத்தமிட்டாள். ''ராஜீவ், டோன்ட் லுக் ஸோ ஸேட். இப்பத்தான் நான் உங்க கிட்டே வந்துட்டேனே. உங்க கூடவே இருக்கேனே.''

அவளை நெஞ்சோடு இறுகத் தழுவிக் கொண்டான். ''யெஸ், டார்லிங், யெஸ்! இப்ப நீ எனக்குக் கிடைச்சிருக்கே! சொல்லில் அடங்காத அன்பையும், சந்தோஷத்தையும் எனக்குக் கொடுத்துக்கிட்டு இருக்கே. இருந்தாலும், நீ இல்லாமே என் வாழ்க்கையிலே எத்தனை வருஷங்கள் வீணாகிப் போயிட்டதுன்னு நினைக்கிறப்போ, வருத்தமாகத்தான் இருக்கு உஷா.''

''வருத்தப்படாதீங்க டார்லிங். உங்களை விட்டுப் போகவே மாட்டேன்.''

''நான் மட்டும் உன்னைப் போக விடுவேனா என்ன?''

உஷா அவன் அணைப்பிலிருந்து விடுபட்டுப் பின்னுக்குச் சாய்ந்தாள். ''அப்புறம் என்ன ஆச்சு? உங்க டைவோர்ஸைப் பத்தி இன்னும் சொல்லலியே?'' என்றாள்.

ராஜீவ் மேலும் சொல்லத் தொடங்கினான். கமலாவும் அவனும் தங்கியிருந்த அதே அபார்ட்மெண்ட் கட்டிடத்தில், அவர்களுடைய ஃபிளேட்டுக்கு கீழ் ஃபிளோரில், ஓர் இளம் பெண் தங்கியிருந்தாள். அவளுடைய கணவன் ஒரு டிராவலிங் ஸேல்ஸ்மேன். அடிக்கடி நீண்ட இடைவெளிகளுக்கு வெளியூர் போய்விடுவார். அந்தப் பெண்ணுக்குக் குழந்தைகள் இல்லே. எப்போதும் தனியாகவே இருப்பாள். தனிமை அவளை அதிகமாக வாட்டியது. தன் தனிமையைப் போக்கிக் கொள்ள, துணையாக அவனை எந்த நேரத்திலும் வரவேற்கத் தயாராக இருப்பதை, பல முறை, பல வகைகளில் அவனுக்குத் தெரியப்படுத்தினாள். ராஜீவ் காலையில் வேலைக்குக் கிளம்பும் போதும் சரி, மாலையில் ஆபீசிலிருந்து வீடு திரும்பும் போதும் சரி, தற்செயலாக அங்கு வந்தவள் போல் தவறாமல் மாடிப் படிகள் அருகில் நின்று கொண்டிருப்பாள். பேச்சுக் கொடுப்பாள், சிரிப்பாள், பெருமூச்செறிவாள்.

இதைக் கமலாவும் கவனித்தாள். இந்தப் பெண்ணைக் குறித்து ஓயாமல் ராஜீவுடன் சச்சரவு செய்ய ஆரம்பித்தாள்.

''உம்! இந்த ஆண்களே இப்படித்தான்! உங்க புத்தி உங்களை விட்டு எங்கே போகும்?'' என்பாள்.

''என்ன சொல்றே கமலா?''

''கீழ் வீட்டுப் பெண்ணோட நீங்க கொஞ்சறதையும், குலாவுறதையும் நான் கவனிக்கலேன்னு நினைக்கிறீங்களா?''

''நான் ஒண்ணும் அவளோட கொஞ்சலே.''

''பொய் சொல்லாதீங்க. தினமும் நீங்க அவகூடப்பேசறதைப்பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்.''

''கமலா! அவ வேணும்னு வழி மறிச்சுக்கிட்டு நிக்கறா. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? மரியாதைக்கு ஏதாவது ரெண்டு வார்த்தைகள் பேசிட்டு உடனே போயிடறேன். சாயங்காலம் நேரா வீட்டுக்குத்தான் வறேன். உன் கூடவே இருக்கேன். ஒரு தரமாவது அவள் வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வைச்சிருக்கேனா? இல்லேன்னு உனக்கே தெரியாதா? அப்படியும் என்னைச் சந்தேகப்படறியே?''

உண்மையாகவே ராஜீவுக்கும் அந்தப் பெண்ணுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லே. அழகான இளைஞனாகிய அவனைக் கண்டு அவள் ஆசைப்பட்டது என்னவோ உண்மை. இருந்தாலும், அவள் ஆசைக்கு அவன் இணங்கவில்லே.

உண்மை புரிந்தும், கமலா வேண்டுமென்றே அவனுடன் சண்டை போடுவாள். அவளுக்குத்தான் இல்லற வாழ்க்கை நடத்துவதில் சிறிதளவும் விருப்பமே இருக்க

வில்லையே. சச்சரவு செய்ய ஏதாவது காரணம் கிடைக்காதா என்று சதா சர்வ காலமும் காத்துக் கொண்டிருப்பாள். பிடிக்காத கணவனுடன் சண்டை போட அந்தக் கீழ் வீட்டுப் பெண் ஒரு நல்ல காரணத்தை உண்டாக்கிக் கொடுத்து விட்டாள்.

ஓர் இரவு கமலா வழக்கத்தை விடச் சற்று அதிகமாகவே காரமாகப் பேசிவிட்டாள். ராஜீவுக்கும் அவளுக்கும் இடையே பெரிய தகராறு மூண்டு விட்டது. சண்டைக்குக் காரணம் — அதே பெண்தான். அவளுடன் கள்ள உறவு வைத்துக் கொண்டிருப்பதாகக் கமலா அவன் மீது குற்றம் சாட்டினாள்.

''உங்க அப்பா ஒரு காலத்திலே அப்படிக் கெட்டு கெட்டு அலைஞ்சாருங்கிறதுக்காக எல்லா ஆண்களுமே அப்படித்தான்னு நினைக்கிறியா?'' என்று கத்தினான் ராஜீவ்.

கமலா அத்தோடு அடங்கிவிட்டாள். போய் மௌனமாகப் படுக்கை அறையில் சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள்.

சிறிது நேரம் கழித்து ஆத்திரம் அடங்கவே ராஜீவுக்கு அவள் மேல் அனுதாபம் பிறந்தது. பாவம் கமலா! தாய் தகப்பன், உற்றார், உறவினர் யாருமே இல்லாத இளம் பெண் அவள். அவனைத் தவிர அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டே சண்டையை மறந்து அவளைச் சமாதானப்படுத்த முயன்றான். கமலாவின் கோபம் தணியவில்லை.

கொஞ்சினான், கெஞ்சினான், மன்றாடினான், செய்யாத குற்றத்துக்கு மன்னிப்புக் கேட்டான். ஊஹூம்! கமலா பிடிவாதமாக இருந்தாள். ஆசையோடு வந்த அவனைப் புறக்கணித்தாள். கணவனாக அவன் உரிமை கொண்டாட அனுமதிக்க மறுத்தாள்.

எவ்வளவு நேரம் அவன் இதைச் சகித்துக் கொள்வான்? அவர்களுக்குத் திருமணம் நடந்த பிறகு அன்றிரவுதான் முதன் முறையாக ராஜீவ் முழுமையாகப் பொறுமையை இழந்தான். ''நீயும் ஒரு பெண்ணா? உன்னோடு எவன் குடும்பம் நடத்த முடியும்? செய்யாத தப்புக்காக என்னை தண்டிக்கிறே! சரி, நான் நிரபராதின்னு நீ நம்பப் போறதில்லே. எப்படியும் நான் தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கு. அப்போ உண்மையாகவே அந்தத் தப்பைச் செய்தா என்ன? எப்பவும் வெறுப்போட என்னை ஒதுக்கித் தள்ளுற உன்னைவிட, ஆசையோட என்னை வரவேற்கக் காத்திருக்கிற அவள் கிட்டேயே போறேன்!'' என்று ஆத்திரத்தில் கத்திவிட்டு ராஜீவ் கோபமாக வெளியேறினான். அன்று இரவு முதன் முறையாக கீழ் வீட்டுக்குச் சென்றான். அந்தப் பெண் மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்றாள்.

இரவு முழுவதும் ராஜீவ் கீழ் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

காலையில் நிதானம் திரும்பியது. ''சே! நான் இப்படி நடந்துகொண்டிருக்கக்கூடாது'' என்று நினைத்தான். பொறுமையை இழந்து அவன் செய்த தவறுக்காக உண்மையாகவே வருந்தினான்.

கமலாவிடம் உடனே மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே மாடிக்குச் சென்றான்.

பெட்டி படுக்கையுடன் கமலா ஊருக்குப் புறப்படத் தயாராக இருந்தாள்.

''கமலா, என்ன இது?''

''நான் ஊருக்குப் போறேன். அங்கேயே இருக்கிறதா முடிவு பண்ணிட்டேன். இனி மேல் நான் உங்களோட வாழ விரும்பல்லே'' என்றாள்.

ராஜீவ் அதிர்ந்து போனான். ''கமலா! நேத்து ராத்திரி நடந்ததுக்காக நான் உண்மையா வெட்கப்படறேன். என்னை மன்னிச்சுடு கமலா!''

''நீங்க மன்னிப்புக் கேட்கத் தேவையில்லே. இதுக்கப்புறம் நான் உங்களோடு வாழ முடியாது.''

''கமலா, நானும் மனுஷன்தானே? தப்பு செய்யாத மனுஷன் யாராவது உலகத்திலே இருக்காளா? என்னை அந்தத் தப்பு செய்யத் தூண்டினதே நீதானே!''

''ஓகோ! ரொம்ப நல்லா இருக்கு! தப்பு செய்தது நீங்க. பழியை என் தலையிலே கட்டப் பார்க்கிறீங்களா?''

''நோ, நோ! உன் தலையிலே எந்தப் பழியையும் நான் கட்டப் பார்க்கலே. கமலா, கொஞ்சம் பொறுமையா யோசி. நேத்து நடந்த தப்பை மறந்து மன்னிச்சுடு. இனிமே இந்த மாதிரி நடக்காது!'' என்று ராஜீவ் கெஞ்சினான்.

''இனிமேல் நான் உங்க கூட வாழ்க்கை நடத்த முடியாது. உங்களோட நான் இனிமே வாழ விரும்பலே!''

ராஜீவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''அப்படின்னா எதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே?'' என்றான் ஆவேசத்துடன்.

வெறுப்பு நிறைந்த கனல் கக்கும் பார்வையைக் கமலா அவன் மீது திருப்பினாள். அவள் விழிகளில் தென்பட்ட தீவிர துவேஷம் ராஜீவை அதிரச் செய்தது.

''எதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு கேட்கிறீங்க? அப்பா என்னைக் கட்டாயப்படுத்தினதாலே! எனக்குக் கல்யாணமே வேண்டாம்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அழுதேன், கெஞ்சினேன்! ஆனா அவர் அதைச் சட்டைப்படுத்தவேயில்லே. வலுக்கட்டாயமாக என்னை உங்களுக்குக்

சப் இன்ஸ்பெக்டர்: 27 தடவை சைக்கிள் திருடினதுக்காக ஜெயிலுக்கு வந்தவனை ஜாக்கிரதையா பாத்துக்காம தப்ப விட்டுவிட்டு இப்ப வருத்தப்பட்டு என்னய்யா பிரயோஜனம்?

ஏட்டு: அதுக்காக வருத்தமில்லேசார்... அவன் என் சைக்கிளை வேற திருடிட்டுப் போய்ட்டான்...

-பாபநாசம் நாகராஜன்



கட்டி வைச்சாரு. அதனாலேதான்!'' என்றாள் கமலா உரத்த குரலில்.

உண்மையாகவே ராஜீவுக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ''கணவன் ஒரு பெண்ணோடு ஒரு இரவைக் கழிக்கிறது எந்த மனைவியாலேயும் சகிக்க முடியாதது தான். ஆனால், ஒரேஒரு தரம் கணவன் அப்படி நடந்துக்கிட்டான் என்கிறதுக்காக, அவனை வாழ்நாள் பூராவும் தண்டிக்கிறது சரியா? உலகத்திலே எத்தனை ஆண்கள் அப்படித் தவறு செய்யலை? தவறை ஒத்துக்கிட்டு, மன்னிப்புக் கேட்டுத் திருந்திட்டா, அவங்க மனைவிமார்கள் அதை மன்னிச்சு மறந்துடறதில்லையா? வழக்கமா கணவன் ஊர் சுத்தறவனா இருந்தா, அது வேறே சமாசாரம். பட், நான் அப்படி இருக்கலையே' அது கமலாவுக்கும் தெரியுமே! கல்யாண பந்தத்திலிருந்து விடுபட ஏதாவது சாக்குக் கிடைக்காதான்னு ஏங்கிக்கிட்டு இருந்தா போலிருக்கு. ஒரு நல்ல சாக்குக் கிடைச்சது. அதை முழுமையாப் பயன்படுத்திக்கிட்டா'' என்று எண்ணினான் ராஜீவ்.

கமலா மனம் திருந்தித் திரும்பி வருவாள் என்று எதிர்பார்த்தான். அவள் வரவேயில்லை. அவளுக்கு இரண்டு கடிதங்கள் எழுதினான். அதற்கு அவளிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. ஆபிஸில் லீவ் போட்டு, மொத்தம் நான்கு முறை கிராமத்துக்குப் போனான். ஒரு தடவை கூட கமலா அவனுக்குத் தன் முகத்தைக் காட்டவில்லை. தனது அறைக்குள் சென்று கதவை உள்ளிருந்து தாழ் போட்டுக் கொள்வாள். அவன் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் கதவைத் திறக்க மாட்டாள். ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டாள். அவன் போகும் வரையில் வெளியே வரமாட்டாள்.

நான்காவது முறை அவன் சென்னைக்குத் திரும்பிய சில நாட்களுக்கெல்லாம் கமலாவிடமிருந்து ஒரு வக்கீல் நோட்டீஸ் வந்தது. அவனிடமிருந்து விவாகரத்துக் கோரி கோர்ட்டில் விண்ணப்பித்து இருந்தாள் கமலா.

''உஷா, அதுவரைக்கும் நான் பொறுமையா இருந்தேன். ஆனா, எப்போ விவாகரத்து வேணும்னு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினாளோ, என் மனசு முழுமையா வெறுத்துப் போச்சு. டு ஹெல் வித் ஹர்னு நினைச்சேன். ஆரம்பத்திலிருந்தே ஒரு நாள் கூட அவளோட நான் சந்தோஷமா இருந்ததில்லே. அவளும் என்னைச் சந்தோஷமா இருக்க விட்டதில்லே. சரி, தொலைஞ்சு போகட்டும் சனியன்னு நினைச்சேன். அவ்வளவு தூரத்துக்கு அவ போன பிறகு அதுக்கும் மேலே அவகிட்டே கெஞ்சிக்கிட்டு இருக்க நான் விரும்பலே.''

''அப்புறம் என்ன செஞ்சீங்க?'' என்று கேட்டாள் உஷா.

''நானும் என் வக்கீலைப் பார்த்தேன். கல்யாணம் நடந்து ஒன்னரை வருஷங்கள் தான் ஆகியிருக்கு; மூன்று வருஷங்கள் நிரம்பினால்தான் விவாகரத்து செய்ய கோர்ட்டு அனுமதி வழங்கும்னு வக்கீல் சொன்னார். எது எப்படி இருந்தாலும் நான் டைவோர்ஸை எதிர்த்து வழக்காட விரும்பலே. ஆகவேண்டியதை நீங்களே கவனியுங்கன்னு வக்கீல் கிட்டே சொல்லிட்டேன். எல்லாம் முடியறதுக்கு இன்னும் ஒன்றரை வருஷங்கள் ஆச்சு. அதுவரைக்கும் வக்கீல்கள் மூலமாகத்தான் எங்களுக்குள்ளே தொடர்பு இருந்தது. மறுபடியும் நான் கமலாவைப் பார்க்கவோ, அவகூடப் பேசவோ முயற்சி பண்ணலே. விவாகரத்து தீர்ப்பு அளிக்கப்பட்ட அன்றைக்குக்கூட நான் கோர்ட்டிலே ஆஜர் ஆகலே. ஸோ, ஆச்சலா, நான் கடைசி முறையா அவளைப் பார்த்தது, அன்னிக்குக் காலையிலே ஊருக்கு போகப் போறேன், உங்களோட வாழ விரும்பலேன்னு சொன்னாளே — அன்னைக்குத் தான். ஜீவனாம்சம் கூடவேண்டாம்னு சொல்லிட்டா. அவ அப்பா சொத்து அவளுக்கு இருந்தது. எல்லாம் அந்தத் திமிரு தான்.''

''இப்போ எங்கே இருக்காங்க அவங்க?'' என்று கேட்டாள் உஷா.

''உண்மையாகவே எனக்குத் தெரியாது உஷா. மறுபடியும் நான் அருப்புக்கோட்டை கிராமம் பக்கமே போகலே. அங்கே இருந்த சொத்துக்களை வித்துட்டு ஊரை விட்டே போயிட்டான்னு ஒரு நாள் என் வக்கீல் என்கிட்டே சொன்னார். எந்த ஊருக்குப் போனா, எங்கே இருக்கா, இன்னும் உயிரோட இருக்காளா, இல்லையா — எதுவுமே எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரைக்கும், அது என் வாழ்க்கையிலே முடிஞ்சு போன அத்தியாயம். திரும்பப் புரட்டிப் பார்க்க விரும்பாத அத்தியாயம். நீ கேட்டதுக்காக இவ்வளவு தூரம் அவளைப் பத்திப் பேசினேன். இல்லேன்னா, சாதாரணமா நான் அவளைப் பத்தி நினைக்கிறதுகூட இல்லே.''

''அதுக்கப்புறம்தான் நடிப்புத் துறைக்கு வந்தீங்களா?'' எனக் கேட்டாள் உஷா.

(தொடரும்)

கணவன்: ''உன்னைப் பெண் பார்க்க வந்த போது நீ தலை குனிந்து நளின நடைபோட்டு நாணத்தோடு நடந்து வந்தது ரொம்ப அழகாக இருந்தது...''

மனைவி: ''இருக்காதா!... சினிமா டைரக்டரை வரவழைத்து மூன்றுநாள் கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டேன்!''

- வி. எஸ். ராஜாராஜன்





கராத்தே பயிற்சி - 5


குத்துதல் பயிற்சி

1. கராத்தேயின் தொடக்கத்தில் இயல்பாக நின்று (Natural Stance) கைகளை மடக்கி, முழங்கையைப் பக்கவாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. அதன் பிறகு இரண்டு கைகளையும் முன்புறம் நோக்கிக் குத்துதல் பயிற்சி செய்ய வேண்டும். இந்தப் பயிற்சியில் மூன்று முறைகள் உண்டு. மேல் பாகம் (Upper) நடுப்பாகம், (Middle) கீழ்ப்பாகம், (Lower) குத்துதல்.

ஆரம்பப் பயிற்சியாளர்கள் நடுப்பாகத்தில் குத்தப் பழகுதல் மிக மிக அவசியம். அதில் சரியான முறையைப் படத்திலிருந்து தெரிந்துகொள்ளுங்கள். இப்படிப் பயிற்சி செய்யும் போது பார்வை முன் புறத்திலிருந்து அகலக் கூடாது. தோள் பட்டைகளை ஏற்றி இறக்கக் கூடாது. உடல் பாகத்தை அதிகமாக அசைக்கக் கூடாது. இம்முறையைத் தினமும் சுமார் நூறு முறை செய்தல் நல்லது.

பயிற்சியாளர்: டோனி
பொன்னையா
விளக்கம்: குண்டுமணி
படம்: உத்ரா



நவீனுக்கு நன்றி

பிஸ்கோத்

அன்புள்ள நவீன் ஆசிரியருக்கு.

நீங்கள் முன்பின் பார்த்திராத சரிதா எழுதும் கா. கடிதம். என் தம்பி நவீன் தங்களிடம் டியூஷன் படிப்பது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். அவனுடைய 'பிராக்கிரஸ்' ஏதோ தேய்ந்து ஏதோ ஆன மாதிரி உள்ளது. குறிப்பாகக் கணக்குப் பாடத்தில் அவன் நிலைமை அபாய கட்டத்தில் உள்ளது. எப்படி? நீங்களே பாருங்கள். அவன் போன மாதம் கணக்கில் 81. இந்த மாதம் 18 மார்க். அடுத்த மாதம் 1.8ஆ? நவீனோட படிப்பை நினைத்தால் எனக்குப் பயமாக உள்ளது.

ஏன் இப்படி? டியூஷன்தான் சொல்லித் தருகிறீர்களா? இல்லை பஜனை ஏதாவது பண்ணுகிறீர்களா? இதற்கொன்றும் குறைச்சல் இல்லை. மாதந்தோறும் ஃபீஸ் மட்டும் சட்டிக்காரன் மாதிரி கறந்துவிடுகிறீர்கள். இனிமேலாவது நவீனைப் பிரைவேட்டில் பிரைவேட்டாக 'கோச்-அப்' செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். —சரிதா

குறிப்பு: கா. கடிதம் என்று எழுதியிருப்பதைக் கண்டு கன்னா பின்னாவென்று நினைத்துக் கொள்ள வேண்டாம். கா. கடிதம் என்றால் கால் கடிதம் என்று அர்த்தம்!

● ● ●

மதிப்பிற்குரிய சரிதா அம்மையாருக்கு.

அநேக கோடி நமஸ்காரம்.

தாங்கள் குறிப்பிட்டது போல் நவீன் என்ற மாணவர் என்னிடம்தான் டியூஷன் படிக்கிறார். அவருடைய 'பிராக்கிரஸ்' திருப்தியாக இல்லை என்று கடிதத்தில் அழுதிருந்தீர். (கடிதம் ஈரமாக இருந்தது) அதற்குக் காரணம் நானல்ல. சாட்சாத் தங்கள் தம்பியார்தான் காரணம். கடந்த மாதம் 'அழுகை நடிகர்' உருளைராஜன் நடித்த சினிமாக்கள் இருபத்து மூன்று வெளிவந்தன. உங்கள் தம்பியார் உருளைராஜனின் ரசிகர். மேற்கொண்டு நீங்களே புரிந்துகொள்ளுங்கள்.

நவீன், 18 மார்க் வாங்கியபோது பழிக்கத் தெரிந்த உங்களுக்கு அவர் 81 மார்க் வாங்கியபோது என்னைப் பாராட்டத் தெரியாதது கண்டு வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன், வருத்தப்படுகிறேன்

தினேஷ் (23 வயது)

குறிப்பு: கா. கடிதம் என்பதற்குக் கால் கடிதம் என்றுதான் நினைத்தேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அதற்கு வேறு அர்த்தம்கூட இருக்கும்போலிருக்கிறதே?

பின்குறிப்பு: நவீனுடைய வீட்டுக் கணக்கை அவனே போடட்டும். ஏனென்றால் அவன் போட்டால் ஒன்றிரண்டு கணக்காவது சரியாக உள்ளது.

● ● ●

ஹூ ஹெல்!

சரிதா என்றால் உங்களுக்கு மடிசார் கட்டிய மாமி என்று நினைப்பா? கோ-கோ கண்ணாடியும் பெல்ஸுமாகப் பட்டாம்பூச்சி போல் திரிகிற நான் உங்களின் சோடா பாட்டில் கண்ணாடிக்கு அம்மா மாதிரி தெரிகிறேனா? நீரும் நினைப்பும்!

முந்தைய கடிதத்தில் நன்றாகச் சரடு விட்டிருந்தீர். நீங்களென்ன கஜக்கோல் பாண்டியனா? உருளைராஜனாம். அவர் ரசிகன் என் தம்பி நவீனாம்! பொய்யைச் சொன்னதும் தான் சொன்னீர். கொஞ்சம் பொருத்தமாக திருத்திச் சொல்லக்கூடாதா? உருளைராஜன் என்ற பேரில் தமிழ் நாட்டிலேயே யாரும் கிடையாது. முழுச் சோற்றைப் பூசணிக்காயில் மறைக்கப் பார்க்கிறீரே?

என் தம்பியை விசாரித்தேன். 'அக்கா, அந்த மாமா சரியாகப் பாடம் சொல்லித் தருவதில்லை. எப்போதும் எதையாவது படித்துக்கொண்டே இருக்கிறார்' என்றான். டியூஷன் நேரத்தில் கதைப் புத்தகம் படித்தால் மாணவர்கள் உருப்பட்ட மாதிரிதான். இந்த மாதம் ஃபீஸ் கொடுப்பதை நிறுத்திவிடலாமா என்று யோசிக்கிறேன்.

கோபத்துடன், சரிதா.

குறிப்பு: உமக்குக் கடிதம் எழுதுவதே ஒரு தண்டம். இதில் ஒரு குறிப்பு ஒரு கேடா?

பின்குறிப்பு: நீங்கள் கால் கடிதம் என்பதற்குப் பதிலாக வேறு மாதிரியாக நினைத்தாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. காலில் ஏதோ கட்டுப் போட்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். அடி பட்டு விட்டதா?

● ● ●

ஹலோ சரி!

உங்களைப் பார்க்காததால் ரொம்பவும் நல்லவர் மாதிரி தெரிகிறது. தடியேன் செய்த பிழையைத் தயவு செய்து பொறுக்கவும். நவீன் உருளைராஜனின் ரசிகர் என்று பித்துத்தென்று நான் உளறியது உண்மைதான். என் குற்றத்தைப் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் டியூஷனில் நீங்கள் நினைப்பது போல் கதைப் புத்தகங்கள் படிக்கவில்லை. அவையெல்லாம் 'டிபார்ட்மெண்டல் டெஸ்ட்' புத்தகங்கள். என் தலையெழுத்து. 'டிபார்ட்மெண்டல் டெஸ்ட்' பாஸ் செய்தால்தான் பிரமோஷனாம்!

என் ஆபீஸ் மானேஜர் இருக்கிறாரே, அவர் பெயருக்கேற்ற மாதிரி சரியான ராவணன். அவருக்கு நான் ராமன் மாதிரி! என்னைப் பார்த்தாலே அவர் கிரிவிளரிமலையாக ஆகிவிடுவார். டி. டெஸ்ட்டில் பாஸ் பண்ணிவிட்டால் எங்கே நான் போட்டியாக

அவருக்கு வந்துவிடுவேனே என்று கோபம், பயம். அதனால் லீவ் கொடுக்காமல் ஒவ்வொரு தடவையும் டெஸ்ட் எழுத விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் நவீன விக்கிரமாதித்தன் போல் மனம் தளராமல் படித்துக்கொண்டே இருக்கிறேன்.

நொடிந்துபோன திணேஷ்.

குறிப்பு: பெருச்சாளி கடித்துவிட்டது. அதனால் காலில் கட்டுப் போட்டுள்ளேன்.

பின்குறிப்பு: டியூஷன் ஃபீஸ் கொடுப்பது சம்பந்தமாக மறு பரிசீலனை செய்யவும்.

• • •

கப்ஸா திலகமே!

பொய் சொல்வதில் யாரும் உங்களை மிஞ்ச முடியாது. 'மிஸ்டர் பொய்' என்றே உங்களுக்கு ஒரு பட்டம் தரலாம். டெஸ்ட்டாம் மாமனாராம்... இராவணனாம்! எங்கே அளக்கிறீர்?

ட்யூஷன் நடத்தும் உமக்கும் ஆபீஸுக்கும் என்ன சம்பந்தம்?

நறநறநற சரிதா.

• • •

டியர் சரிதா!

சந்தேகம் என்பது உன்னுடன் பிறந்ததா? பெற்றவர்கள் பேச்சைக் கேட்காததால் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டேன். செலவுக்குப் பணம் வேண்டுமே? அதனால் 'கோவிந்தா அண்ட் கோவிந்தாவில்' வேலைக்குச் சேர்ந்தேன். தண்டச் செலவுக்குப் பணம் வேண்டுமே? அதனால் டியூஷன் சொல்லிக் கொடுக்கிறேன்.

திணேஷ்.

குறிப்பு: காதலி காதலன் மீது சந்தேகப் படுவதைப் போல் அல்லவா நீ என் மீது சந்தேகப் படுகிறாய்?

• • •

டியர் திணேஷ்

ஓ...ஐ யெம் வெரி சாரி. தயவு செய்து என்னை மன்னியுங்கள்,

நீங்கள் சொன்ன மாதிரி 'கோ அண்ட் கோ' வுக்குப் போன் செய்து 'திணேஷ் என்பவர் உங்கள் கம்பெனியில்தான் வேலை செய்கிறாரா?' என்று கேட்டேன். அதற்கு 'திணேஷ் என்பவர் எங்கள் கம்பெனியில்தான் இருக்கிறார். ஆனால் அவர் வேலை செய்கிறாரா இல்லையா என்று எங்களுக்குத் தெரியாது' என்று பதில் சொன்னார்கள்.

என்ன நீங்கள் 'கோ அண்ட் கோ'வில் தான் வேலை பார்க்கிறீர்களா? அப்படியென்றால் 'விட்டது தொல்லை' என்று ஜாலியாக இருங்கள். ஏன் தெரியுமா? என் அண்ணன் இராவணன்தான் அந்தக் கம்பெனி மானேஜராக்கும்! அவரா உங்களிடம் தாறுமாறாக நடந்து கொள்கிறார்? கவலையை விடுங்கள். இனி அண்ணியிடம் சொல்லி அவரைக் கவனித்துக் கொள்ளச் சொல்கிறேன். பெட்டிப் பாம்பாக அவர் அடங்கி விடுவார். எனவே தைரியமாகப் பரீட்சைக்குப் படியுங்கள்.

ஆமாம், ஒரே மகனை உங்களைப் பெற்றவர்களே துரத்திவிடும்படி அப்படி என்ன தப்பு செய்தீர்?

சரிதா.

குறிப்பு: இத்துடன் ரூபாய் ஆயிரத்துக்கான செக் இணைத்துள்ளேன். செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்.

• • •

கண்ணே! மூக்கே!

இராவணன் உன் அண்ணனா? நான் நம்ப மாட்டேன். இராவணன் உன் அண்ணனென்றால் உன் பெயர் சூர்ப்பனகை என்றல்லவா இருக்க வேண்டும்?

'பெற்றவர் துரத்தும்படி என்ன தப்பு செய்தீர்?' என்று கேட்டிருந்தாய். எனக்கு நாலரைக் கழுதை வயதாகி விட்டதாம்,



மாதாந்திரப் பரிசுத்திட்டம்
(செப்டம்பர்)

சென்ற இதழ் தொடங்கி நாலு வாரங்களுக்கு ஃபோட்டோ குவிஸ் இடம் பெறுகிறது. நாலு குவிஸ்களையும் கத்தரித்து எடுத்து விடையை அதிலேயே எழுதி நான்கையும் ஒன்றாக இணைத்து ஓர் உறையிலிட்டு, 'கல்கி மாதாந்திர பரிசுத் திட்டம் தபால் பெட்டி எண் 3159 சென்னை-32' என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

நான்கு குவிஸ்களிலும் வெற்றி பெறுபவருக்குப் பரிசு ரூ. 1000/- ஒன்றுக்கு மேற்பட்டவர் நான்கு விடைகளையும் சரியாக எழுதினால் பரிசு பெறுபவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். நாலு விடைகளையும் சரியாக எழுதிய மற்றவருக்கு நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதக் கல்கி இதழ்கள் இலவசம்.

**முடிவு தேதி
அக்டோபர் 22**

இந்த வாரக் குவிஸ்:

படத்தில் எம். ஜி. ஆருக்கு அருகில் இருப்பவர் ஒளியால் மறைக்கப்பட்டுள்ளார். அந்த இடத்தில் அவர் பெயரையும் திரைப்படத்தின் பெயரையும் எழுதவும்.



என் பெயர்..

விலாசம் ....

....

....

கையெழுத்து..

(ஒரு கழுதை என்றும் எத்தனை வயது?) என் பெற்றோருக்கு வீட்டில் 'ஸ்விட்ச்' போட்டு விளக்கேற்ற ஒரு பெண் வேண்டுமாம். அதனால் கல்யாணம் செய்துகொள்ளும்படி பெற்றோர்கள் என்னை வற்புறுத்தினார்கள். இன்னும் சிறிது நாளைக்கு சந்தோஷமாக இருக்கலாமே, அதற்குள் நம் சுதந்திரம் பறி போக வேண்டுமா என்று நினைத்துக் கல்யாணத்துக்கு மறுத்தேன். இதனால் கோபம் கொண்ட என் அப்பா 'இனி நீ *ஒரு கழுதையோடு வந்தால்தான் வீட்டுக்குள் விடுவேன்' என்று கழுத்தைப் பிடிக்காமல் வெளியே தள்ளிவிட்டார்.

என்னவோ தெரியவில்லை. சில தினங்களாக உன் அண்ணன் என்னைப் பார்த்து சலாம் அடிக்கிறார். அடிக்கடி சார்ட்டர் 'போஸ்' தருகிறார். பயமாக இருக்கிறது.

பரீட்சை நன்றாக எழுதியிருக்கிறேன்.

தினேஷ்

குறிப்பு: *பெண்.

பின் குறிப்பு: பணம் அனுப்பியதற்கு நன்றி. தொடரட்டும் உன் திருப்பணி.

● ● ●

டியர் தினேஷ்,

உங்கள் சோகக் கதையைக் கேட்டதும் நான் கிளிசரின் போடாமலே அழுதுவிட்டேன். விக்...விக்....விக்.... என் காதலருக்கு இவ்வளவு சோதனையா?

என் அண்ணன் உங்களைப் பார்த்துச் சலாம் போடுவதாக எழுதியிருந்தீர்கள். பின்னே, என் அண்ணியை என்னவென்று நினைத்தீர்கள்? அதுவுமல்லாமல் எந்த மைத்துனருக்கு மாப்பிள்ளையைக் கண்டு பயமில்லாமல் இருக்கும்?

சரிதா

குறிப்பு: எனக்கு ஒரு பாடத்தில் சந்தேகம். சொல்லித் தருகிறீர்களா?

● ● ●

டார்லிங் சரிதா!

உண்மையாகவா? என்னுடன் வீட்டுக்கு வரத் தயாரா? அப்புறமென்ன, விட்டது பிரச்னை. இப்போதே நேராக வீட்டுக்கு நடந்து போகிறேன். அப்புறம் நல்ல நாள் பார்த்து, பெற்றோருடன் உன் வீட்டுக்கு வருகிறேன். என்ன சரிதா, சரிதானே?


தினேஷ்

குறிப்பு: எந்தப் பாடத்தில் சந்தேகம் இருந்தாலும் உனக்கு — தனியாக — சொல்லித் தருகிறேன்.

பின் குறிப்பு: இனி உன் தம்பியை நல்ல ஆசிரியராகப் பார்த்துச் சேர்த்து விடவும்.

சட்டமன்றத்தில் புது முகங்கள்









மேலிருந்து கீழாக:

1. பி. எம். நரசிம்மன் 2. ஏ. பெரியசாமி
3. எம். சின்னசாமி 4. செ. குப்புசாமி

ஜனநாயகத்தை யாரும் மறைந்திருந்து கட்டிக் கொன்றுவிட முடியாது. ஒரு தேசத்தில் அது மடிந்து விட்டதென்றால் நீண்டகாலமாகவே அந்நாட்டு மக்கள் அதனைப் போஷிக்காமல் அலட்சியமும் மெத்தனமும் காட்டி வந்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

-ராபர்ட் மேனார்ட் ஹட்சின்ஸ்

பி. எம். நரசிம்மன்
(அ.இ.அ.தி.மு.க.)
பள்ளிப்பட்டுத் தொகுதி

பி.ஏ.பி.எல். பட்டங்களுக்குச் சொந்தக்காரர். நாடகாசிரியர், ஸ்திரீபார்ட் நடிகர், நாடக இயக்குனர். இவ்வளவும் ஒன்றுசேர இருப்பவர் நரசிம்மன். எம். ஜி. ஆர். கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்ட அன்று இவர் போராட்டம் நடத்தினார். அதற்குப் பரிசாக சென்னை மத்தியசிறைச்சாலை இவரை வரவேற்றது.

ஏ. பெரியசாமி
(அ.இ.அ.தி.மு.க.)
தாராபுரம் தொகுதி

பார்ப்பவர்கள் பயப்படும் விதமாக ஜல்லிக்கட்டு விளையாட்டில் ஈடுபடும் இளைஞர் பெரியசாமி, பெரிய ஆசாமி தான்!

''நாடோடி மன்னன் படம் பார்த்தது முதல் புரட்சித் தலைவர் மீது எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டது. தாராபுரம் ரொம்பப் பிற்பட்ட பகுதி. பல பிரச்னைகள் உடனே தீர்க்கப்பட வேண்டியுள்ளன. என்று பெரிய பட்டியல் போடும் இவர் கபடி விளையாட்டிலும் சூரர்!

எம். சின்னசாமி (அ.இ.அ.தி.மு.க.)
கரூர் தொகுதி

பி.எஸ்ஸி., பி.எல். பட்டதாரி. லயோலா கல்லூரி மாணவனாக இருந்தபோது தமிழ்ப் பேரவைச் செயலாளராக இருந்தார். 1965ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு மாதம் சிறை சென்றார். கரூரில் வக்கீலாக 1972ம் ஆண்டு முதல் தொழில் நடத்துகிறார்.

செ. குப்புசாமி (அ.இ.அ.தி.மு.க.)
வந்தவாசி தொகுதி

முன்பு தி.மு.க.வில் இருந்தபோது 1952ல் தொடங்கி அண்ணா முதலமைச்சர் ஆகும் வரை நடைபெற்ற அத்தனை போராட்டங்களிலும் பங்கு கொண்டிருக்கிறார். தம் தொகுதியின் பிரச்னைகளை நன்கு உணர்ந்துள்ள குப்புசாமி சிறந்த விளையாட்டு வீரரும் கூட.

என். விஜயபாலன்
(அ.இ.அ.தி.மு.க.)
பூம்புகார் தொகுதி

ஒரு நல்ல எழுத்தாளர். இரத்தினச் சுருக்கமான உரையாடல்; சிக்கென்ற எழுத்து நடை. அண்ணா அவர்களின் பேச்சால் ஈர்க்கப்பட்டு அரசியலில் புகுந்து சிறந்த பேச்சாளராகவும் விளங்குகிறார்.

ச. பாலகிருஷ்ணன்
(அ.இ.அ.தி.மு.க.)
மொடக்குறிச்சி தொகுதி

புகுமுக வகுப்பு வரை படித்த இவருக்குத் தொழில் விவசாயம். ''என் தொகுதியில் கல்லூரி ஒன்று அமைக்கவும், சர்க்கரை ஆலை ஒன்று தொடங்கவும் பாடுபடுவேன்'' என்று நம்பிக்கையோடு கூறுகிறார் இந்த இளைஞர்.

பி.ஜி. நாராயணன்
(அ.இ.அ.தி.மு.க.)
பவானி தொகுதி



சிறந்த வழக்கறிஞரான இவரது குடும்பத் தொழில் விவசாயம். ''என் தொகுதியில் ஒரு சிவில் கோர்ட், கல்லூரி, பாசன வசதியைப் பெருக்க அணைக்கட்டு எல்லாம் என் முயற்சியால் உருவாகப் போகின்றன'' என்று உறுதியாகச் சொல்கிறார்.




கே. ஜி. கிருஷ்ணசாமி
(அ.இ.அ.தி.மு.க.)
காங்கயம் தொகுதி

காங்கயத்தில் 'கே. ஜி. கே' என்றால் தெரியாதவர் இல்லை. கே. ஜி. கிருஷ்ணசாமிரொம்பவும் பாப்புலர். இவரது சகோதரர் பழனிசாமி கவுண்டர் இருமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். விவசாயக்குடும்பம். ''விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதே என் முதல் கடமை'' என்கிறார். பேட்டி: ''சிக்கி''





- என். விஜயபாலன்
- ச. பாலகிருஷ்ணன்
- பி.ஜி. நாராயணன்
- கே. ஜி. கிருஷ்ணசாமி



தன் மகனுக்கு முடிசூட்டிப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டான் தசரதன். அது நிறைவேறிற்றா?

அயோத்தி நகரத்துப் பஞ்சணையில்தான் தூங்கப் போகிறோம் என்று கனவு கண்டாள், சீதா. அது நிறைவேறிற்றா?

சீதையை மட்டுமல்ல, ரகுவம்சத்தையே அழித்துவிடுவது போல் கொதித்து நின்றான் இலங்கை வேந்தன். அது நிறைவேறிற்றா?

மாலை சூடும்போது இந்த வாழ்வு சாஸ்வதம் என்றுதான் கருதினாள் கண்ணகி. அது நிறைவேறிற்றா?

கோவலனைக் கணவனாகப் பெற்று, ஒரு குழந்தையையும் ஈன்று அந்த வாழ்க்கையை நிரந்தரமாக்க விரும்பினாள் மாதவி.

தான் கடல் கடந்து சென்று கண்ட சாம்ராஜ்யம் காருள்ளளவும், கடல் நீருள்ளளவும் தன் சந்ததிகளுக்கே சொந்தம் என்றுகருதினான் இராஜேந்திர சோழன்—

சரித்திரம், புராணம், இதிகாசங்களைப் புரட்டினால் ஒவ்வொருவருடைய ஆசையும் இன்னும் பாக்கி நிற்கின்றது.

கார்காலத்தைத் தவிர மற்ற காலங்களில் பாம்புக்குக்கூட நல்ல தீனி கிடைப்பதில்லை. சிங்கங்கள் கூட பசியோடு அலைந்த காலங்கள் எவ்வளவோ?

நிறைவேறியிருக்க வேண்டிய ஹிட்லரின் ஆசையேகூட நிறைவேறவில்லையே! கூடி விருந்த குற்றத்துக்காக ஜப்பானுமல்லவா ஒரு பெரும் மரணத்தைக் கண்டது!

காந்தி விரும்பிய ராமராஜ்யத்தை காந்தியும் காணவில்லை; நாமும் காணவில்லையே!

ஆம், எல்லாக் காடுகளிலுமே கானல் நீர் காணப்படுகிறது!

எல்லாக் குளங்களையுமே கோடைக்காலம் பாதித்திருக்கிறது!

எல்லா மரங்களுமே எப்போதும் பசுமையாக இருந்ததில்லை.

உயிருக்குயிராகக் கணவனை நேசித்த கென்னடியின் மனைவியே மற்றொருவனை மணந்துகொண்டாளே!

வின்ஸர் கோமகனுக்கு காதல் நிறைவேறிற்று; மணிமுடி கிடைக்கவில்லையே?

எந்த மனிதனின் வாழ்க்கையில் துண்டு விழாத பட்ஜெட் தயாராகி இருக்கிறது?

இந்திய அரசாங்கத்தை ஒவ்வொரு மனிதனும் மிஞ்சி இருக்கிறான்.

'அப்படி நினைத்தேன்; இப்படி ஆகிவிட்டது' என்று சொல்லாதது கற்சிலை மட்டுமே!

மனைவி அமைவதில், வீடு அமைவதில், நலம் அமைவதில், பதவி அமைவதில், நண்பர்கள் அமைவதில் மனக் குறை இருந்தே தீருகிறது.

ஒரு ஆசையும் இல்லாதவனுக்கு மட்டுமே நிறைவேறாத ஆசை என்பது கிடையாது.

இந்திய ஜன சமுத்திரத்தில் நானும் ஒருவன்தான்! மற்றவர்களை விட நிறைவேறாத ஆசைகள் என் வாழ்வில்தான் அதிகம் என்று நானும் கருதுகிறேன். சில விஷயங்களைச் சொல்லி இருக்கிறேன்; சில விஷயங்களில் மௌனமாக இருந்திருக்கிறேன்.

எனது சுயசரிதம் வனவாசம், பெருமளவு விற்பனையாகியிருக்கிறது. புத்தகம் படிப்போர் அனைவருமே அதைப் படித்திருக்கிறார்கள். எல்லாவற்றையுமே மனம் திறந்து சொல்லிவிட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

உண்மை அதுவல்ல. நானும் வெட்கப்பட்டு மறைத்துக் கொண்ட விஷயங்கள் உண்டு.

காந்திஜியின் சத்திய சோதனை முதற் பாகமே, உண்மை சொல்லும் ஆற்றலை எனக்குத் தந்தது. அதிலும் நான் மன நிறைவு பெறவில்லை.

இப்போது ஒரு துணிச்சல்! வனவாசத்தில் விட்டுப் போனவற்றை ஒரு முன்னுரையாகக் கொடுத்துவிட்டு, எனது சுயசரிதத்தின் இரண்டாம் பாகத்தைத் தொடங்கினால் என்ன?

கல்கி ஆசிரியர் என்னிடம் கேட்டார். எழுத வேண்டும் போல் என் கையும் அரிக்கிறது.

நிச்சயமாக என் வாழ்க்கை பரபரப்பான ஒரு நாவல்தான்! மனம் திறந்து நான் பேச ஆரம்பித்தால், அதை ஆராய்ச்சி செய்தே பலர் டாக்டர்பட்டம் பெற முடியும்.

என் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்கள் பலர் இறந்துவிட்டார்கள். இருப்பவர்கள் வருத்தப்படக் கூடும். ஆனால் அவர்கள் பெயரைச் சொல்லி நான் துன்புறுத்தப் போவதில்லை.

1961 ஏப்ரல் ஒன்பதாம் தேதியோடு வனவாசம் முடிகிறது. ஏப்ரல் பத்தாம் தேதியில் இருந்து இரண்டாம் பாகம் 'மனவாசம்' ஆரம்பமாகிறது.

'கல்கி'யில் அது எப்போது ஆரம்பமாகிறது என்பதைப் பிறகு அறிவிப்பேன்.

அதற்கிடையில் பல குறிப்புக்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். இதில் அரசியல் அத்தியாயம் குறைவாகவே இருக்கும். ஆசாபாசங்கள், வாழ்க்கை நாடகங்கள் அதிகமாக இருக்கும். எனது நிறைவேறாத ஆசைகளுக்கு இது ஒரு காவியம்.

சிலருக்கு நன்றி தெரிவிப்பேன்; சிலரது குணங்களை அறிமுகப்படுத்துவேன்; இழந்து போன காலங்களை எண்ணிப் பார்ப்பேன்!

வாழ்க்கையைப் பற்றி முடிவாகச் சிந்திக்கும் ஒரு மனிதன், மிக முக்கியமாகச் சிந்திப்பது தனது நிறைவேறாத ஆசைகளைப் பற்றி மட்டுமேயல்லவா!

பலமுறை தொடங்கி விட்டுப்போன 'மனவாசம்' 'கல்கி'யில் தொடங்கி முடியும்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran



ஹை பவர் ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவை—
அது வெட்டவெளிச்சம்.

உங்கள் மகன் துணிகளை அழுக்காக்கிக் கொள்வதில்
பலே சூரனோ? அப்படியானால் உங்களுக்குத் தேவை :
அழுக்கை அகற்றிட ஒரு பலே சூரன்; ஹை பவர்
ஸர்ஃப்—வல்லவனுக்கு வல்லவன்.

அதிக வலுவுடைய பொருள்கள் அடங்கியது ஹை பவர்
ஸர்ஃப், அதிக சலவை சக்தி: தூசி, அழுக்கு எதனையும்
சுவடு தெரியாமல் அகற்றிடும். படு அழுக்கான
துணிகளையும் கூட பளிச்சிட வைக்கும்.
வர்ணத் துணிகளுக்கும் உகந்தது ஸர்ஃப்—தூய்மை
ஒளி மிளிர வைக்கிறது.

ஹை பவர் ஸர்ஃப்—குடும்பத்தில் உள்ள
அனைவரின் துணிகளுக்கும் அதிக வெண்மை
அதிக ஒளி, கேட்பானேன், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப்
உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.



வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப்
உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-SU-220-2012 TM

REGISTERED No. M. 4352
Registered as a Newspaper in Sri Lanka



